REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ThinakaranLk / ThinakaranLK

2023 நவம்பர் 23 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 91 இல. 278 | Thursday 23, November, 2023 | 20 பக்கங்கள் | 50/-



MOBILE
UNLIMITED MAX
ரூ.288 (7 நாட்களுக்கு)
ரூ.988 (30 நாட்களுக்கு)
7GB Anytime Data
எந்த வலையமைப்பிற்கும் UNLIMITED Calls மற்றும் 1000 SMS
30GB Anytime Data


## 13 இலட்சத்து 77 ஆயிரம் வறிய குடும்பங்களுக்கான

# அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு இன்று

### பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும்



**செப்டெம்பர் மாதத்துக்கான கொடுப்பனவுகளுக்காக 857 கோடியே 10 இலட்சம் ரூபா திறைசேரியினால் ஒதுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்

செப்டெம்பர் மற்றும் அக்டோபர் மாதத்திற்கான அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அஸ்வெசும செப்டெம்பர் மாதத்திற்கான கொடுப்பனவுகள் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் இன்று முதல் வைப்பிலிடப்படவுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் சபையில் தெரிவித்தார். இக்கொடுப்பனவுகள் சுமார், 13 இலட்சத்து 77 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இதற்கிணங்க 8571 மில்லியன் ரூபா நிதி வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, அஸ்வெசும தொடர்பான மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகள் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான கொடுப்பனவு ஜூலை மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, இது தொடர்பான கருத்துக்களை முன் வைத்தார். இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

# ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் அடுத்த வருடத்தில்

### பாராளுமன்றில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்ற தேர்தலும் அடுத்த வருடத்தில் நடத்தப்படும் என்றும் அதற்கடுத்த வருடத்தில் மாகாண சபை தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாம், நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்தியுள்ளோம். அதனால் தேர்தலுக்குப் பயந்தவர்கள் என்று எம்மை எவரும் கூற முடியாது.

அந்த வகையில் அடுத்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல்

06

# அதிவேக நெடுஞ்சாலைகள் எதனையும் குத்தகைக்கு விடும் தீர்மானம் இல்லை

### எந்தவொரு ஊழியரின் தொழிலுக்கும் பாதிப்பு ஏற்படாது

லோரன்ஸ் செல்வநாயகம்



அதிவேக நெடுஞ்சாலைகளை விற்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ தீர்மானிக்கப்படவில்லை என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பணிபுரியும் எந்த ஒரு ஊழியரினதும் தொழிலுக்கும் பாதிப்பு ஏற்படாது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

06

# அரசியல் தலையீடின்றி கிரிக்கெட்டை பாதுகாப்பது அனைவரதும் பொறுப்பு

### ஜனாதிபதி பாராளுமன்றத்தில் தெரிவிப்பு

இரு குழுக்களுக்கிடையிலான மோதல் காரணமாக நாட்டின் கிரிக்கெட்துறை சரிவை சந்தித்துள்ளது. எனவே, அரசியல் தலையீடு இல்லாமல் கிரிக்கெட்டை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவரையும் சார்ந்துள்ளதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கிரிக்கெட் தொடர்பிலான பிரச்சினையில் எவரையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் தனக்கு இல்லை. சித்ரசிறி அறிக்கைக்கமைய புதிய கிரிக்கெட் சட்டமொன்றை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை, பல தடவைகள், தாம் விளக்கியிருந்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவுத்திட்ட

06

# பொருளாதார நெருக்கடிக்கு குறுகியகால தீர்வு இல்லை

### நீண்டகால இலக்குகளுடனான வேலைத்திட்டமே தீர்வு



நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு குறுகிய காலத் தீர்வுகள் இல்லையென்பதால் நீண்ட கால இலக்குகளைக் கொண்ட வேலைத்திட்டங்களுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டியது அவசியமென, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

இலங்கையை பொதுநல நாடாக கொண்டு செல்ல வேண்டுமெனில் வரி செலுத்தாமல்

06

# வடக்கு-கிழக்கு கடற்றொழில் அபிவிருத்திக்கு ஜப்பான் உதவி

### அமைச்சர் டக்ளஸின் முயற்சிக்கு பலன்



வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடற்றொழில்சார் அபிவிருத்திகளுக்காக ஜப்பான் அரசாங்கம் 03 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்கியுள்ளதுடன் அது தொடர்பான ஒப்பந்தம் நேற்று (22) நிதி அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதேகி (Misukoshi Hiddheki) நிதி அமைச்சின்

06

# 04 வயது நிரம்பிய குழந்தைகளுக்கு முன்பள்ளிக் கல்வி கட்டாயம்

### சபையில் கல்வி அமைச்சர் தெரிவிப்பு



**GCE O/L பரீட்சை 10 ஆம் தரத்தில் நடத்தவும் திட்டம்**

லோரன்ஸ் செல்வநாயகம்

பதினோராம் தரத்தில் தற்போது நடத்தப்படும் கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சையை,இனிவரும் காலங்களில் 10ஆம் தரத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக

06

### ஆசிரியர் இடமாற்றத்தின் போது

# தொழிற்சங்க உறுப்பினரல்லாத ஆசிரியர்களுக்கு அநீதி இழைப்பு



**நிவர்த்திக்க வேண்டும் என்கிறார் அமைச்சர் பிரசன்ன**

லோரன்ஸ் செல்வநாயகம்

ஆசிரிய இடமாற்றத்தின் போது தொழிற்சங்க உறுப்பினர்கள் அல்லாத ஆசிரியர்கள் பாரிய அநீதியை எதிர்கொள்ள நேர்வதாக, ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

06

# சனத் நிஷாந்த எம்.பிக்கு இரு வாரங்களுக்கு தடைவிதிப்பு

### சபாநாயகர் நேற்று சபையில் அறிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, இரண்டு வாரங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சபையில்

06

# லேக்ஹவுஸ் அக்கடமியின் சான்றிதழ் வழங்கும் விழா இன்று

### பிரதம அதிதியாக அமைச்சர் பந்துல

LAKE HOUSE

இலங்கை ஊடகத்துறையில் தனித்துவமான பங்களிப்பை வழங்கிய இலங்கையின் லேக்ஹவுஸ் நிறுவன ஊடக கற்கை நிலையத்தால் நடத்தப்படும் ஊடக தொடர்பாடல் மற்றும் டிஜிட்டல் ஊடக தொடர்பாடல் டிப்ளோமா கற்கைநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது. இந்நிகழ்வு

06

# இளைஞனின் மரணத்துக்கு நீதி கட்டாயம் வேண்டும்

### சபையில் சித்தார்த்தன் எம்.பி வலியுறுத்து



பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த இளைஞனின் மரணத்துக்கு நீதி வேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (21) பேசிய அவர், வரவு செலவுத் திட்டம் சம்பந்தமான சில கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பு, இன்று வட்டுக்கோட்டை பகுதியிலே நடந்திருக்கக் கூடிய இறப்பு தொடர்பான ஒரு விடயத்தை

06

# முடிந்தால் தேர்தலை நடத்துங்கள் –சஜித்

### சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சவால்



நாட்டு மக்களின் சர்வஜன வாக்குரிமை 225 பேரின் வாக்குகளை விட மதிப்புமிக்கது என்றும், ஜனாதிபதியின் செல்வாக்கை பயன்படுத்தி தேர்தலை ஒத்திவைத்த போதிலும், 220 இலட்சம் பேரினதும் ஆணை கிடைக்க வேண்டும். இந்த விருப்பம் ஜனாதிபதிக்கு

06

### தரம் 01 முதல் 05 வரையிலான

# கட்டணம் செலுத்தும் பிரத்தியேக வகுப்புக்களுக்கு ஊவாவில் தடை

ஊவா சுழற்சி நிருபர்



தரம் 01 முதல் 05 வரையான மாணவர்களிடமிருந்து கட்டணம் அறவிட்டு நடத்தப்படும் மேலதிக வகுப்புக்களுக்கு, ஊவா மாகாணத்தில் தடை

06

# 3,190 கி.மீ தூரத்தை நடந்து உலக சாதனை: பாலகுமாருக்கு வாழ்த்து



### கொழும்பில் மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் வரவேற்பு

தெஹிவளை, கல்கிஸ்ச விசேட நிருபர்

அகுரஸ்ஸ, மாத்தறை, பரதுவ தேயிலை தோட்டத்தில் தோட்ட தொழிலாளியாகப் பணியாற்றும் பாலகுமார்

06

# துவாரகாவின் காணொளி: பாதுகாப்பு அமைச்சு கவனம்

MINISTRY OF DEFENCE SRI LANKA

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகள் துவாரகாவின் காணொளி தயாரிப்பு தொடர்பில், தமக்கு அறிவிக்கப்படவில்லையென்றும் இருப்பினும் சமூக வலைத்தளங்களை கண்காணித்து வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகள் துவாரகா, இன்னும் உயிருடன் இருப்பதாக கூறப்படுகின்றது. அவர் உயிருடன் இருப்பதைக் குறிக்கும்

06

### சுங்க அதிகாரிகள், போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிரடி

# கட்டுநாயக்காவில் 27 கோடி ரூபா ஹெரோயினுடன் மூவர் கைது



சுங்க அதிகாரிகள் 27 கோடி ரூபா பெறுமதியான பத்து கிலோ ஹெரோயினுடன் மூவரை கைது செய்துள்ளனர்.

இலங்கை சுங்க போதைப் பொருள்கட்டுப்பாட்டுப்பிரிவு மற்றும் கட்டுநாயக்க விமான நிலைய சரக்கு முனையத்தில் இவை, கைப்பற்றப்பட்டன.

பாகிஸ்தானின் லாகூரிலிருந்து எட்டு பொதிகளில் அடைக்கப்பட்டு இவை அனுப்பப்பட்டிருந்ததாக சுங்கப் பேச்சாளர் தெரிவித்தார். ஹெரோயின் போதைப்பொருள், ஓமான்

06

# நகர்வலம்



### கிரிக்கெட்டுக்கு ஒன்றிணைவது போன்று

# இனப்பிரச்சினை தீர்வுக்கும் ஒன்றிணைய வேண்டும்

### குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையே தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைக்கு மூல காரணமாகும் என்பதை எவரும் மறுக்க முடியாது என பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் சபையில் தெரிவித்தார்.

கிரிக்கெட்டுக்காக ஒன்றுபட்டதைப் போன்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் ஆளும், எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

13 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதியுடன் பல கட்ட பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் பேச்சுவார்த்தையின் அடுத்த கட்டம் என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ள பின்னணியில் 2024 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டம் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. வரி அடையாள அட்டையை அமுல்படுத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. ஆனால் அது வெற்றிகரமாக செயற்படுத்தப்பட வேண்டும். வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள பாலியாறு திட்டம் கவனத்தை ஈர்த்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்குமாறு கடந்த ஆறு தசாப்தகாலமாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. பாலியாறு திட்டத்தினால் சுமார் 6 இலட்சத்து 50 ஆயிரம் பேர் பயனடைவார்கள். அத்துடன் 41.2 எம்.சி.குடி நீருக்காகவும், 4.7 எம்.சி. விவசாய நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்த முடியும். இந்த திட்டத்துக்காக ஆரம்பக்கட்டமாக 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்திற்கான நதி திட்டத்துக்கு 2000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

ஆனால் அந்த திட்டம் செயற்படுத்தப்படவில்லை. தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 250 மில்லியன் ரூபா நிதி நடைமுறைக்குச் சாத்தியமாகுமா? என்ற சந்தேகம் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## "பாலஸ்தீனம் – எரியும் தேசம்" நூல் வெளியீடு



ஜீவநதி பதிப்பகத்தின் 299 ஆவது வெளியீடாக ஐங்கரன் விக்கினேஸ்வரா எழுதிய "பாலஸ்தீனம் எரியும் தேசம்" எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியாகியுள்ளது. இந்நூலில் நிகழ்கால பாலஸ்தீன போர்க்கள நிகழ்வுகளின் ஆய்வுக் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. 'ஜீவநதி' பதிப்பகத்தால் வெளியான இந்நூலில் நூற்றாண்டுகளாக தொடரும் துயரத்தை சுமந்த எரிகின்ற பாலஸ்தீன தேசம் பற்றிய வரலாற்றுப் பார்வையில் கட்டுரைகள் இந்நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. ஈழத்து இலக்கிய உலகில் நீண்ட காலம் அறிமுகமான ஐங்கரன் விக்கினேஸ்வரா நீண்ட காலமாக சர்வதேச அரசியல் விவகார ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வருபவர். சார்ள்ஸ், நவீனன் எனும் புனைபெயர்களாலும் அறியப்பட்ட இவரது படைப்புகள் பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளன. தற்போது வெளியாகியுள்ள "பாலஸ்தீனம் எரியும் தேசம்" கட்டுரைத் தொகுப்பு நூலானது பாலஸ்தீன மக்கள் மிகவும் நெருக்கடியான காலத்தில் இனப்படுகொலை ஒன்றுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் காலத்தில் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 52வது பங்களாதேஷ் ஆயுதப்படை தின விழாவில் பாதுகாப்பு செயலாளர்



பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன நேற்று முன்தினம் (21) கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற 52ஆவது பங்களாதேஷ் ஆயுதப்படை தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

வருகை தந்த பாதுகாப்புச் செயலாளரை இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் *HE Tareq Md Ariful Islam* வரவேற்றார்.

சிறப்புரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர், பங்களாதேஷ் மற்றும் இலங்கைக்கு இடையில் தற்போதுள்ள இருதரப்பு உறவுகளைப் பாராட்டியதுடன், நீண்டகால உறவுகளைப் பேணுவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இரு நாட்டு இராணுவங்களுக்கிடையேயான உறவை வரையறுத்துள்ள ஒத்துழைப்பு மற்றும் நட்புறவைக் குறிப்பிடுகையில், பயங்கரவாதம், கடற்கொள்ளையர், கூட்டுப் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கும் பிற நாடு கடந்த அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சிகள், பேரிடர் நிவாரண நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு, மனிதாபிமான உதவி, இருதரப்பு அறிவுப் பரிமாற்றம் தொடர்பில் நினைவு கூர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.



பேருவளை குருந்துவத்தை சைலபிம்பாராம விகாராதிபதியும் மாலேவன ஆயுர்வேத வைத்திய கல்லூரி பணிப்பாளருமான அதி. வண. மாலேவன சோபித தேரரின் பூதவுடலுக்கு நேற்றைய தினம் (22) சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் இணைச்செயலாளர் ஷிஹாப் ஹாஜியார் தலைமையிலான பள்ளிச்சங்க உறுப்பினர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் இறுதி மரியாதை செலுத்தினர். பேருவளை நகர சபை முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் ஹஸன் பாஸி இறுதி மரியாதை செலுத்துவதை மற்றைய படத்திலும் காணலாம்.



பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானியை கொழும்பிலுள்ள தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போது பிடிக்கப்பட்ட படம்.

## குடிபோதையிலிருந்த 61 சாரதிகள் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கடந்த ஒரு மாத காலத்தினுள் குடிபோதையில் வாகனம் செலுத்திய 61 சாரதிகளை சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வந்துள்ளதாக தம்புத்தேகம பொலிசார் தெரிவித்தனர். தம்புத்தேகம நகர், நொச்சியாகம, கல்நேவ, எப்பாவல, இராஜாங்கனை மற்றும் அநுராதபுரம் பாதனிய வீதிகளில் குடிபோதையில் வாகனம் செலுத்திய சாரதிகளை கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

## அஸ்ஸெய்யித் ஹஸன் மௌலானாவுக்கு கௌரவிப்பு

**ஏ.எஸ்.எம்.ஜாவித்**



ஐக்கிய நாடுகள் சமாதான தூதுவர்கள் பேரவையின் உறுப்பினராக இலங்கை தேசிய ஐக்கியத்திற்கான சர்வமத கூட்டமைப்பின் முஸ்லிம் விவகார சர்வமத தலைவர் அஸ்ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்காதிரி அண்மையில் நியமிக்கப்பட்டதை முன்னிட்டு, ஸ்ரீ லங்கா கதீப் முஅத்தின் நலன்புரி அமைப்பினால் தெமட்டகொடையில் உள்ள அமைப்பின் அலுவலகத்தில் வைத்து அண்மையில் விஷேட வரவேற்பு அளிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

சம்மேளனத்தின் தலைவர் மௌலவி அப்துல் ஜப்பார், செயலாளர் கலாபூஷணம் மௌலவி நாகூர் றஹீம், சம்மேளனத்தின் ஆலோசகர் சியாட் ஹமீத் உள்ளிட்ட அமைப்பின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஞாபகார்த்தமாக ஹஸன் மௌலானாவினால் மரக் கன்று ஒன்றும் நாட்டப்பட்டதுடன் விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

கலாநிதி ஹஸன் மௌலானா 20 வருடங்களுக்கும் மேலாக இலங்கையில் மதங்கள் மற்றும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம், சகவாழ்வு மற்றும் சமாதானத்தை மேம்படுத்துவதற்கு சர்வமதத் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## வெள்ளவத்தை அடுக்குமாடி குடியிருப்பில் இளைஞர் பலி

### தவறி விழுந்துள்ளதாக தகவல்

வெள்ளவத்தை அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து தவறி விழுந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெள்ளவத்தை ருத்ரா மாவத்தையிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் இருந்தே இளைஞர் தவறி விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் அப்பகுதியில் வசிக்கும் 20 வயதுடையவர் எனவும், அவர் தனது பெற்றோருடன் அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்தவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார். இளைஞனின் சடலம் அடுக்குமாடி குடியிருப்பின் பின் பகுதியில் கண்டெடுக்கப்பட்டதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## சமாதான நீதவான் நியமனம்



இலக்கம் 208 பி, ஓபாத்த கொட்டுகொட பிரதேசத்தில் வசிக்கும் அத்தனபொல ஆராய்ச்சிகே எரத்னா கித்சிறி முழு தீவுக்குமான சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். 48 வயதான இவர் ஜாஎல மாருதி இல்ல உரிமையாளர் ஆவார். இவர் மினுவாங்கொடை ஜனாதிபதி கல்லூரியில் கல்வி கற்றுள்ளார். இவர் 35 வருட காலமாக சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகின்றார்.



குவைத் நாட்டின் 'பைத்துஸ் ஸகாத்' நிறுவனத்தின் அனுசரணையில் ஜம்இய்யதுஷ் ஷபாப் (AMYS) நிறுவனத்தினால் பொலன்னறுவை தல்பொத்த, லங்காபுர மகா வித்தியாலயத்திற்கு குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. படத்தில் பொலன்னறுவை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யு.ஏ. தர்மசிறி, வலயக் கல்வி அதிகாரி கே.எல்.யூ. பாலித மற்றும் ஜம்இய்யதுஷ் ஷபாப் நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். தாஸீம் மற்றும் பிரதிப் பணிப்பாளர் ஏ.ஜே.எம். வாரித் ஆகியோரையும் பாடசாலை மாணவர்களையும் படங்களில் காணலாம்.

### வெலிபிடிய ஸாஹிரா மூன்று மாணவிகள் சித்தி

**வெலிகம தினகரன் நிருபர்**

அண்மையில் வெளியாகிய 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றின்படி, வெலிகம வெலிபிடிய ஸாஹிரா மகா வித்தியாலயத்திலிருந்து தோற்றிய மாணவர்களுள் மூன்று மாணவிகள் சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் அமீன் தெரிவித்தார். எம்.என்.எப். ஹப்ஸா (160), எம்.ஏ.எப். ருகைய்யா (153), எம்.ஏ. அனீக்கா (151) ஆகிய மூன்று மாணவிகளுமே வெட்டுப்புள்ளியைத் தாண்டி பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

## இக்ரஃ தொழில்நுட்பக்கல்லூரியின் 30ஆவது சான்றிதழ் வழங்கும் விழா

பேருவளை இக்ரஃ தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் 30 ஆவது சான்றிதழ் வழங்கும் விழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஜாமியா நளீமிய்யா கலாபீட மாநாட்டு மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

நிறுவனத்தின் முகாமைத்துவ சபைத்தலைவர் யாகூத் நளீம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில், கனடாவில் வசிக்கும் இலங்கையைச்சேர்ந்த மூத்த பொறியியல் ஆலோசகரும் பிரபல சமூக சேவையாளருமான பொறியியலாளர் ஏ.ஜீ.ஏ. பாரி பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில், ஜாமிஆ நளீமிய்யா கலாபீட முதல்வரும் இக்ரஃ தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் முகாமைத்துவ சபை அங்கத்தவருமான அஷ்ஷெய்க் ஏ. ஸீ. அகார் முகம்மத் (நளீமி) சிறப்புரையாற்றுவார். இக்ரஃ தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் பல்வேறு கற்கை நெறிகளை பூர்த்தி செய்த சுமார் 325 மாணவர்களுக்கு இதன்போது சான்றிதழ் வழங்கப்படவுள்ளதோடு இந்நிகழ்வில் நிர்வாக சபை உறுப்பினர்கள் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் வை.ஐ.எம். றமீஸ் தினகரனுக்கு தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 நவம்பர் 23 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.43 |
| லுஹர் | 11.58 |
| அஸர் | 04.13 |
| மஃரிப் | 05.51 |
| இஷா | 07.04 |

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் கார்த்திகை 7

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 7.41 - 9.11வரை

யோகம்: வஞ்ரம்

திதி: ஏகாதசி



# பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாக்க கடும் நடவடிக்கை அவசியம்

## நீதி அமைச்சர் சபாநாயகரிடம் வலியுறுத்து

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பாராளுமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்ற அமர்வுகளின் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் தொலைபேசியில் உரையாடுவதற்கு முதலில் தடை விதிக்க வேண்டும் என்றும், அவர் சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் பாராளுமன்றத்தின் ஆயுட்காலமும் குறைவடையும் என்பதை சுட்டிக் காட்டிய அமைச்சர்,பாராளுமன்ற நிலையியற் கட்டளையில் மாற்றங்களை ஏற்படுத்தியாவது கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தின் செயற்பாடுகளால் ஒட்டுமொத்த நாட்டு மக்களின் சிறப்புரிமையும் மீறப்படுகின்றது.பாராளுமன்றம் உயரிய இடமாகவும் வெஸ்மினிஸ்டர் முறைமையைக் கொண்டது என்றும் நாம் குறிப்பிடுகின்றோம்.

ஆனால், தற்போது பாராளுமன்றத்தில் இத்தகைய கொள்கைகளுக்கு முரணான செயற்பாடுகள் மாத்திரமே இடம்பெறுகின்றன.

பாராளுமன்றத்தில் மக்களின் பிரச்சினைகள் பற்றி பேசுவதை விடுத்து,ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இடையிலான மோதல்கள் சம்பந்தப்பட்டதாகவே காலையில் அதிகமாக வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறுகின்றன. அதற்காக அதிக நேரம் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளால் தான், மக்கள் பாராளுமன்றத்தை வெறுத்து,விமர்சித்து போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.இதற்கு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

பாராளுமன்றத்தின் தற்போதைய இத்தகைய நிலைக்கு பிரதமர்



உட்பட சபாநாயகரும் பொறுப்புக் கூற வேண்டும்.

பாராளுமன்ற விவாதத்தை மக்கள் விரும்பி பார்த்த காலமும் உண்டு. ஆனால் இன்று அதிகமாக பாராளுமன்றம் தொடர்பான விமர்சனங்கள் மாத்திரமே முன்வைக்கப்படுகின்றன. பாராளுமன்றத்தை பார்வையிட வரும் மாணவர்கள் எதை கற்றுக் கொள்கிறார்கள் என்பதும் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டியது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியா நகரில் ஒரே இரவில் 07 கடைகளில் தொடர் திருட்டு

## கண்டி பிரதான வீதியில் திருடர் துணிகரம்

வவுனியா நகரில், கண்டி வீதியிலமைந்துள்ள பிரதி பொலிஸ் மாஅதிபர் அலுவலகம் முன்பாகவுள்ள 07 கடைகளில், ஒரே இரவில் தொடர் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை (21) இரவு இந்த தொடர் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கண்டி வீதியில் உள்ள கடைகளின் கதவுகளை உடைத்து நுழைந்த திருடர்கள், அங்கு வைக்கப்பட்டிருந்த பணத்தை திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் கடை உரிமையாளர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.இம் முறைப்பாட்டையடுத்து சிசிடிவி கமராக்களின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

07 கடைகளில் இடம்பெற்ற இத்திருட்டில், 50 ஆயிரம் ரூபா வரையிலான பணம் திருடப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

# நவீன தொழில்நுட்பத்தில் சாரதி அனுமதிப் பத்திரங்கள்

## வேலைத்திட்டம் தயாரென்கிறார் அமைச்சர்

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் (21) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலே, அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் எதிர்காலத்தில் மோசடி மற்றும் ஊழலைத் தடுக்கும் வகையில், இ மோட்டரிங் திட்டத்தின் கீழ் மோட்டார் வாகன போக்குவரத்துத்துத் திணைக்களம் முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான அனுமதியை நீதிபதிகள் வழங்குவார்களென நம்புவதாகவும் அமைச்சர் கூறினார். அத்துடன், 10,000 க்கும் மேற்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ள தாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# போலி ரூ. 5,000 தாள்கள் வைத்திருந்த நபர் கைது

## பியகம பிரதேசத்தில் சம்பவம் பதிவு

போலி ஐயாயிரம் ரூபாய் நாணயத்தாள்களுடன் பியகம பிரதேசத்தில்,ஒருவர் கைதாகியுள்ளார். பொல்பித்திகம, ஹத்போக்குன பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதான நபரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

06

# வடக்கு ஆளுநரின் தாயார் கொழும்பில் காலமானார்

(யாழ்.விசேட நிருபர்)



வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் தாயார் திருமதி.மேரி ஜோசபின் அமிர்தரத்தினம் தனது 93ஆவது வயதில் கொழும்பில் காலமானார்.

06

அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போன்று

# இணையப் பயன்பாட்டுக்காக ஒழுங்குமுறைப்படுத்தல் அவசியம்

டிஜிட்டல் தொழில்நுட்பத்தை துஷ்பிரயோகம் செய்வதால் சிறுவர் துஷ்பிரயோகம் உட்பட பல சமூக பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த,கட்டுப்பாடுகளுடன் இவற்றை பயன்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகம் தடுப்பு தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த (19) நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இதில் உரையாற்றிய அமைச்சர்:அபிவிருத்தியடைந்த பல நாடுகளில் டிஜிட்டல் தொழில்நுட்பம் கட்டுப்பாடுகளுடனே பயன்படுத்தப்படுகிறது.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளுக்கு மத்தியில், தற்போதைய சமூகம் இடைவிடாத போட்டியிலுள்ளது. போட்டித்தன்மை மற்றும் சாதனை என்பவற்றுக்காக டிஜிட்டல் தொழில்நுட்ப பாவனை அதிகரித்துள்ளது.இதனால்,



ஒரு தலைமுறை மன அழுத்தத்திலும் இருப்பதைக் காண்கிறோம். எனவே,எதிர்கால பயிற்சித் திட்டங்களில் மனநல மருத்துவத் துறையில் அதிக கவனம் செலுத்துங்கள்.

நாட்டில், பிராந்திய மட்டத்தில் ஏற்படும் சமூகப் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு வழங்க பல அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் உள்ளனர்.

331 பிரதேச செயலகப் பிரிவுகளும் 25 மாவட்ட அபிவிருத்திக் குழுக்களும் மாதாந்த அபிவிருத்திக் குழுவை நடத்துகின்றன.

இதன் மூலம் இப் பிரச்சினைகளில் பெருமளவு தலையீடு செய்ய முடியும். டிஜிட்டல் தொழில்நுட்ப பாவனையால்,

குழந்தைகள் மற்றும் கல்வி என்பன பாதிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஆய்வுகள் மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றார்.

# சவுதியில் சித்திரவதைக்கு உள்ளான பணிப்பெண்

## காயங்களுடன் நேற்று நாடு திரும்பினார்



சவூதி அரேபியாவுக்கு வீட்டுப் பணிப்பெண் வேலைக்காக சென்ற பெண் ஒருவர், மிக மோசமான முறையில் சித்திரவதைக்குள்ளான நிலையில்,நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மத்துகம பிரதேசத்தை சேர்ந்த இராமச்சந்திரன் தர்ஷனி என்ற 32 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயே, இச்சம்பவத்துக்கு முகம் கொடுத்துள்ளார். கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு

நேற்று அதிகாலை 04.25 மணியளவில் வந்த இப்பெண், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தார். இதுபற்றி அப்பெண் தெரிவித்ததாவது:

சவூதி அரேபியாவின் மதீனாவிலுள்ள ஒரு வீட்டுக்கு செப்டம்பர் 17 இல்,வேலைக்குச் சென்றேன்.அந்த வீட்டில்,

ஏற்கனவே பணியாற்றிய பெண் அங்கிருந்து தப்பியோடியிருந்தார். அவரது பைகள் அந்த வீட்டில் இருந்தன. அந்த வீட்டின் உரிமையாளரான பெண், எப்போதும் என்னை அடிப்பது, திட்டுவது, தீயினால் சுடுவது போன்ற சித்திரவதைகளை செய்தார்.

ஒரு முறை கீழே விழுந்து விட்டேன். அதனால் என்னால் வேலை செய்ய முடியவில்லை எனக் கூறினேன்.

சலவை இயந்திர அறைக்கு என்னை இழுத்துச் சென்று அடித்து, தரையில் வீசினார். இரண்டு ஆணிகள் மற்றும் இரும்பு உருண்டையைக் கொடுத்து விழுங்குமாறு கூறினார்.

06

# அதிவேக நெடுஞ்சாலை ஊழியர் போராட்டம் அமைச்சர் பந்துல பணிகளுக்கு ஏற்பாடு

அதிவேக நெடுஞ்சாலைகளின் காசாளர்கள் உட்பட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பல தொழிற்சங்கங்கள் சுகயீன விடுமுறை வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால்,கள நிலைமைகளை ஆராய்வதற்கு அமைச்சர் பந்துலகுணவர்தன நேரடி விஜயம் மேற்கொண்டார்.

கொட்டாவ மற்றும் அதுருகிரிய அதிவேக நெடுஞ்சாலைகளின் இடைமாறல் பகுதியிலேயே, அமைச்சர் விசேட கண்காணிப்பில் ஈடுபட்டார். நிலைமைய அவதானித்த அமைச்சர், பயணிகளின் வசதி கருதி இராணுவ அதிகாரிகளால் பயணச்சீட்டுகள் வழங்கும் நடவடிக்கையை ஆரம்பிக்க உத்தரவிட்டார். மேலும் அத்துருகிரிய இடைமாறும் பாதையில் இலங்கை விமானப்படை அதிகாரிகளால் டிக்கெட்டுகள் வழங்கப்பட்டு கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இந்த இடங்களின் செயற்பாடுகளை அவதானித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் சுகயீன விடுமுறையை அறிவித்துள்ள வேலை நிறுத்தக்காரர்களால், நெடுஞ்சாலைகளில்



பயணச்சீட்டு வழங்கவும், பணம் வசூலிக்கவும் முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. நெடுஞ்சாலையில் உள்ள அனைத்து தொழிலாளர்களும் சுகயீன விடுமுறையை அறிவித்ததுடன், வேறு யாரும் பணிகளைச் செய்ய முடியாதவாறு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை எடுத்துச் சென்றுள்ளனர்.அவை அனைத்தும் பொதுச் சொத்துக்கள். . அவை உடைக்கப்பட்டுள்ளதா?, எந்த நிலையில் உள்ளன? என்று ஆய்வு செய்யாமல், இராணுவத்திடமோ, வேறு எந்த தரப்பாரிடமோ ஒப்படைத்து அனுமதிச் சீட்டு வழங்குவது சாத்தியமில்லை. இதனால் அரச வருவாய் இழப்பை தவிர்க்க தற்காலிக பயணச்சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒரு நாடாக, ஒரு அரசாங்கமாக, நாம் கடுமையான நிதி மற்றும் பொருளாதார நெருக்கடியின் விளிம்பில் இருக்கும்போது, அரசாங்கம் பெற வேண்டிய வருவாயைப் பெறாத சூழ்நிலையில் மக்கள் மீது வரி அழுத்தம் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. இது ஒரு அரசியல் நடவடிக்கை. தொழிற்சங்கங்கள் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கையானது அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளில் அரசியல் ரீதியாக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வேலை நிறுத்தமாகும். அதைச் செய்ய முடியாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஹொரேதுடுவ முஸ்லிம் வித்தியாலய நிகழ்வில்

# தினகரன் ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு

பாணந்துறை, ஹொரேதுடுவ முஸ்லிம் வித்தியாலயத்தில் போதைபொருள் ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு மாணவர்களின் விசேட நிகழ்வுகள் இன்று (23) பாடசாலையில் காலை 9.00 மணிமுதல் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் எஸ்.எச். முத்தலிப் தலைமையில் ஆரம்பமாகவுள்ள இன்றைய நிகழ்வில் பாடசாலையின் ஊடக கழக வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த தினகரன் பிராந்திய ஊடகவியலாளர்களான கலாபூஷணம் எம்.கே.எம். அஸ்வர், அஷ்ரப் ஏ சமத் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

இவ்வைபவத்தில் மேல் மாகாண தமிழ் பிரிவு பாடசாலைகளுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். நஜீப் பிரதம அதிதி





யாகவும் விசேட அதிதியாக பாணந்துறை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டப்ளியூ.எம். சமந்த வேதகே, கௌரவ அதிதிகளாக களுத்துறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜெயகுமார், உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம்.இல்யாஸ், தொழில் அதிபர் ஷியாம் நளீம், மெக்சன் நிறுவன (செயல்பாட்டு ) முகாமையாளர் எம்.என்.எம்.இஸ்திஹார் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஒத்திவைப்பு மனுக்கள் நிராகரிப்பு

# GCE A/L பரீட்சை திட்டமிட்டபடி ஜனவரி 04 ஆம் திகதி நடக்கும்

க.பொ.த உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப்படமாட்டாதென்றும் திட்டமிட்டபடி 2024 ஆம் ஆண்டு ஜனவரி 04 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை, பரீட்சை நடத்தப்படுமென்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அடிப்படை உரிமை மனு நேற்று (22) வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது (வழக்கு எண் SC/FR/240/2023) மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

மற்றைய மனு (வழக்கு எண் SC/FR/254/2023) மனுதாரர்களால் வாபஸ் பெறப்பட்டுள்ளது. இதன்படி, முன்னர் திட்டமிட்டபடி, இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சையை 2024 ஆம் ஆண்டு ஜனவரி 04 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடத்துவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் ஏற்பாடு செய்யுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மக்கள் வங்கி

கொழும்பு வெளி -11 பிராந்திய தலைமைக் காரியாலயம்

மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏலவிற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 08.12.2023 வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க் காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனை நிகழும் திகதிகள் - 19.12.2023 & 10.12.2023

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | ஹோமாகம - 049 | தெஹிவளை - 019 | பிலியந்தலை - 103 |
|---|---|---|---|
| கிளைகள் | ஹோமாகம அவிசாவளை ஹங்வல்ல | தெஹிவளை, தெஹிவளை காலி வீதி, கல்கிசை, இரத்மலானை | மொறட்டுவ மொறட்டுமுல்ல கட்டுபெத்த கெஸ்பேவ பிலியந்தலை பொறலஸ்கமுவ |
| சேவை மையங்கள் | ஹோமாகம நகரம், பாதுக்க, மீகொட, கொடகம, பனாகொட, இராணுவ தலைமையக படைப்பிரிவு, கொஸ்கம, தல்துவ, ஹங்வல்ல நகரம், கஹஹேன | அத்திடிய, நெதிமால, களுபோவில, இரத்மலானை பொருளாதார மையம் (Economic Centre) | ராவதாவத்தை கட்டுக்குருந்த புவக்அரம்ப சொய்சா கஹதுடுவ பிலியந்தலை நகரம் |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர் (கொழும்பு வெளி -11),
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமைக் காரியாலயம்
இல. 71, மொறட்டுவ வீதி, பிலியந்தலை.
தொலைபேசி இல. 011-2180408, 011-2180432, 011-2180478

PEOPLE'S BANK
Pride of the Nation

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் கார்த்திகை மாதம் 07நாள்
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 8 வியாழக்கிழமை




## மக்களின் நலன்களுக்கு அளிக்கப்பட்ட முன்னுரிமை

வரவுச் செலவுத்திட்டம்_ 2024 மீதான இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக 122 பாராளுமன்ற உறுப்பினர்களும், எதிராக 77 எம்.பிக்களும் வாக்களித்துள்ளனர். இதன் ஊடாக 45 மேலதிக வாக்குகளால் இவ்வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நிறைவேறியுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையான 07 நாட்கள் நடைபெற்ற இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட சமயமே இவ்வாறு நிறைவேறியுள்ளது.

மக்களினதும் நாட்டினதும் நலன்களுக்கு இவ்வரவு செலவுத்திட்டம் பெரிதும் முன்னுரிமை அளித்துள்ளதே இதற்கான காரணமாகும்.

கடந்த வருடத்தின் ஆரம்பப்பகுதியில் நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. ஜனாதிபதி முன்னெடுத்துவரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் ஊடாக கட்டம் கட்டமாக மீட்சி பெற்று வந்த பொருளாதாரம் தற்போது மறுமலர்ச்சிப் பாதையில் நம்பிக்கையுடன் பிரவேசித்திருக்கிறது. இச்சூழலில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இவ்வரவு செலவுத்திட்டம், கடந்த வருடத்தைப் போன்ற பொருளாதார நெருக்கடி மீண்டும் ஏற்படுவதற்கு வாய்ப்பளிக்காதிருப்பதையும், நாட்டை பொருளாதார ரீதியில் நிலைபேறானதாகக் கட்டியெழுப்புவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

இந்நிலையில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சமரசிங்க, நாட்டின் எதிர்காலத்தில் கடுமையான பொருளாதார நெருக்கடி மீண்டும் ஏற்படாத வகையில் முறையான பொருளாதார முகாமைத்துவத்துடன் இவ்வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

அதேநேரம், முன்னாள் ஜனாதிபதியான பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ, 'நாட்டின் எதிர்காலத்தைச் சிறந்த வகையில் முன்னெடுப்பதற்கு இவ்வரவு செலவுத்திட்டம் சிறந்த வாய்ப்பாகும். அதனால் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் தனிப்பட்ட நோக்கங்களுக்கு அப்பால் இவ்வரவு செலவுத்திட்டத்தை நோக்குவது அவசியம்' என்றுள்ளார். இதன் ஊடாக இவ்வரவு செலவுத்திட்டத்தின் முக்கியத்துவத்தை முன்னாள் ஜனாதிபதி எடுத்தியம்பியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வரவு செலவுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போது, 'நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான பணிகளில் இணைந்து கொள்ளுமாறு அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுத்ததோடு, எம்மை விட சிறந்த வேலைத்திட்டம் இருந்தால் அதனை இச்சபையில் விரிவாக முன்வையுங்கள், விவாதிப்போம். மிகவும் பொருத்தமான திட்டத்தை செயல்படுத்துவோம். வருங்கால சந்ததியினருக்கு பெருமை சேர்ப்போம்' என்று குறிப்பிட்டிருந்தார்.

பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். நாட்டின் பொருளாதார மேம்பாட்டை இலக்காகக் கொண்டுள்ள இவ்வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அதனால்தான் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவு நல்கியுள்ளனர்.

இவ்வரவு செலவுத்திட்டத்திற்கு ஆளும் கட்சி எம்.பிக்கள் பலர் எதிராக வாக்களிப்பர் என்று எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் மனப்பால் குடித்தனர். நாட்டை பொருளாதார ரீதியில் மீளக்கட்டியெழுப்ப ஜனாதிபதி முன்னெடுக்கும் நடவடிக்கைகளில் பொறாமை கொண்டவர்களும் கூட இவர்களோடு இணைந்து பாரிய எதிர்பார்ப்பில் இருந்தனர். ஆனால் இவர்கள் எதிர்பார்த்த பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்து அவர்களது எதிர்பார்ப்பை நிராகரித்துள்ளனர்.

நாட்டையும் மக்களையும் உண்மையாக நேசிக்கும் மக்கள் பிரதிநிதிகள் அற்ப அரசியல் நலன்களுக்கு அப்பால் சிந்தித்து செயற்படுவர். அவர்கள் எவரும் இவ்வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க மாட்டார்கள்.

அரசியல் ரீதியாக வேறுபாடுகள் இருந்தாலும் பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவது இன்றியமையாததாகும். அதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும நல்கப்படுவது அவசியம்.

இந்த நிலையில் இவ்வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து ஜனாதிபதி ஆற்றிய உரையில் 'எம்மை விட சிறந்த வேலைத்திட்டம் இருந்தால் அதனை இச்சபையில் விரிவாக முன்வையுங்கள். விவாதிப்போம். மிகவும் பொருத்தமான திட்டத்தை செயல்படுத்துவோம். வருங்கால சந்ததியினருக்கு பெருமை சேர்ப்போம்' என்று குறிப்பிட்டார்.

இதன் ஊடாக பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு செயற்படுவதன் அவசியத்தை ஜனாதிபதி எடுத்துக்கூறியுள்ளார். அத்தோடு 'எம்மை விடவும் சிறந்த வேலைத்திட்டங்கள் இருந்தால் முன்வையுங்கள்' என வெளிப்படையாகவே கோரியுள்ளார். பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும் எந்தவொரு தலைவரது அழைப்பும் இவ்வாறுதான் இருக்கும்.

பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைத்துத் தரப்பினரதும் பங்களிப்பை பெற்றுக்கொள்வதில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார். அதனால் அவரது முயற்சிகளுக்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அதுவே மக்களினதும் எதிர்பார்ப்பு ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# கலியுகத்தின் கலி தீர்க்கவென வந்துதித்த அவதார புருஷர் பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா



இன்று ஜனன தினம்

மனிதகுலத்தை நெறிப்படுத்தி வாழவைக்கவும், அன்புவழியில் சென்று தெய்வீகத்தை உணர வைக்கவும் திருஅவதாரம் செய்தவர் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா. 'எங்கெல்லாம் அதர்மம் தழைத்தோங்குகின்றதோ, அங்கெல்லாம் தர்மத்தை நிலைநாட்ட நான் அவதாரம் செய்வேன்' என்று கிருஷ்ண பரமாத்மா பகவத்கீதையிலே உபதேசம் செய்திருந்தார்.

சமுதாயத்தை சீர்திருத்தவே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் மறுஅவதாரமாக தென்னிந்திய மாநிலத்தின் அநந்தபூர் மாவட்டத்தில் 1926, நவம்பர் 23 ஆம் திகதி பகவான் அவதாரம் செய்தார்.

புட்டப்பர்த்தியில் பிரசாந்தி நிலையத்தில் அமர்ந்திருந்து நாடினோர்க்கு நல்லதை நல்கி, அவர்களது பாவவினைகளைத் தீர்க்கும் தீனதயாளனாக, பக்தர்களைக் காக்கும் கிருஷ்ண பரமாத்மாவாக, நற்புத்தி புகட்டும் சற்குருவாக, நோய்களைத் தீர்க்கும் மகாமருத்துவ நிபுணராக, சாந்தியை நல்கும் கருணாமூர்த்தியாக அவர் விளங்கினார். 2011 ஏப்ரல் 24 ஆம் திகதி, சமாதி நிலையை எய்திய பகவான் சூக்கும வடிவில் பக்தர்களை காத்து இரட்சிப்பது அவர் தம் பக்தர்களின் அனுபவபூர்வமான உண்மையாகும்.

"என்னை நோக்கி ஒரு அடி வைத்தால், நான் என் பக்தனை நோக்கி பத்து அடி வைப்பேன்" என்ற பகவான் வாக்கு சமாதி நிலையிலும் தொடர்கின்றது. சமாதியைச் சென்று தரிசித்தால் அவர்களது குறைகள் தீர்க்கப்படுகின்றன. அமைதியும், ஆனந்தமும் மக்கள் மனதில் குடிகொள்வதனால் இன்றும் பக்தர்கள் புட்டபர்த்தி நோக்கிச் சென்று பகவான் அருள் பெறுகின்றனர்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கூற்றுக்கிணங்க பகவானது சர்வமதக் கொள்கையினைக் புட்டபர்த்தியில் காணலாம். பக்தர்கள் இன, மத, மொழி வேறுபாடு இன்றி பக்திமயமாக அவரது கொள்கைகளை பின்பற்றுபவர்களாக உள்ளனர்.

ஒரேயொரு ஜாதி அது மனித ஜாதி, ஒரேயொரு சமயம் அது அன்பு என்ற சமயம், ஒரேயொரு மொழி அது இதயத்தின் மொழி, ஒரேயொரு கடவுள் அவர் எங்கும் நிறைந்தவர் எனப் பகவான் அன்பினால் கலியுகத்தில் ஒருமைப்பாட்டைக் கொண்டு வந்து அமைதி, ஆனந்தம் ஏற்பட வழிவகுத்தார்.

நீங்களும் நானும் ஒருவரே உங்கள் இதயத்தில் தெய்வீகத்தை வரவழையுங்கள். அதனை உணருங்கள் அதனை ஆன்மீக சாதனை மூலம் வெளிக்கொண்டு வாருங்கள் எனக் கூறி "உங்கள் வாழ்க்கையே என் செய்தி" (*your life is my Message*) என திருவாய் மலர்ந்தருளினார். 98 ஆவது அவதார தினத்தை காணும் பரம் பிரம்மமான பகவான் பாபாவின் நினைவாக 'பிரேமதரு' என்ற நீண்ட நாள் பயன் தரும் மரநடுகைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அவரது அன்பு என்ற ஒரு குடைக்குக் கீழ் அனைவரையும் கொண்டுவருவதற்கு இந்த 'பிரேமதரு' திட்டம் உலகளாவிய ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பகவானின் அவதார தினத்தைக் கொண்டாடும் நாம் அவரது கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் உறுதியான மனத்துடன் ஜாதி, சமயம் பல இனம், மொழி பேதமற்ற வண்ண மலர்களால் தொடுத்த ஒரு பூமாலையை அணிவித்து பக்தியின் உச்சக்கட்டமான பூரண சரணாகதி என்ற வண்ண மலர்களைக் கொண்டு அர்ச்சிக்க வேண்டும். எண்ணம், சொல், செயல் என்ற மூன்றிலும் ஒருமைத்தன்மையை ஏற்படுத்தி நான் என்ற அகந்தையையும் காமம், குரோதம், லோபம், மோகம், மத, மாச்சரியம் என்ற ஆறு உட்பகைகளையும் அறவே ஒழித்து அன்புடனும் பண்புடனும் நற்செயல்களைப் புரிந்துவரின் நாட்டில் அமைதி நிலவி, எல்லா நன்மைகளும் எம்மை வந்தடையும்.

இன்று எங்கும் அமைதியின்மையும் பேரழிவும் தொடருகின்றன. இந்நிலை மாற அன்புவழியில் அனைவரும் பயணிக்க முயற்சிக்க வேண்டும். அன்பே கடவுள், சேவையே கடவுள், சத்தியமே தெய்வம், அன்பையும், சேவையையும் இரு கண்களாக மதித்து அனைவரும் சமம் என நினைத்து ஒற்றுமையையும், சமோதரத்துவத்தையும் பேண வேண்டும். மனிதன் வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும். எல்லோரும் இப்பிரபஞ்சத்தில் சமமே. பகவான் படைப்பே அற்புதமும், தெய்வீகமும், ஆனந்தமும் நிறைந்தது.

அனைவரையும் நேசியுங்கள், அனைவருக்கும் உதவி செய்யுங்கள், ஒருவரையும் வெறுக்காதீர்கள் எல்லோரும் அன்பில் மிதந்து அன்பைச் செலுத்துங்கள். அனைத்து ஜீவராசிகளும் அன்புக்குள்தான் அடைக்கலம். எனவே உலகில் ஒற்றுமை, தூய்மை, தெய்வீகத்தை உருவாக்கி ஒளியேற்றுங்கள். இன்றைய சிறுவர்கள் நாளைய பிரஜைகள், நல்ல தலைவர்களாக வருவதற்கு சிறு வயதிலிருந்தே பகவான் வகுத்த பாலவிகாஸ் கல்வியை, அதாவது உயிரூட்டும் அச்சிறப்பான மேம்பாட்டுக் கல்வியை பரந்தளவில் கற்பிப்பதற்கு வழிசமைத்துக் கொடுத்து பகவானது ஆசிர்வாதத்தை பெற முனைய வேண்டும்.

"எப்போதும் ஆனந்தமாய் இருங்கள், மற்றவர்களையும் தன்னலமற்ற சேவையின் மூலம் ஆனந்தப்படுத்துங்கள், ஏழைகளுக்கு உணவு வழங்கல், கிணறு அமைத்து கொடுத்து குடிநீர் வழங்கல், சேமிப்புத் திட்டத்தை அறிமுகம் செய்தல், மருத்துவ முகாம் நடத்தல், இரத்த தானம், நிவாரணம் அளித்தல், யுத்த காலத்தில் பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்தல், பண உதவி, சிற்றுண்டி வழங்கல், நாராயண சேவை, ஆடை தானம் செய்தல், வீடமைத்துக் கொடுத்தல் போன்ற சேவைகளை செய்து உங்களது மனித பிறப்பை புனிதப்படுத்துங்கள்" என பகவான் பாபா கூறினார். எனவே பகவான் போதனைகளை பின்பற்றி இன்புற்று இருப்போமாக!

ஜெய் சாய் ராம்.

திருமதி லீலாவதி மோகனசுந்தரம்

# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் ஏற்பாட்டில் உலக நீரிழிவு தின வைபவம்









உலக நீரிழிவு தினமானது மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் அவரது நீரிழிவு நிலையத்தில் அ.நித்தியானந்தமனுநீதி தலைமையில் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கா.பார்த்தீபன், அ.கிருஷ்ணமூர்த்தி, செ.கெங்கதாரன், பேராசிரியர் வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமாரன், வைத்திய அத்தியட்சகர் ((MS) டொக்டர் எஸ் .ஸ்ரீபவானந்தராஜா, வைத்தியப் பணிப்பாளர் டொக்டர் என்.ஜெயக்குமார், சுகாதார வைத்திய அதிகாரி, தெல்லிப்பழை டொக்டர் பி. கே. நவரட்ணராஜா, வைத்திய அதிகாரி எஸ்.கிரிதரன், தாதியபரிபாலகர் செல்வி.கி.கயறூபி மற்றும் ஏனைய தாதிகள், பணியாளர்கள், நீரிழிவு மையத்தின் நோயாளிகளும் கலந்து கொண்டார்கள்.

நித்தியானந்தமனுநீதி தனது தலைமை உரையில் மூளாய் நீரிழிவு மையத்தின் சேவைகள் பற்றிக் கூறினார். அதனைத் தொடர்ந்து பேராசிரியர் வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமாரன் தனது உரையில், தெற்றாநோய்களில் ஒன்றான நீரிழிவுநோயின் பரவல் இலங்கையில் 23 வீதம் அதிகரித்துள்ளது எனவும் இந்நோயானது மனிதனின் கண், சிறுநீரகம், இதயம், நரம்பு மற்றும் கால் ஆகிய அங்கங்களை பாதிப்பதோடு, அதன் அறிகுறிகளாக அதிக தாகம், அடிக்கடி சிறுநீர் கழித்தல், அதிக களைப்பு, அடிக்கடி பசி ஏற்படுதல், குணமாகாத காயங்கள், கண் பார்வை மங்கலாகுதல் மற்றும் கை, கால்களில் நடுக்கம் என்பன காணப்படுகின்றன என்றும் அதனைத் தடுப்பதற்கு சிபாரிசு செய்யப்பட்ட உணவுப் பழக்க வழக்கங்கள், முறையான உடற்பயிற்சி, மருந்துகள், வைத்திய ஆலோசனைகள் மற்றும் மனோரீதியான ஆரோக்கியம் என்பன முக்கியமானவை எனத் தெரிவித்தார்.

வைத்தியப்பணிப்பாளர் டொக்டர் ஜெயக்குமார், நவரட்ணராஜா, கிரிதரன் மற்றும் செல்வி.கி. கயறூபி ஆகியோர் தமது உரையில் நீரிழிவு நோயின் பாதிப்புகள் மற்றும் அதன் முகாமைத்துவம் பற்றி விளக்கிக் கூறினார்கள்.

அதனைத் தொடர்ந்து பிராந்திய சுகாதார பணியகம் வெளியிட்ட ஆரோக்கிய சபதத்தை அனைவரும் எழுந்து நின்று கூறியது விழாவை சிறப்பித்தது. நீரிழிவு மையத்தின் துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டது.

அதில் உலக நீரிழிவு தினத் தை முன்னிட்டு கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் மூளாய் 10மூ விலைக்கழிவினை (*HBA1C, Lipid profile, Serum Creatinine, U.M.A*) வழங்கியது.

நீரிழிவு நிலையமானது *Ratnam Foundation (UK)* இன் அனுசரணையுடன் 2005 ஆம் ஆண்டில் இருந்து செயற்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் மக்கள் பலியாகி 4 வருடங்கள் பூர்த்தி



கிண்ணியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட குறிஞ்சாக்கேணி பாலம் சுமார் 50 வருடங்கள் பழைமையானது. இப்பாலம் 15 வருடங்களுக்கு மேலாக பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது.

கிண்ணியாவின் மத்தியில் அமைந்துள்ள இப்பாலம் கிண்ணியா நகர சபையையும், கிண்ணியா பிரதேச சபையையும் பிரிக்கின்ற எல்லையாகக் காணப்படுகின்றது.

இப்பாலத்தினூடாக நாளாந்தம் 2000 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் பிரயாணம் செய்கின்றனர். பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், வியாபாரிகள், நோயாளர்கள் எனப் பலர் இப்பாலத்தையே பிரதான வீதியாக பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் இப்பாலம் அபாயநிலையில் காணப்படுகின்றது. இந்த ஆற்றில் இரு வருடங்களுக்கு முன்னர் (2021 நவம்பர் 23) இடம்பெற்ற படகு விபத்தில் பலர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இப்பாலத்தினை மீனவர்கள் இறால் பிடிக்கும் இடமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இப்பாலம் எப்போது அமைக்கப்படும் என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஏ.ஆர்.எம். றிபாஸ் (கிண்ணியா நிருபர்)

# முச்சக்கரவண்டிகளுக்கு மின்சார பேட்டரிகளை மாற்றும் தொழில்நுட்பம்

Lanka EMobility Solutions (Private) Limited (LeMS) நிறுவனத்தின் துணையுடன் இலங்கையில் 1.2 மில்லியன் முச்சக்கரவண்டிகளுக்கு தற்போது தூய்மையான மற்றும் கட்டுப்படியான போக்குவரத்து தீர்வு கிடைக்கின்றது. உள்நாட்டில் முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கு 'ewheel' என்ற வர்த்தக நாமத்துடன் முச்சக்கரவண்டிகளுக்கு மின்சார பேட்டரிகளை மாற்றும் தொழில்நுட்பத்தை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இப்புதுமையான பேட்டரியை மாற்றும் தொழில்நுட்பத்தின் பயனாக முச்சக்கரவண்டி உரிமையாளர் ஒருவர் செலவு மிக்க பேட்டரியை கொள்வனவு செய்யவோ அல்லது பேட்டரியின் பாவனைக்காலம் முடிவடைந்த பின்னர் அதற்குப் பதிலாக புதிய பேட்டரியொன்றை மாற்றுவது தொடர்பிலோ கவலைப்படத் தேவையில்லை என்பதுடன், மேற்குறிப்பிட்ட பேட்டரியை மாற்றும் தொழில்நுட்பம் வெறும் இரு மணித்தியாலங்களில் மேற்கொள்ளக்கூடிய ஒரு இலகுவான வழிமுறையாகும்.



மின்சாரத்தால் இயங்கும் எந்தவொரு வாகனத்தைப் பொறுத்தவரையிலும் பேட்டரியே மிகவும் செலவான பாகமாகக் காணப்படுவதுடன், பெற்றோலில் இயங்கும் முச்சக்கரவண்டியொன்றை ewheeler ஆக மாற்றும் போது, பேட்டரிகளுக்கு எவ்விதமான கொடுப்பனவுகளையும் உரிமையாளர் மேற்கொள்ளத் தேவையில்லை.

நிலைபேணத்தகு போக்குவரத்தை நோக்கிய இலங்கையின் பயணத்தைப் பொறுத்தவரையில் இது ஒரு சாதனை இலக்காக மாறியுள்ளதுடன், காபன் உமிழ்வைக் குறைத்தல் மற்றும் ஆபத்தான வளி மாசடைதலுக்கு எதிராகப் போராடுதல் ஆகியவற்றுக்கான அவசர தேவையை நிவர்த்தி செய்யும் முயற்சிகளை இதன் ஸ்தாபகர்கள் முன்னெடுத்துள்ளனர். "திகைப்பூட்டும் வகையில் இலங்கையில் தற்போது 1.2 மில்லியன் முச்சக்கரவண்டிகள் தினந்தோறும் 5.5 மில்லியன் லீட்டர் பெட்ரோலை நுகர்ந்து வருவதுடன், ஒவ்வொரு 'ewheel' உம் இந்த தொகையை குறைக்க உதவும். குடும்பத்தின் செலவுகளை கவனிப்பதற்காக பெரும்பாலும் ஒரே உழைப்பாளராகவுள்ள ewheel ஓட்டுனர், வெறும் ரூபா 450,000 முதலீட்டுடன் மாதமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூபா 20,000 தொகையை தற்போது சேமிக்க முடியும்," என்று LeMS இன் முகாமைத்துவப் பணிப்பாளரான சமிந்த ராஜபக்ச குறிப்பிட்டார்.

## தினகரன் வர்த்தக உலா

# கொமர்ஷல் வங்கி கிரெடிட் கார்டு வைத்திருப்போருக்கு iPhone 15 Pro



கொமர்ஷல் வங்கியின் கிரெடிட் கார்டு வைத்திருப்பவர்கள், வங்கியால் அறிவிக்கப்பட்ட வருட இறுதி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் மாதாந்தம் ரூபாய் 50,000 க்கு மேல் தங்கள் கார்ட்கள் ஊடாக செலவழித்து, விரும்பத்தக்க iPhone 15 Pro உட்பட அற்புதமான பரிசுகளை வென்றெடுக்க முடியும்.

இந்த ஊக்குவிப்பு திட்டமானது 2023ஆம் ஆண்டின் இறுதி வரை நடைபெறும், மேலும் எந்தவொரு ComBank கிரெடிட் கார்டு வைத்திருப்பவரும், நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச மதிப்புக்கு கார்ட் மூலம் பணம் செலுத்தினால், அவர் பரிசுகளுக்கான மாதாந்த குலுக்கல்களுக்குச் செல்ல தகுதியுடையவர் என வங்கி தெரிவித்துள்ளது.

iPhone 15 Pro வின் மகத்தான பரிசைத் தவிர, ஒவ்வொரு மாதாந்த சீட்டிலுப்பிலும் 10 வெற்றியாளர்களுக்கு கட்டண செலுத்தல்களையும், இரண்டு வெற்றியாளர்களுக்கு சொகுசு ஹோட்டல்களில் தங்குவதற்கும் அதேபோன்ற இரண்டு வெற்றியாளர்களுக்கு நட்சத்திர வகுப்பு ஹோட்டல்களில் இரவு உணவுக்கான வாய்ப்பும் வழங்கப்படும்.

# சுகாதார சேவைகளை மேம்படுத்தவுள்ள ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ், மெடி கிளினிக்

இலங்கையில் மிகவும் நேசிக்கப்படும் வைத்தியசாலையாகவும் மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சுகாதார சேவையில் முன்னோடியாகவும் உள்ள ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ், வெள்ளவத்தையின் மையப்பகுதியில் சுகாதாரப் பராமரிப்பிற்கான நிகரற்ற புகலிடத்தை ஸ்தாபிப்பதற்காக மெடி கிளினிக் (பிரைவேட்) லிமிட்டெட் உடன் கைகோர்த்து, அனைத்தையும் முற்றிலும் மாற்றியமைக்கும் வலுகொண்ட முயற்சியில் கால்பதித்துள்ளது.

இந்த முக்கிய கூட்டாண்மையானது விரிவான மருத்துவ சேவையின் புதிய சகாப்தத்தை வெளிப்படுத்துவதுடன், சமூகத்தின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரே கூரையின் கீழ் பலதரப்பட்ட சேவைகளை நெறிப்படுத்துகிறது.



அனைத்து சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளக் கூடிய கோட்பாட்டின் கீழ், தலைசிறந்த சுகாதார சேவைகளை வழங்குவதற்கான அவர்களின் ஓயாத அர்ப்பணிப்பில், ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் மற்றும் மெடி கிளினிக் இணைந்து மருத்துவ நிபுணத்துவம், அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் கனிவான பராமரிப்பு ஆகியவற்றின் இனிமையான கலவையை உருவாக்கியுள்ளன.

வெள்ளவத்தை மற்றும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் உள்ள நோயாளர்கள் பரந்த அளவிலான சுகாதார சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்பதை இந்த ஒத்துழைப்பானது உறுதி செய்வதுடன், இவை அனைத்தும் ஒரே இடத்தில் அமையப்பெற்றுள்ள அதிநவீன சேவை மையத்தில் சௌகரியமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# நான்காவது காட்சியறையை கிரிபத்கொடையில் திறக்கும் ராஜா ஜுவலர்ஸ்

1928 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது முதல், தங்க நகை உலகின் முடிசூடா மன்னனாக திகழ்ந்து வரும் ராஜா ஜுவல்லர்ஸ், கிரிபத்கொடையில் தனது நான்காவது காட்சியறையை வெற்றிகரமாகத் திறந்து வைத்துள்ளதாக அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. நேர்த்தி மற்றும் அதிநவீனத்தின் மீது நாட்டம் கொண்டவர்களுக்காக, சர்வதேச அளவில் கவர்ச்சி மிக்க, பல்வேறு தனித்துவமான வடிவமைப்புகளைக் காட்சிப்படுத்தும் அது, அனைத்து நகைகளையும் போட்டி விலையில் வழங்குகின்றது.



95 ஆண்டுகால புகழ் மிக்க வரலாற்றைக் கொண்ட ராஜா ஜுவலர்ஸ், இலங்கையில் அதிக விருதுகளைப் பெற்ற நகை வர்த்தக நாமம் எனும் பெயரைக் கொண்டுள்ளது. மிகக் கோலாகலமாக கிரிபத்கொடை காட்சியறை திறக்கப்பட்டது. ராஜா ஜுவலர்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அத்துல எலியபுர, புதிய கிரிபத்கொடை காட்சியறை திறப்பு தொடர்பான தனது கருத்துகளை வெளியிடுகையில், "எமது புதிய காட்சியறையானது, உயர்தர கைவினைத்திறனை வழங்குவதற்கும், வாடிக்கையாளர்களின் திருப்தியை உறுதி செய்வதற்குமான எமது நிலையான அர்ப்பணிப்பின் ஒரு பிரதிபலிப்பாகும்.

# வோக் ஜுவல்லர்ஸின் வாழ்நாள் உத்தரவாதம்

மகத்துவத்தின் அடையாளம் மற்றும் சிறந்த நகைகளுக்கான தரத்தின் மீதான அர்ப்பணிப்பு ஆகியவற்றில் தனித்துவமான மற்றும் முக்கியமானதொரு ஸ்தானத்தைச் சம்பாதித்துள்ள வோக் ஜுவல்லர்ஸ், ஆறு தசாப்தங்களுக்கும் மேலான பாரம்பரியச் சிறப்புக் கொண்டது. தற்போது இலங்கையில் அனைத்து இல்லங்களிலும் உச்சரிக்கப்படும் நாமமாக மாறியுள்ள வோக் ஜுவல்லர்ஸ், மாசுமறுவற்ற நகை வேலைப்பாடு மற்றும் வாடிக்கையாளர் திருப்தி மீதான அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கு பெயர்பெற்றுள்ளது.

அதன் புகழ்மிக்க மணப்பெண் அலங்கார நகைத் தெரிவுகள் அடங்கலாக, வோக் ஜுவல்லர்ஸின் ஒவ்வொரு தலைசிறந்த படைப்பும் "என்றென்றும் உங்களுடன்" (with you forever) என்ற நிறுவனத்தின் உறுதிமொழிக்கு அமைவாக, வாழ்நாள் உத்தரவாதத்துடன் வெளிவருகின்றன. வடிவமைக்கப்படுகின்ற ஒவ்வொரு நகையும் தலைமுறை தலைமுறையாக போற்றப்படும் வகையில் நிலைபெறும் வண்ணம் அவற்றுக்கு உத்தரவாதம் உள்ளதை இது குறிக்கின்றது.



நகைகள் மீதான தனது அளவற்ற அபிமானம் மற்றும் மகத்துவம் மீதான அர்ப்பணிப்பு தொடர்பில் ஹேமசந்திர மிகுந்த உற்சாகத்துடன் கருத்து வெளியிடுகையில், "காலத்தால் அழியாத தலைசிறந்த படைப்புக்களாக நாம் ஒவ்வொரு நகையையும் வடிவமைப்பது மட்டுமல்லாது, எமது வாடிக்கையாளர்களுக்கு தரம், நம்பிக்கை மற்றும் செலுத்தும் பணத்திற்கான மதிப்பு ஆகியவற்றையும் உறுதிப்படுத்தும் வகையில், மறக்க முடியாத அனுபவங்களாக அவற்றை மாற்றியமைக்கின்றோம். வோக் ஜுவல்லர்ஸில் தரத்திற்கு எவ்விதமான மறுபேச்சும் கிடையாது. " என்று குறிப்பிட்டார்.

# தங்க விருதை வென்ற சந்தனாலேப



இலங்கையின் முன்னணி ஆயுர்வேத அழகுசாதன வர்த்தகநாமமான சந்தனாலேப, பெருமைக்குரிய 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய தொழில்துறை விசேடத்துவ விருது வழங்கல் (National Industry Excellence Awards 2023) விழாவில் மீண்டுமொருமுறை கௌரவிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய கைத்தொழில் விசேடத்துவ விருது வழங்கும் விழாவானது, பல்வேறு துறைகளில் உள்ள உள்ளூர் தொழில்முனைவோருக்கு அங்கீகாரம் வழங்கும் பெருமைக்குரிய நிகழ்வாகும்.

தேசிய கைத்தொழில்துறை விசேடத்துவ விருதுகளில் கடந்த காலங்களில் பல முறை விருது பெற்றதன் மூலம் சந்தனாலேபவின் தொடர்ச்சியான வெற்றியானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

# யூனியன் வங்கி கிரெடிட் கார்ட்களுடன் பண்டிகைக் காலத்தில் பெருமளவு சேமிப்பு




இந்த நத்தார் பண்டிகைக் காலப் பகுதியில், யூனியன் வங்கி கிரெடிட் கார்ட்களுடன் 200 க்கும் அதிகமான பொருட்கள், உணவகங்கள், விருந்தோம்பல் பகுதிகள், அத்தியாவசிய பொருட்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், மின்சாதனங்கள் மற்றும் பல விற்பனை நிலையங்களில் சொப்பிங் செய்து அதிகம் சேமிக்குமாறு யூனியன் வங்கி அழைத்துள்ளது.

புகழ்பெற்ற உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தக நாமங்களுக்கு 50% வரை விலைக்கழிவுகளுடன், 0% வட்டியில்லாத தவணை முறை மீளக் கொடுப்பனவு திட்டங்களை யூனியன் வங்கி கிரெடிட் கார்ட்கள் வழங்குவதுடன், அட்டைதாரர்களுக்கு இந்தப் பண்டிகைக் காலத்தில் சிறந்த சொப்பிங் மற்றும் விடுமுறை அனுபவங்களையும் வழங்கும்.

வாழ்க்கைமுறைக்கு பொருத்தமான கிரெடிட் கார்ட் என அறியப்படும் யூனியன் வங்கி கிரெடிட் கார்ட்கள் வழங்கும் பண்டிகைக் கால சலுகைகளில், அன்புக்குரியவர்களுக்கு பரிசளிப்பதற்கு பொருத்தமான பல அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன. வீட்டுப் பாவனைப் பொருட்களுடன், சுப்பர் மார்க்கெட் சலுகைகளினூடாக பெருமளவு கவர்ச்சிகரமான சேமிப்புகள் நாட்டின் சகல முன்னணி சுப்பர் மார்க்கெட்களிலிருந்தும் வழங்கப்படுவதுடன், நத்தார் ஹம்பர்களுக்கு இலகு கொடுப்பனவு திட்டங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஹோட்டல்கள் மற்றும் ரிசோர்ட்களிலிருந்து வழங்கப்படும் பரந்தளவு விலைக்கழிவுகளினூடாக, அட்டைதாரர்களுக்கு தமது குடும்பத்தாருடன் சிறந்த விடுமுறையை அனுபவிக்க முடியும்.

# 10வது ஆண்டு விழாவை பெருமையுடன் கொண்டாடும் ஜா எல மாருதி இல்லம்

மக்களின் வாகனக் கனவுகளை நனவாக்குவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்து, ஜா எல மாருதி இல்லம் தனது 10 ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. பலரின் முதல் காரான, மாருதி கார்களை மிகவும் நியாயமான மற்றும் வசதியான விலையில் பெறுவதற்கான வாய்ப்பை வழங்கும் ஜா எல மாருதி வாடிக்கையாளர்களுக்கு ரொக்கமாகவும், குத்தகை விதியின் கீழ் மாருதி காரை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்பு, ஜா எல மாருதி இல்லம் தனது சேவை நடவடிக்கைகளை 4 மாருதி கார்களுடன் தொடங்கியது. அன்று தொடக்கம், ஜா எல மாருதி இல்லம் நாட்டின் அனைத்து மாவட்ட வாடிக்கையாளர்களுக்கும் உயர்தர மாருதி கார்களை வழங்கியுள்ளது.

நாட்டிலுள்ள மிகவும் புகழ்பெற்ற குத்தகை நிறுவனங்களுடன் இணைந்து மிகக் குறைந்த முன்பணம் செலுத்தி சில மணிநேரங்களுக்குள் பரிவர்த்தனையை முடிக்க மாருதி இல்ல ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறார்கள். மாருதி காரைப் பற்றி விசாரிக்க தொலைபேசியில் அழைப்பு விடுத்து முதல் காரை வாங்கும் வரை மிக உயர்ந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவதில் பாராட்டை ஜா எல மாருதி இல்லம் வென்றுள்ளது. ஜா எல, கொட்டுகொட, ஓபாதா பிரதேசத்தில் அழகிய சூழலில் அமைந்துள்ள மாருதி இல்லம் ஒரு பெரிய வாகன தளம் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய அலுவலக வளாகத்தைக் கொண்டுள்ளது. அங்கு 50க்கும் மேற்பட்ட வாகனங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள நிலையில், வாடிக்கையாளர்கள் தங்கள் மனதிற்கு பிடித்தவாறு விரும்பும் வண்ணத்திலும், தங்களின் பட்ஜெட்டுக்கு ஏற்றவகையிலும் மாருதி காரை வாங்கலாம்.





காரை விலைக்கு வாங்கும் போது, அதனை நீண்ட கால பயன்பாட்டுக்கு ஏற்றவாறு வழங்குவது ஜா எல மாருதி இல்லத்தின் மற்றொரு நம்பகமான ஏற்பாடாகும்.

மேலும், ஜா எல மாருதி இல்லம் தனது காரை விற்க விரும்புபவர்களுக்கு காரை மாருதி இல்லத்திற்கு கொண்டு வந்து நியாயமான விலையில் விற்கும் வாய்ப்பை வழங்க தயாராக உள்ளது. பசுமை கொடுக்கல் வாங்கல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு மாருதி காரை வாங்குபவர்களுக்கு ஜா எல மாருதி இல்ல நிறுவனத்தால் மாமரக் கன்றொன்றை வழங்குவது பல ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

ஜா எல மாருதி இல்லம் சமூக ஊடக வலையமைப்புகளில் பெரும்பான்மையினரின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு நிறுவனமாகும்.

ஜா எல மாருதி இல்ல முகநூல் பக்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 54 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

மாருதி யூடியூப் சேனல் ஆறாயிரம் சந்தாதாரர்களைக் கடந்துள்ளது. மினுவாங்கொடை ஜனாதிபதி கல்லூரியின் பிரபல முன்னாள் மாணவரான ஜா எல மாருதி இல்ல தலைவரான ஏ. ஏ.ஈ.கே.அத்தனபொல இலங்கையின் பிரபல தனியார் நிறுவனமொன்றின் நிறைவேற்றுப் பதவியில் பல வருடங்களாகப் பணியாற்றியவர்.

எனவே, ஜா எல மாருதி இல்ல ஊழியர்கள் மிக உயர்ந்த அளவிலான சேவையை வெளிப்படைத்தன்மையுடன் வழங்குவதற்கு சரியான தலைமைத்துவத்தையும் வழிகாட்டுதலையும் பெற்றுள்ளனர்.

## ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற...

மற்றும் பாராளுமன்றத் தேர்தலையும் நடத்தப்படும். இதையடுத்து வரும் வருடத்தில் மாகாண சபை தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கும் எம்மால் முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதம் ஆரம்பமானது.

நேற்றைய முதல் நாள் குழுநிலை விவாதத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட 25 நிறுவனங்களின் தலைப்புக்களில் விவாதம் இடம் பெற்றது. இந்த விவாதத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,

அடுத்த வருடத்தில் நாம் புதிய சட்டங்களை கொண்டு வர வேண்டியுள்ளது. இதனை மேலும் தாமதிக்க முடியாது.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த வருடத்தில் தமதுஅ ஆசனங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. அவர்களால் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் உள்ளன. அவற்றை தாமதப்படுத்த முடியாது.

பாராளுமன்றத்தில் முதலாவது மணித்தியாலத்தின் பின்னர் அன்றைய தினத்தின் பிரதான நடவடிக்கைகளுக்கு செல்ல வேண்டும்.

நடிப்பதற்கு எம்மை பாராளுமன்றத்திற்கு மக்கள் அனுப்பவில்லை. சட்டங்களை நிறைவேற்றுவதற்கே அனுப்பி யுள்ளார்கள்.அதனால், இது தொடர்பில் அமைச்சரவையிலும் கலந்துரையாட உள்ளேன்.

இது தொடர்பில் புதிய திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். எமது சம்பிரதாயம் ஒன்று உள்ளது எதிர்க்கட்சித் தலைவரிடம் அரசாங்கத்தை உருவாக்குமாறு கூறும்போது அவரிடம் பெரும்பான்மை இல்லா விட்டாலும் அவர் அதனை மேற்கொள்ள வேண்டும். எனினும் எமது எதிர்க்கட்சித் தலைவர் அவ்வாறு செயற்படவில்லை.

எனக்கு பிரதமர் பதவியை ராஜபக்சக்கள் வழங்கவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களே என்னிடம் வந்து அதனை பொறுப்பேற்குமாறு தெரிவித்தனர். அந்த நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச என்னை அழைத்தார் .நான் சென்று அந்தப் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டேன். அந்த நிலையிலே நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அனைவரதும் ஒத்துழைப்பை கோரினேன்.

நான் அதனை மேற்கொண்ட பின்னரே எனது வீட்டுக்குத் தீ வைக்கப்பட்டது.

எதிர்க்கட்சியினர் என்னை பதவி விலகுமாறு கேட்டுக் கொண்டனர். நான், அவர்களிடம் பெரும்பான்மை இருக்குமானால் எவராவது முன் வாருங்கள் பதவி விலகத் தயார் என்று கூறினேன்.

அன்று பாராளுமன்றத்தை முற்றுகையிட வந்தார்கள். அதன்போது என்ன நடந்தது ?

இராணுவத் தளபதி வந்ததும் கட்சித் தலைவர்கள் அனைவரும் தம்பியோடினர். அந்த சந்தர்ப்பத்திலேயே பாராளுமன்றத்தை பாதுகாப்பதற்காக உரிய நடவடிக்கை எடுக்குமாறு நான் இராணுவத் தளபதியிடம் கூறினேன்.

இது தொடர்பில் விசாரணை நடத்தினால் யார் பொறுப்புக் கூற வேண்டும். யார் பொறுப்புக் கூற வேண்டிய அவசியம் இல்லை என்பது வெளிவரும்.

ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழு சட்டத்தை கொண்டு வந்துள்ளோம். ஆணையாளரின் பெயர் கிடைக்கும் வரை நான் காத்துக் கொண்டிருக்கின்றேன். இப்போது மூன்று மாதங்கள் கடந்து விட்டன. நாம் ஊழல் மோசடிகள் பற்றி பேசுகின்றோம்

எனினும், அந்த ஆணைக்குழுவுக்கான பெயர்களை வழங்கத்தவறி வருகின்றோம்

அது தொடர்பில் இரண்டு மூன்று பேர் பிரச்சனைகளை தோற்றுவித்துள்ளனர். இது தொடர்பில் சட்டமா அதிபரிடம் வினவினேன். ஒன்றிரண்டு வசனங்கள் தவறாக இருந்தால் அதில் பிரச்சினை கிடையாது. நியமனங்களை வழங்குவதற்கு பெயர்களை அனுப்புங்கள் என நான் கூறியுள்ளேன்.

எவருக்கும் எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியும். அதை நாம் பார்த்துக் கொள்வோம்.

## சனத் நிஷாந்த எம்பிக்கு...

தெரிவித்தார். அத்துடன் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஒழுக்கயீன செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார். இத்தீர்மானம் நேற்று (22) முதல் நடைமுறைக்கு வருவதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

## பொருளாதார நெருக்கடிக்கு...

நழுவிச் செல்வோரை வரி செலுத்தும் கட்டமைப்புக்குள் கொண்டுவர வேண்டியது அவசியம். இதற்கு அவசியமான வேலைத்திட்டத்தினை இவ்வருடம் முதல் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் (22) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்;

நாட்டின் பணவீக்கத்தை எம்மால் கட்டுப்படுத்த முடிந்தது. 70 % ஆக இருந்த பணவீக்கம் 2.5 % வரை குறைக்கப்பட்டுள்ளது. கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்பேது, இவ்வருடம் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது. இதன் உடாக நாம் சரியான பாதையில் பயணிக்கின்றோம் என்பது புரிகின்றது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, பொருட்களின் விலைகள் பாரிய அளவில் குறையாவிட்டாலும், விலை அதிகரிப்பு வேகத்தை நாம் கட்டுப்படுத்தியுள்ளோம். எம்மால் அரசியல் ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ள முடியும்.

அதன் பலன்களை மக்களே எதிர்கொள்ள நேரிடும். எவ்வாறாயினும் நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து மீள, புதிய முதலீடுகள் அவசியம். தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். தொழில் சந்தைக்கு ஆக்கத்திறன் மிக்க இளம் சமூகம் உள்வாங்கப்பட வேண்டும். இம்முறை வரவு செலவுத் திட்டம் மேற்படித் திட்டங்கள் உள்ளடங்கலாக எதிர்கால இலக்குகளை கருத்திற்கொண்டு முன்மொழியப்பட்டுள்ளது. எனவே, 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இந்நாட்டை புதிய பொருளாதார கட்டமைப்புக்குள் இட்டுச் செல்லுமென்றும் அவர் தெரிவி'தார்.

## கட்டணம் செலுத்தும் பிரத்தியேக...

விதிக்கப்படவுள்ளது. ஊவா மாகாண கல்வி செயலாளர் காமினி மஹிந்தபால இதுபற்றி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கட்டணம் அறிவிடப்படுத் வகுப்புக்கள், பாடசாலை நேரத்துக்கு மேலதிகமாக வார இறுதி நாட்களிலும் விடுமுறை தினங்களிலும் நடத்தப்படுகிறது. ஆசிரியர்களால் நடத்தப்படும்

இந்த பிரத்தியேக வகுப்புகள் குறித்தே இத்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இத்தடை நேற்று (22) முதல் அமுலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளில் மாணவர்களுக்கு பாடத் திட்டங்கள் உரிய நேரத்தில் நிறைவு செய்யப்படுவதில்லை.

இதனால், கட்டணம் அறவிட்டு மேலதிக வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. இவ்வாறு நடத்தப்படும் வகுப்புக்களிலே பாடத்திட்டங்கள் நிறைவு செய்யப்படுவதாக பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

## லேக்ஹவுஸ் அக்கடமியின்...

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று (23) மாலை 3.30 மணிக்கு நடைபெறும்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தலைமையில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசத்தின் வழிகாட்டலின் கீழ், சான்றிதழ் வழங்கும் விழா நடைபெறவுள்ளது. இலங்கையின் முன்னணி ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் குழு, முகாமைத்துவ குழு உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இங்கு ஊடக தொடர்பாடல் டிப்ளோமா பாடநெறியை கற்ற பத்து மாணவர்களுக்கும் டிஜிட்டல் ஊடக தொடர்பாடல் பாடநெறியை கற்ற 16 மாணவர்களுக்கும் டிப்ளோமோ சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

## 04 வயது நிரம்பிய குழந்தைகளுக்கு...

கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மாணவர்களின் கல்வி கற்பதற்கான வயதைக் கருத்திற்கொண்டு, 15 வயதாகும்போது கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு சாதாரண தர பரீட்சையை எழுதும்போது மாணவர்கள் தமது 17 வயதில், கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, நான்கு வயதை நிறைவு செய்யும் சகல சிறார்களும் ஆரம்பக் கல்விக்காக பாடசாலையில் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். அது சம்பந்தமான யோசனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடை க்கான வினாக்கள் வேளையில், மொஹமட் முஸம்மில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலே கல்வி யமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் சபையில் மேலும் தெரிவிக்கையில்,

இலவச ஆரம்பக் கல்வியைத் தொடங்குவதற்கு நாம் உத்தேசித்துள்ளோம். அந்த வகையில் நான்கு வயதை நிறைவு செய்யும் சிறார்கள் கண்டிப்பாக பாடசாலை செல்வது அவசியம். நாட்டில், இருநூறு மாணவர்களுக்கு குறைவான மாணவர்களைக் கொண்ட நான்காயிரம் பாடசாலைகள் உள்ளன.

## வடக்கு கிழக்கு கடற்றொழில்...

செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

அண்மையில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதேகி (Misukoshii Hiddheki) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கடற்றொழில் அமைச்சில் சந்தித்த போது கலந்துரையாடப் பட்டமைக் கமைகடகமைய, வடக்குகிழக்கு மாகாணங்களில் கடற்றொழில்துறையை அபிவிருத்தி செய்வதற்கான இந் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிதி, கடற்றொழிலாளர்களுக்கான குளிரூட்டல் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் கடற்றொழிலாளர் களுக்கான நவீன உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல் போன்றவற்றுக்காக பயன்படுத்தப்படவுள்ளது. ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## 3,190 கி.மீ தூரத்தை நடந்து...

சுப்பிரமணியம் (வயது 50) நடைபவனியாக உலக சாதனை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அகுரஸ்ஸ மாத்தறையிலிருந்து 3,190 கி.மீ தூரத்தை கால்நடையாக கடப்பதற்காக கடந்த செப்டம்பர் மாதம் 25 இல், இவர் புறப்பட்டார்.

ஹம்பாந்தோட்டை, மொனராகலை, அம்பாறை , மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் வழியாக நடந்து நேற்று இவர், கொழும்பை வந்தடைந்தார்.

இவரை கொழும்பு செட்டியார் தெருவில் மலைய கல்வி அபிவிருத்தி மன்ற உறுப்பினர்கள் வரவேற்றனர்.இவரை பாராட்டி கௌரவித்து பொன்னாடை போர்த்தப்பட்டது. அத்துடன் அவருக்கு உதவிகளும் வழங்கப்பட்டன.

அவர் இன்று காலிமுகத்திடலிலிருந்து புறப்பட்டு களுத்துறை சென்றடைவார். அத்துடன் அடுத்த 05 நாட்களுக்குள் மாத்தறை, அக்குரசவை அடைந்ததும் அவரது நடைபவனி சாதனை முடிவடையும்.

உலக சாதனை கின்னஸ் புதகத்தில் பதிவிடுவதற்காக இவர் நடைபவனி செல்லும் ஒவ்வொரு இடத்திலும் பொலிஸ் அதிகாரிகள் பரிசிலித்து கையொப்பமிட்டுள்ளனர்.

இலங்கையில் கடந்த காலத்தில் 1987 கி மீட்டர் தூரம் நடந்த சாதனையே உள்ளது. தனகு குடும்பம் சுனாமியால் இறந்து போயினர். இந்நிலையில், தனிமையிலேயே வாழ்வதகாவும் தனக்கு குடியிருக்க வீடொன்றை நிர்மாணிக்க வேண்டும் எனவும் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார் .

## இளைஞனின் மரணத்துக்கு...

இச்சபையிலே கூறுவதற்கு நான் விழைகிறேன்.

முதலாவதாக, இந்த மாதம் எட்டாம் திகதி நாகராஜா அலெக்ஸ் என்ற 28 வயதான ஒரு இளைஞர் சித்தங்கேணி பகுதியிலே வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரைப் பிடித்தவர்கள் பின்பு 12ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார்கள்.

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்படி நீதிபதி கட்டளையிட்டதால், 12ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரையும் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்பு, வைத்தியசாலையால் விடுவிக்கப்பட்ட அவ்வி ளைஞரை யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் வைத்தார்கள்.

மீண்டும் நோய்வாய்ப்பட்டு விட்டார் என்ற காரணத்திற்காக 19 இல்,மீண்டும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஏறக்குறைய ஒரு மணித்தியாலத்தில் அங்கு அவ்விளைஞர் இறந்துவிட்டார்.

அவரை பிரேத பரிசோதனை செய்த வைத்திய அதிகாரி மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். அது ஒரு இயற்கை மரணமல்ல.

அவர் மீது நடத்திய தாக்குதலில் கிட்னியில் பிரச்சினை, ஏற்பட்டுள்ளது.

அடிகாயங்களும் உடம்பில் உள்ளன. இதனால், பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றப்பட்டுள்ளனர். சாதாரணமாக தமிழ் பகுதிகளிலே இப்படியான நிலைமைகள் நடந்து விட்டால் இடம்மாற்றுவதும் அதை மறந்து விடுவதும் தொடர்கின்றன.

குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டாலேயொழிய இப்படியான நிலைமைகளை ஒருபோதும் திருத்த முடியாது. இது ஒரு மிகப் பாரதூரமான விடயம் என்றார்.

## கட்டுநாயக்காவில் 27 கோடி...

எயார்லைன் விமானம் மூலம் அண்மையில், கட்டுநாயக்க விமான நிலையத்தின் விமான சரக்கு முனையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும்,பாகிஸ்தானில் உற்பத்தி செய்யப்பட்ட "துவாய்கள்" என்றே சுங்க பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு05 பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய நபர் ஒருவர் மேற்படி ஹெரோயின் போதைப் பொருள் அடங்கிய பொதியை விடுவிப்பதற்காக வந்துள்ளார்.

அந்நபர் முன்னிலையில் எட்டு பொதிகளையும் திறந்து சோதனையிட்டபோது, அதில் 10 கிலோ 500 கிராம் நிறை கொண்ட ஹெராயின் போதைப் பொருள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

## முடிந்தால் தேர்தலை...

இருந்தால், முதலில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச (22) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

2019 ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2020 பொதுத் தேர்தல் ஆணைகளுக்கு மாறாக, நாட்டு மக்களின் உண்மையான ஜனநாயகமே இப்போது முக்கியமானது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். உயர் நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள வழக்கு எண்ணை தவறுதலாக குறிப்பிடும் போது, அதன் உள்ளடக்கத்தைப் பற்றி சிந்திக்காமல் வழக்கு எண்ணை வைத்துக் கொண்டு பாராளுமன்றத்தில் கூறுவது வெட்கக்கேடானது.

## துவாரகாவின் காணொளி:

வகையில் செயற்கை நுண்ணறிவில் உருவாக்கப்பட்ட காணொளி ஒன்று எதிர்வரும் (27) வெளிவரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிவேக நெடுஞ்சாலைகள் எதனையும்...

அமைச்சின் அறிவித்தல் ஒன்றை நேற்று சபையில் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்கள் அனைவரும் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பில் அறிவித்து விட்டு, அதற்கிணங்க இன்றைய தினம் (நேற்று) அவர்கள் பணி பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளார்கள்.

பிரவேசப் பத்திரங்களை வழங்கும் உபகரணங்களை அவர்கள் எடுத்துச் சென்றுள்ளார்கள்.

வேலை நிறுத்தப் போராட்டம் செய்வது அவர்களது உரிமை. எனினும் சுகவீன விடுமுறையை எடுத்துக் கொண்டு பலவந்தமாக அனைத்து ஊழியர்களையும் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு இழுத்துள்ளார்கள். அது தவறு. அவர்கள் எடுத்துச் சென்றிருப்பது அரசாங்கத்தின் சொத்து என்பதால் அதனை மீண்டும் கையளிக்குமாறு அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

பிரவேசப் பத்திரங்களை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது. அதனை வாய்ப்பாக வைத்து மோட்டார் சைக்கிள்கள் இந்த நெடுஞ்சாலைகளில் பயணிக்குமானால் பெரும் விபத்துக்கள் ஏற்படவும் வாய்ப்புண்டு.

அத்தகைய நிலையைத் தடுக்கும் வகையில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்தியுள்ளோம்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தினால் அரசாங்கத்திற்கு இழக்கப்படும் வருமானத்தை போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

# இன்றைய பலன்கள்

## ( 23. 11. 2023 )



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)

**மேஷம்:**



எந்த சூழ்நிலையையும் அவசரப்படாமல் பொறுமையுடன் கையாள்வது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**ரிஷபம்:**



பொருளாதார நிலை தேவைக்கு ஏற்ப உயரும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். உங்கள் பேச்சுக்கு மதிப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:**



குடும்பத்தில் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. பொருளாதார நிலையில் ஏற்ற தாழ்வுகள் வந்து நீங்கும்.

**கடகம்:**



குடும்பத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வதால் தேவையற்ற பிரச்சினைகளை தவிர்க்கலாம்.

**சிம்மம்:**



எடுக்கும் முயற்சிகளில் தடைகளும் தாமதங்களும் உண்டாகும். விடாமுயற்சியே வெற்றி தரும். தங்க நகை ஆபரணங்களை கவனமாக கையாளுங்கள்.

**கன்னி:**



உங்கள் பேச்சுக்கு மதிப்பு மரியாதை அதிகரிக்கும். உடன்பிறப்புகளால் ஆதாயம் உண்டு. தாயால் அனுகூலமான பலன்கள் ஏற்படும்.

**துலாம்:**



பொருளாதார நிலையில் நல்ல மாற்றமும் முன்னேற்றமும் ஏற்படும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும்.

**விருச்சிகம்:**



திருமண வயதில் உள்ள மகன் அல்லது மகளின் திருமணம் தொடர்பான முயற்சிகள் சாதகமாக முடியும்.

**தனுசு:**



பொருளாதார நிலை உயரும். நீண்ட நாளாக வங்கி கடனுக்கு முயற்சி செய்து கொண்டிருப்பவர்களுக்கு வங்கி கடன் கிடைக்கும்.

**மகரம்:**



பொருளாதார நிலையில் ஏற்ற தாழ்வுகள் வந்து நீங்கும். அரசால் அனுகூலம் உண்டு. உறவுகளை கவனமாக கையாளுங்கள்.

**கும்பம்:**



பணம் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. வீண் வாக்குவாதத்தை தவிர்க்கவும். குடும்பத்தில் மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மீனம்:**



ஆடை ஆபரண சேர்க்கை உண்டாகும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும்.

## தொழிற்சங்க உறுப்பினரல்லாத...

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஆசிரிய இடமாற்றம் தொடர்பில், எதிர்க்கட்சி எம்பிக்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அவர்,

ஆசிரிய இடமாற்ற சபைகளில் ஆசிரியர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. தொழிற்சங்கங்கள் ஆசிரிய இடமாற்ற சபைகளில் தலையீடு செய்து தங்கள் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிக்கின்றனர். அந்த வகையில் தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக அல்லாதவர்களுக்கு இதன் போது அநீதி இழைக்கப்படுகின்றது.

ஆசிரியர் இடமாற்றப்பட்டியலை ஆசிரிய இடமாற்றல் சபைகள் கூடி உருவாக்கினால், அது தவறானது. இவ்வாறு பல கல்வி வலயங்களில் இடம்பெற்று வருகின்றன . இது தொடர்பாக பணிகளுக்கு ஒழுங்கு முறை வகுத்து, சுற்றறிக்கை தயாரிக்கப்படல் அவசியம்.இவை மாகாணசபைகளுக்கு அனுப்பப்படுவது சிறந்தது. இந்த வகையில் மாகாண மட்டத்தில் புதிய பணி ஒழுங்கு முறையும் சுற்றறிக்கையும் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசியல் தலையீடின்றி கிரிக்கெட்டை...

விவாதத்தில் (22) உரையாற்றுகையிலே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டதாவது,

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பை நேற்று (21) நிறைவேற்ற முடிந்தமை மகிழ்ச்சிக்குரியது. அதற்காக வாக்களித்த 120 எம்.பி.க்களுக்கும் நன்றி தெரிவிகிறேன். அந்த பலத்துடன் நாம் முன்னேறிச் செல்வோம். எதிராக வாக்களித்த 77 பேருக்கும் நன்றி. அவர்களுக்கு இந்த சபையில் ஒத்துழைப்பு இல்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஆட்சியாளர்களுக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பு வழங்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். அதற்கான சூழலை நானே உருவாக்கினேன். அதனால், என்னை எதிர்ப்பதில் நியாயமில்லை. நாட்டின் ஜனநாயகத்தையும் வலுப்படுத்தியுள்ளோம். எனவே, வரவுசெலவுத்திட்ட விடயத்திலாவது எமக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி ஒரு சட்டத்தரணி . இதற்கு முன்னர் அவர் வழக்குகளை சந்தித்துள்ளார். அவர் நிரபராதி என்றால் விடுவிக்கப்படுவார். அந்த ஜனநாயகத்தை இந்த நாட்டில் உருவாக்கியுள்ளோம். எனவே, நாம் தேர்தலுக்கு அஞ்சவில்லை. அடுத்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல் ஆகிய இரண்டையும் நடத்துவோம். அதன் பின்னர் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடத்தப்படுமென்றும் ஜனாதிபதி தெரிவிப்பு.

## வடக்கு ஆளுநரின் தாயார்... 03 ஆம் பக்கம் தொடர்ச்சி

அன்னாரின் பூதவுடல் ஜயரட்ண மலர்ச்சாலையில்இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை வெள்ளிக்கிழமை மாலை பொரள்ளையில் நல்டக்கம் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சவுதியில் சித்திரவதைக்கு... 03 ஆம் பக்கம் தொடர்ச்சி

அவ்வாறு செய்யாவிடின், தங்க நகைகளை திருடியதாக கூறி பொலிஸாரிடம் பிடித்துக் கொடுத்துவிடுவதாக மிரட்டினார். நான் விழுங்கிவிட்டேன். அப்போது என் தொண்டையில் ஒரு ஆணி சிக்கிக் கொண்டது என்னால் சுவாசிக்க முடியவில்லை. இது குறித்து இலங்கையிலுள்ள முகவர் நிலையத்துக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தினேன். அங்கிருந்த பெண் என்னை திட்டி விட்டு, அவ்வீட்டிலேயே வேலை செய்யுமாறு கூறினார்" என நாடு திரும்பிய பெண் குறிப்பிட்டுள்ளார். தர்ஷனியை அழைத்துச் செல்வதற்காக அவரது கணவர் மாரிமுத்து நிலந்த குமார கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்திருந்தார். இவர் தேங்காய் உடைக்கும் தொழில் செய்து வருகிறார்.

## போலி ரூ. 5,000 தாள்கள்... 03 ஆம் பக்கம் தொடர்ச்சி

இவரிடமிருந்து 65 போலி 5,000 ரூபா நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர் கடந்த 2021 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் வெளிவாரி பட்டக் கற்கை நெறிக்காக பதிவு செய்யாதவரென தெரிவிக்கப்படுகின்றது.

# சர்வதேச கடற்பரப்பில் இல்லாத வளங்கள் மன்னாரில் உள்ளன

## மெசிடோ நிறுவனப் பணிப்பாளர்

**தலைமன்னார் விசேட நிருபர்**

சர்வதேச கடற்பரப்பில் இல்லாத வளங்கள் மன்னார் கடற்பரப்பில் காணப்படுவதுடன், இவற்றை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கு உள்ளதாகவும், மன்னார் மெசிடோ நிறுவனப் பணிப்பாளர் யே.யாட்சன் பிகிராடோ தெரிவித்தார். இது மன்னாருக்கு கிடைத்த வரப்பிரசாதமெனவும், அவர் தெரிவித்தார்.

நவம்பர் 21ஆம் திகதி சர்வதேச மீனவர் தினத்தையொட்டி மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (21) மன்னார் நகர சபையில் நடைபெற்ற நிகழ்வின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"பொருளாதார சவால், வளங்கள் சுரண்டப்படுதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் வடமாகாண மீனவர்கள் உழைப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், மீனவர்களின் வளர்ச்சிக்காக மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான மெசிடோ நிறுவனம் 2010ஆம் ஆண்டிலிருந்து உதவி வருகின்றது. எமது கடல் வளங்களை நாம் பாதுகாப்பதில் அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஆகையால், நாம் சட்ட ரீதியான மீன்பிடி உபகரணங்களை பாவிக்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

# முல்லைத்தீவில் இரண்டு யானைகள் உயிரிழப்பு

**கிளிநொச்சி குறூப், புதுக்குடியிருப்பு விசேட நிருபர்கள்**



முல்லைத்தீவு மாவட்டத்தில் இருவேறு சம்பவங்களில் இரண்டு காட்டு யானைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (21) உயிரிழந்துள்ளன. முறுகண்டி ரயில் நிலையத்திலிருந்து சுமார் 500 கிலோமீற்றர் தொலைவில் உத்தர தேவி ரயில் மோதி யானையொன்று உயிரிழந்துள்ளது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயில் மோதியே இந்த யானை உயிரிழந்துள்ளது.

இதேவேளை ஒட்டுசுட்டான், பெரியசாளம்பன் பிரதேசத்தில் வயல்வெளியில் பாதுகாப்புக்கு இடப்பட்டிருந்த மின்சார வேலியில் அகப்பட்டு சுமார் 15 வயது மதிக்கத்தக்க கொம்பன் யானையொன்று உயிரிழந்துள்ளது

இந்த யானை உயிரிழந்ததை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு முல்லைத்தீவு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சென்று விசாரணை நடத்தியதுடன், இது தொடர்பாக பொலிஸாரும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அத்துடன், மின்சார வேலையை இணைப்புச் செய்த வயல் காணி உரிமையாளரிடமும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வடக்கின் உதயம்

# நாவற்குழியில் வெடிபொருட்கள்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி முன்னூறு வீட்டுத் திட்ட இடத்திலுள்ள தனியார் காணியொன்றிலிருந்து வெடிக்காத நிலையில் ஒருதொகுதி வெடிபொருட்களை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (21) பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர். இந்தக் காணியில் வீடு கட்டுவதற்கான அத்திபாரம் வெட்டிய போதே, இந்த வெடிபொருட்கள் தென்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் ஷெல் மற்றும் ஒருதொகை தோட்டாக்களே அடையாளம் காணப்பட்டதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# மூன்றாவது நாளாகவும் தொடர்ந்த கொக்குத்தொடுவாய் அகழ்வுப்பணி

**ஓமந்தை விசேட நிருபர்**

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வுப்பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நேற்று புதன்கிழமை (22) மூன்றாவது நாளாகவும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் அகழ்வுப்பணி தொடர்ந்தது. முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவா, தடையவியல் பொலிஸார், கிராம அலுவலர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் அகழ்வுப்பணியை முன்னெடுத்துள்ளனர். நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற அகழ்வின் போது, இரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளதுடன், இதுவரை மொத்தமாக 19 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. அத்துடன் துப்பாக்கிச் சன்னங்கள், குண்டுச் சிதறல்கள் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பின் இலக்கத்தகடும் மீட்கப்பட்டுள்ளன. இந்நிலையில், நாளை வெள்ளிக்கிழமை (24) களனிப் பல்கலைக்கழக தொல்பொருள் பீடத்தால் விசேட ஸ்கான் இயந்திரத்தின் உதவியுடன் சோதனை நடத்தப்படவுள்ளதாக, முல்லைத்தீவு மாவட்ட விசேட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவா தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வுப்பணி கடந்த செப்டெம்பர் 6ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை ஏற்கெனவே இடம்பெற்றிருந்ததுடன், இதன்போது 17 எலும்புக்கூட்டுத் தொகுதிகள், துப்பாக்கிச் சன்னங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பின் இலக்கத்தகடு, உடைகள் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் மீட்கப்பட்டிருந்தன.

யாழில் விளக்கமறியல் கைதி உயிரிழப்பு;

# மற்றைய சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலையாக அழைப்பாணை

**யாழ். விசேட நிருபர்**

திருட்டுச் சம்பவமொன்று தொடர்பாக கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த யாழ். வட்டுக்கோட்டை, சித்தங்கேணியைச் சேர்ந்த சந்தேகநபர் உயிரிழந்ததை தொடர்ந்து பிணையில் விடுவிக்கப்பட்ட மற்றைய சந்தேகநபரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக நாளை வெள்ளிக்கிழமை (24) நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கூறி யாழ். நீதவான் நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

வழக்கம்பரை பிரதேசத்திலுள்ள வீடொன்றில் இடம்பெற்ற தங்கநகை திருட்டுச் சம்பவம் தொடர்பாக சித்தங்கேணியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸை கடந்த 8ஆம் திகதி விசாரணைக்கு வட்டுக்கோட்டை பொலிஸார் அழைத்த போது, தனது நண்பருடன் பொலிஸ் நிலையத்துக்கு அலெக்ஸ் சென்ற நிலையில், இவர்களை பொலிஸார் கைது செய்து, மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, இவர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அலெக்ஸ் கடந்த 19ஆம் திகதி திடீரென உயிரிழந்ததை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்று பரிசோதனையில், உடம்பில் சித்திரைவதைக் காயங்கள் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் இது தொடர்பான வழக்கு, மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட போது, உயிரிழந்த சந்தேகநபரின் நண்பரை பிணையில் நீதிமன்றம் விடுவித்தது. இதேவேளை, அலெக்ஸ் உயிரிழந்தமை தொடர்பான விசாரணை யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையிலேயே, மற்றைய சந்தேகநபருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்க, அலெக்ஸின் சடலத்துடன் இவரது உறவினர்கள் நேற்று முன்தினம் நீதிகோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மற்றைய சந்தேகநபரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளவுள்ளதாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

அத்துடன், தேவைப்படும் பட்சத்தில் வேறு நபர்களிடமும் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# யுத்தத்தில் உயிரிழந்தோருக்காக யாழ்ப்பாணத்தில் கல்வெட்டு

**யாழ். விசேட நிருபர்**

கடந்தகால யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் நினைவுதினம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (21) ஆரம்பமாகியுள்ளதை தொடர்ந்து, யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, யாழ். நல்லூரிலுள்ள திலீபனின் நினைவாலயத்துக்கு அருகில் திரைநீக்கம் செய்யப்பட்டது.

யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் பெற்றோர் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்களிப்புடன் இந்த நிகழ்வு நடைபெற்றதுடன், இதன்போது சுடர் ஏற்றப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்



னேஸ்வரன், யாழ். மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## மலைச்சாரல்

# பலாங்கொடையில் மண்சரிவு அச்சுறுத்தல்



**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி, பலாங்கொடைப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக அப்பிரதேசத்தில் மண்சரிவு அபாயம் தொடர்ந்து நிலவி வருவதாகவும் இதனால், பொதுமக்களை மிகுந்த அவதானத்துடன் நடந்துகொள்ளுமாறும், பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

மழை காரணமாக பெட்டிகல, ஹுனுகும்புர உட்பட பல பிரதேசங்களில் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், இந்த வெள்ளம் காரணமாக பல வீடுகள் மற்றும் வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், அடை மழையைத் தொடர்ந்து கொழும்பு பதுளை பிரதான வீதியில், பம்பஹின்ன பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மண்சரிவால் வீதிப் போக்குவரத்து தடைப்பட்டதாகவும் இது தற்போது சீர்செய்யப்பட்டு போக்குவரத்து வழமைக்கு திரும்பியுள்ளது.

தரம் – 05 புலமைப்பரிசில் பரீட்சை – 2023

# எஹலியகொடை அல் ஹிக்மா வித்தியாலய மாணவர்கள் 10 பேருக்கு சிறந்த பெறுபேறு



இரத்தினபுரி மாவட்டத்தில் எஹலியகொடை கல்வி வலயத்தை சேர்ந்த இர/எஹ அல் ஹிக்மா முஸ்லிம் வித்தியாலயத்தில் 10 மாணவர்கள் சிறந்த பெறுபேற்றை பெற்று சித்தியடைந்துள்ளனர்.

ரியாஸ் அன்ஹா 165, நஸ்ரிகான் சுஹா 159, பிர்தௌஸ் அக்மல் 156, பாணி ரவீந்திரன் கவிஷாலனி 153, கியாஸ் நிமாத் 150, மிஸ்தாமில் முஸ்னா 150, நாகராஜ் லக்சானி 148, மர்சூக் இன்பாஸ் 148, ஹில்மி ஹிஷ்மா 146, இக்பால் இன்ஷாத் 144 ஆகியோரே சித்தியடைந்துள்ளனர்.

இவ்வருடம் தரம் ஐந்து மாணவர்களுக்கு கற்பித்தலில் ஈடுபட்ட எம்.ஏ.எப்.பருஹா, ஏ.ஆர்.எப். அஸ்மியா, எஸ்.றொஜ்மன் ஆகிய ஆசிரியர்களுக்கு பாடசாலை அதிபர் ஏ.பி.எம்.ராமிஸ் மற்றும் ஆசிரியர் குழாம் உட்பட பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் நன்றி தெரிவித்ததுடன், மாணவர்களுக்கு பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2023.11.21
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5305
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,076,000.00
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 9 6 9 5 3 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3547
சீட்டிழுப்பு திகதி 2023.11.21
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,183,571.20
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 17 35 40 79
விசேட எழுத்து K
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 58677

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1653
2023.11.21
38391
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 415,327,284.00
ஆங்கில எழுத்து L
சுப்பர் இலக்கம் 17
வெற்றி இலக்கங்கள் 42 66 74 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

லக்கி 7
திகதி 2023.11.21
சீட்டிழுப்பு இலக்கம் 0131
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 0 5 0 9 9 1
L7 இலக்கம் 3 6
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 20,000,000.00

ராசி சுப பலன்
திகதி 2023.11.21
சீட்டிழுப்பு இலக்கம் 614
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,741,367.60
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 04 21 37 47
தனயோக இலக்கம் 04759
நாளுக்கான விதி எண் 25

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1335
2023.11.21
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 121,614,961.60
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 40 42 47 62
விசேட எழுத்து C
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 48057


# மாத்தளை பாக்கியம் தேசிய கல்லூரி பரிசளிப்பு விழா நாளை

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை பாக்கியம் தேசிய கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா, அக்கல்லூரி அதிபர் மஞ்ஜுலா எம்.சந்திரசேகரம்பிள்ளை தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை (24) காலை 9.30 மணிக்கு மாத்தளை சர்வதேச மகாத்மா காந்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.கே.நவரத்னராஜா பிரதம அதிதியாகவும் மாத்தளை கோட்டக் கல்விக் காரியாலயத்தின் பணிப்பாளர் மொனிகா கோமஸ் கௌரவ விருந்தினராகவும் கண்டி தேசிய வைத்தியசாலையின் பேச்சு மொழி சிகிச்சைக்கான விசேட நிபுணர் தனூஜா சுதர்சன் விசேட அதிதியாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கடந்த 2022ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள், தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற பரீட்சைகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் ஆகியோர் சான்றிதழ்கள் மற்றும் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.


## தென் மாகாண சபை

### தென் மாகாண பிரதான செயலகம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

### தென் மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு உணவு வழங்கும் சேவையை நடாத்திச் செல்லல் - 2024

**(SPC/CS/NCB/23/04)**

தென் மாகாண பிரதான செயலகத்திற்கு இணைவான காலி வக்வெல்லயில் அமைந்துள்ள முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு 2024-01-01ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு உணவை வழங்குவதற்கு போதுமான நிதி வசதி மற்றும் இயைபுடைய துறையில் தகுதி மற்றும் அனுபவம் கொண்ட நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இதன்பொருட்டு விலைமனுக்களைச் சமர்ப்பிக்க விரும்பும் நிறுவனங்கள் தென் மாகாண பிரதான செயலாளருக்கு எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்து, 2023-11-24ஆம் திகதி முதல் 2023-12-07ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி காலி எஸ்.எச். தஹநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள தென் மாகாண பிரதான செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது 300,000.00 ரூபா பெறுமதியான 2024 ஏப்ரல் மாதம் 08ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள எந்தவொரு வங்கியிலிருந்தும் தென் மாகாண பிரதான செயலாளர் பெயரில் பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறி அல்லது பிரதான செயலகத்தின் கணக்குப் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் வழங்கப்படும் பற்றுச்சீட்டு சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும். காசுக் கட்டளை மற்றும் வங்கிக் கட்டளையாக சமர்ப்பிக்கப்படும் பிணை முறிகள் நிராகரிக்கப்படும்.

04. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுப் படிவங்களை 2023-12-08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் செயலாளர், பிரதான செயலகம், எஸ்.எச். தஹநாயக்க மாவத்தை, காலி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து பிரதான செயலகத்தின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்து அங்கு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

05. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம்: **SPC/CS/NCB/23/04** மற்றும் ''முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்திற்கு உணவு வழங்குவதற்கான விலைமனு - 2024'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் 2023-12-08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரம் வாய்ந்த பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். தாமதமாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும் என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

**கவனிக்கவும்:** கேள்வி அறிவித்தலை தென் மாகாண பிரதான செயலகத்தின் www.cs.sp.gov.lk எனும் இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதான செயலகம்,**
**தென் மாகாணம்.**
**தொலைபேசி இல.: 091-4944016/091-4946368**
**மின்னஞ்சல்: procurementplan@gmail.com**
**திகதி: 2023-11-22.**

# கிழக்கின் குரல்



கிழக்கு மாகாண பீ.எஸ்.டி.ஜீ திட்டத்தின் கீழ்

## நிந்தவூர் ஆயுர்வேத வைத்தியசாலையில் புதிய சிகிச்சைப் பிரிவுகள்

(ஒலுவில் விசேட நிருபர்)

கிழக்கு மாகாண பீ.எஸ்.டி.ஜீ திட்டத்தின் கீழ் சுமார் 18 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் புதிதாக நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட மூளை வளர்ச்சி குறைந்த சிறுவர் பராமரிப்பு பிரிவு மற்றும் பக்கவாத சிகிச்சைப் பிரிவு என்பன மக்களின் பாவனைக்காக அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

கல்முனைப் பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும், நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபீல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டு புதிய இரு சிகிச்சைப் பிரிவுகளையும் வைபவரீதியாக திறந்து வைத்தார்.



சுதேச மருத்துவத் துறையில் கிழக்கு மாகாணத்தில் முதல் முறையாக நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் மூளை வளர்ச்சி குறைந்த சிறுவர்களுக்கான பராமரிப்புப் பிரிவு மற்றும் பக்கவாத சிகிச்சைப் பிரிவு என்பன திறந்து வைக்கப்பட்டுள்ளதாக, வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.ஏ.நபீல் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கு சுதேச மருத்துவ திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத சத்துமா பிஸ்கட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எம். அப்துல் லத்தீப் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ள சிகிச்சைப் பிரிவுகளால் இப் பிராந்தியத்திலுள்ள மக்கள் பெரும் பயன் பெறுவார்கள் என வைத்திய அத்தியட்சகர் தெரிவித்தார்.

## குழந்தைகளுக்கான விளையாட்டுக்கள் ஆரோக்கியமான பிரஜைகளை உருவாக்கும்

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் சோபியா வில்கின்சன்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

குழந்தைகளுக்கான விளையாட்டுகள் மற்றும் தொடர்பாடலை விருத்தி செய்வதன் மூலம் ஆரோக்கியமான பிரஜைகளை உருவாக்க முடியுமென அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் சோபியா வில்கின்சன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தை நேற்றுமுன்தினம் திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பில் குழந்தைகளை பராமரிப்பதற்கான நிலையமொன்று இல்லாமையால் தொழிலுக்கு செல்லும் பெற்றோர் பல்வேறு இன்னல்களை அனுபவித்தனர். இந்நிலையில் மாவட்டத்தின் முதலாவது குழந்தைகள் பராமரிப்பு நிலையம் தற்போது திறக்கப்பட்டுள்ளமை பெரும் உதவியாகவிருக்கும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

சென்.மேரிஸ் பாலர் பாடசாலை குழந்தைகள் பராமரிப்பு நிலைய





பொறுப்பதிகாரி திருமதி. ரஜினி பிரான்சிஸ் தலைமையில் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய நிகழ்வில், சர்வோதயா அமைப்பின் தலைவர் வின்யா ஆரியரத்ன, கொமர்சல் வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் சனத் மானதுங்க, சர்வதேச நிதி நிறுவனத்தின் இலங்கைக்கான முகாமையாளர் அலிஜன்ரொ, நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர் நிமாலி குமாரி (சர்வோதயம்), மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் (சர்வோதயம்) வேனுஸ்ரீ புவனேந்திரராஜா உள்ளிட்ட சர்வோதயம் மற்றும் சென்.மேரிஸ் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது பராமரிப்பு நிலையம் அதிதிகளினால் நாடா வெட்டி உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டதுடன், சிறார்களின் கண்கவர் நடனம் மற்றும் பாடல்கள் என்பன நிகழ்வை அலங்கரித்ததுடன், சிறார்களினால் அதிதிகளுக்கு அன்பளிப்புகளும் வழங்கி வைக்கப்பட்டன.

## சம்மாந்துறை கோட்டக்கல்வி பணிப்பாளராக நசீர் பதவியேற்பு

(காரைதீவு குறூப் நிருபர்)

சம்மாந்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளராக இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த ஏ. நசீர் நேற்று (22) புதன்கிழமை பதவியேற்றார்.

பதவியேற்பு நிகழ்வு சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா முன்னிலையில் நேற்று கோட்டக் கல்விப்பணிமனையில் நடைபெற்றது.

ஏலவே சம்மாந்துறை கோட்டக்கல்வி பணிப்பாளராக இருந்து தற்போது சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் அதிபராகவிருக்கும் எம்.ஜனோபரிடமிருந்து புதிய பணிப்பாளர் நசீர் ஆவணங்களை பொறுப்பேற்றார்.

## கல்முனை சாஹிரா கல்லூரி மாணவன் சர்வதேச கட்டுரைப் போட்டியில் மூன்றாமிடம்

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

கல்முனை சாஹிராக் கல்லூரி மாணவன் எம்.ரி.எம்.அர்மாஸ் ஐக்கிய நாடுகள் அமைப்பின் United Nations Association Coventry கிளையினால் நடாத்தப்பட்ட சர்வதேச கட்டுரைப் போட்டியில் 'அமைதியான உலகிற்கு இளைஞர்களின் பங்களிப்பு' என்னும் தொனிப்பொருளில் ஆங்கில மொழி மூலமான கட்டுரைப் போட்டியில் பங்குபற்றி மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார். சர்வதேசரீதியில் 15 - 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான நிகழ்நிலை மூலமான போட்டியில் பங்குபற்றியே இம்மாணவன் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார். மாணவனின் சாதனைக்காக சர்வதேச தரத்திலான சான்றிதழும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பணபரிசும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் United Nations Association Coventry கிளையினால் வழங்கப்பட்டுள்ளது.



## களுவாஞ்சிக்குடியில் நீர் வெறுப்பு நோய் விழிப்புணர்வு நிகழ்வு



(காரைதீவு குறூப் நிருபர்)

சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார, மிருக வைத்திய சேவைப் பிரிவின் ஏற்பாட்டில் நீர் வெறுப்பு நோய் விழிப்புணர்வு நிகழ்வு களுவாஞ்சிக்குடியில் அண்மையில் நடைபெற்றது.

'இலங்கையை நீர்வெறுப்பு நோயற்ற ஒரு நாடாக மாற்றுவோம்' எனும் வேலைத்திட்டத்துக்கமைய விழிப்புணர்வு நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நடைபெற்றது. பொதுச் சுகாதார மிருக வைத்திய சேவைப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர். தர்ஷானி திசாநாயக்க விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டு விசர்நாய்க்கடி நோய், நோய்த்தடுப்பு தொடர்பான வழிமுறைகள், எம்மால் கடைப்பிடிக்க வேண்டிய சமூகப் பொறுப்புக்கள் மற்றும் பிற விலங்குகளின் நோய்த் தொற்றுகளிலிருந்து தவிர்ப்பதற்கான வழிமுறைகள் என்பன தொடர்பாக விளக்கமளித்தார்.

இவ்விழிப்புணர்வு நிகழ்வில் பொதுச் சுகாதார மிருக வைத்திய சேவைப் பிரிவின் உத்தியோகத்தர்கள், களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், (திட்டமிடல்), சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



திருகோணமலையில் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள தேசிய சாரணர் ஜம்போரி தொடர்பாக அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரண ஆசிரியர்களுக்கான கூட்டம் மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை தலைமையில் அக்கரைப்பற்றில் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம்.

(படம் பாலமுனை தினகரன் நிருபர்

## மட்டக்களப்பில் அனர்த்த குறைப்பு வேலைத்திட்டம்

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனர்த்தங்களை தடுக்கும் நோக்குடன் விசேட வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் மாவட்ட செயலகம் என்பன இணைந்து இளைஞர் யுவதிகளுக்கிடையிலான புதிய வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் எஸ்.எம். ரியாஸ் தலைமையில் நடைபெற்ற முகாமைத்துவ வேலைத்திட்டத்தில் மட்டக்களப்பு காத்தான்குடி ஆரையம்பதி ஆகிய மூன்று பிரதேச செயலகங்களிலிருந்து 90 இளைஞர் யுவதிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். காத்தான்குடி பிரதேச செயலாளர் எம்.உதய ஸ்ரீதர், ஆரையம்பதி பிரதேச செயலாளர் திருமதி என். சத்தியா ஆனந்தி, காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி றிப்கா சபீன் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில்...



### நான்கு வருடங்களின் பின்னர் அக்/பதூர் வித்தியாலயத்தில் மாணவியொருவர் சித்தி

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்குட்பட்ட அக்/பதூர் வித்தியாலயத்தில் நான்கு வருடங்களின் பின்னர் புலமைப்பரிசில் பரீட்சையில் இஸ்ஸடீன் பாத்திமா இஷானா என்ற மாணவி சித்தியடைந்துள்ளார்.



கந்தளாய் கல்வி வலயத்துக்குட்பட்ட தி/அர்ரவூப் வித்தியாலயத்தில் முஹம்மது முக்ஸீத் பாத்திமா சீமா என்ற மாணவி 153 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதாக பாடசாலை முதல்வர் ஜே.நஸீம் தெரிவித்தார்.

(படம்:கந்தளாய் தினகரன் நிருபர்)



மருதமுனை அல்மதீனா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அண்மையில் பாடசாலை சமூகத்தால் கௌரவிக்கப்பட்டனர்.

### அக்கரைப்பற்று ஸாஹிறா, அஸ்–ஸிறாஜ் ஜுனியர் பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேறு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அக்கரைப்பற்று அக்/ஸாஹிறா வித்தியாலயத்தில் 28 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன் அதில் சாஜீத் ஹஸீயா ஷீனத் என்ற மாணவி 170 என்ற அதிகூடிய புள்ளிகளை பெற்றுள்ளார். அதேபோல், அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் ஜுனியர் கல்லூரியில் 22 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன் அதில் முஹம்மட் நிசாம் சபீஹா என்ற மாணவி 172 புள்ளிகளை பெற்றுள்ளார்.







தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் புனித திரேசா பெண்கள் வித்தியாலயம் சிறப்பான பெறுபேறுகளை பெற்றுள்ளதாக பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. புனித திரேசா பெண்கள் வித்தியாலய மாணவி ஜுட் றொட்னி ஜனிபர் 153 புள்ளி பெற்று சித்தியடைந்துள்ளார். சித்தியடைந்த மாணவர்களையும் அதிபர், ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

(படம் புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை மாணவி ரேஷ்மிதா 147 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

(படம்; பாண்டிருப்பு தினகரன் நிருபர்)



(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

கல்முனை சேனைக்குடியிருப்பு கணேச மகா வித்தியாலயத்தில் தேசிய மட்ட இசை நாடக போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற மாணவர்கள் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலய அதிபர் பி. கமலநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கோட்டக் கல்வி பணிப்பாளர் எஸ். சரவணமுத்து கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

# முன்னேற்றப் பாதையில் வீறுநடைபோடும் ஹொரேதுடுவை முஸ்லிம் வித்தியாலயம்

## பொன்விழாவை நோக்கிய பயணம்

தனது பொன்விழாவை விரைவில் கொண்டாடவுள்ள சாதனைமிக்க வரலாற்றுப்பாதையில் பயணிக்கும் ஒரு பாடசாலைதான் பாணந்துறை ஹொரேதுடுவை முஸ்லிம் வித்தியாலயம். இப்பாடசாலை கொழும்பில் இருந்து சரியாக 13 மைல் தூரத்தில் அமைந்துள்ளது.



களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை கல்வி வலயத்தின் பாணந்துறை கோட்டக்கல்விக் காரியாலயத்திற்கு உட்பட்ட பல்லின கலாசார மரபுகளும் தமக்கேயுரிய பாரம்பரியங்களும் நிறைந்த இடம்தான் இந்த ஹொரேதுடுவை என்று அழைக்கப்படும் கிராமம் ஆகும்.

கொழும்பில் இருந்து தென் பகுதிக்கு செல்லும்போது கொழும்பு மாவட்டம் நிறைவு பெற்றதும் களுத்துறை மாவட்டம் ஆரம்பமாகிறது. பழைய காலி வீதியில் பயணிக்கும்போது களுத்துறை மாவட்ட ஆரம்பத்தில் முதல் சந்திக்கும் தமிழ் மொழிப்பாடசாலை இந்த ஹொரேதுடுவை முஸ்லிம் வித்தியாலயமாகும்.



பழைய காலி வீதி, பொல்கொடவாவி இவை இரண்டும் இப்பாடசாலையின் எல்லைகளாகும். 1952ஆம் ஆண்டு ஹொரேதுடுவை பிரதேசத்தில் அமைந்துள்ள சிங்கள மொழிப்பாடசாலையான சந்திர சேகர மகா வித்தியாலயத்தில் ஒரு பிரிவில்தான் இப்பாடசாலை தமிழ் மொழியில் இயங்கி வந்தது. இப்பிரிவிற்கு தலைமை ஆசிரியராக பணியாற்றிய பெருமை அமரர் நல்லையா அவர்களையே சாரும்.

மாணவர்களின் எண்ணிக்கை காலப்போக்கில் அதிகரிக்கவே இடநெருக்கடி தலைதூக்கியது. அத்துடன் தமது பிள்ளைகள் கல்வித்துறையில் முன்னேற்றம் காண வேண்டும், இது மார்க்க அடிப்படையில், தமது கலாசாரங்களை பேணி நிறைவேற்றப்பட வேண்டும் என்பதையும் ஹொரேதுடுவை கிராம மக்கள் உணரத் தொடங்கினர்.

ஹொரேதுடுவை கிராம சிறார்களுக்கு கல்வி அறிவை புகட்டும் மகத்தான பணியை செய்து கொண்டிருந்த அண்மைய கிராமமான கொறகானை கிராமத்தைச் சேர்ந்த ஹேனமுல்லையில் வசித்த மர்ஹூம் ஏ.ஐ.எம். சுஹைர் ஆசிரியர் கிராம மக்களுடன் கலந்துரையாடினார். தமக்கேயுரிய அடையாளங்கள் கொண்ட ஒருதனித்த பாடசாலை அவசியம் என்பதை சகலரும் ஏற்றுக் கொண்டனர்.

அக்கால சிரேஷ்ட அரசியல்வாதியும் பாணந்துறை தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும் அந்நாளில் போக்குவரத்து அமைச்சராக இருந்த அமரர் லெஸ்லி குணரத்னவுடன் நெருக்கமான தொடர்பு வைத்திருந்த சுஹைர் மாஸ்டர் என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் ஏ.ஐ.எம். சுஹைர் அவர்கள், கிராம பிரமுகர்கள் சிலரை அழைத்துச்சென்று அமைச்சர் லெஸ்லி குணரத்னவிடம் ஹொரேதுடுவை கிராம மக்களின் தேவையை முன்வைத்தார்.

கல்விக்கென தன்னை அர்ப்பணித்து சேவைகள் புரிந்து கொண்டிருந்த லெஸ்லி குணரத்ன தனது அரசியல் வரலாற்றில் முஸ்லிம் பாடசாலைகளுக்கு காணிகள் பெற்றுக்கொடுத்து, ஆசிரியர் குறைபாடுகளை கேட்டறிந்து உதவிகள் புரிந்து பாடசாலைகளை முன்னேற்றி வந்தவருக்கு ஹொரேதுடுவை கிராம மக்களின் தேவை சரியெனப்படவே செயலில் ஈடுபட்டார். கல்வித்திணைக்கள அங்கீகாரத்தோடு 1973 ஆம் ஆண்டு அன்றைய தேவைக்கேற்ப தற்போது பாடசாலை அமைந்துள்ள இடமும் கட்டடமும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.



இப்பாடசாலைக்கென ஹொரேதுடுவை, மக்கள் பிரமுகர்களுடன் முன்நின்று செயல்பட்ட மர்ஹூம் ஏ.ஐ.எம். சுஹைர், இப்பாடசாலையின் முதல் தலைமை ஆசிரியராக பணியாற்றினார். களுகங்கையின் கிளையாறு பொல்கொடவாவிக்கு அருகில் மிகவும் செழிப்பான பச்சைப்பசேலென்ற குளிர் காற்று வீசும் இயற்கைச் சூழலிலே அமைந்துள்ள இப்பாடசாலை பல பட்டதாரிகளையும் ஆசிரியர்களையும் அரச ஊழியர்களையும் பாதுகாப்பு அதிகாரிகளையும் அதிபர்களையும் உருவாக்கி இப்பகுதிக்கு பெருமை தேடிக்கொடுத்துள்ளது.

இப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் வேறு பாடசாலைகளிலும் பலவகையிலும் முன்னணியில் திகழ்வதையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும் . மர்ஹூம் ஜனாப் ஏ.ஐ .எம் . சுஹைர் அதிபர் அவர்களைத் தொடர்ந்து பாடசாலையை பொறுப்பேற்ற சகல அதிபர்களும் ஆசிரியர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவ மாணவியர் சங்கங்கள், பெற்றோர்கள் ஊரின் முக்கிய நிறுவனங்கள் என சகலரதும் அர்ப்பணிப்புடனும் பாடசாலையின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் சேவையாற்றியுள்ளார்கள் என்பதை மகிழ்வோடு நினைவு கூர்கிறோம்.



மர்ஹூம் ஏ.ஐ.எம் . சுஹைர் அதிபர் அவர்களைத் தொடர்ந்து கௌரவ அதிபர்களாக மர்ஹூம் எம்.ஐ.எம். மன்சூர், மர்ஹூம் ஏ. பகீர் மொஹம்மட் , ஜே.எம். பிர்தௌசியா, ஐ.ஏ.காதர், என்.எம்.அஜ்மல், எம்.எஸ்.எம் அஷ்ரப், எம்.எஸ்.ஏ.எம்.முபாரக், என பலரும் சேவையாற்றி பாடசாலைக்கென தமது சிறப்பான பங்களிப்பினை வழங்கியிருந்தனர்.

கல்வியில் மாத்திரமின்றி விளையாட்டுக்கள், மாணவர் பாராளுமன்றம், மும்மொழிகளிலும் நடக்கும் போட்டி நிகழ்ச்சிகள் என சகல இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் தனக்கென தனித்துவ அடையாளங்களை, வெற்றிகளை, சாதனைகளை தன் வரலாற்றின் நெடுகிலும் பதித்த வண்ணம் வருகிறது.

★ **அவற்றுள் சிலதை மாத்திரம் நினைவு கூறுகிறோம்;**

1. கடந்த ஆறு வருடங்களாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் களுத்துறை மாவட்டத்திலேயே தமிழ்மொழிப் பிரிவில் கூடிய சித்தி வீதங்களை ஈட்டிய பாடசாலைகளில் ஒன்று என்பதை பெருமையுடன் நினைவு கூருகிறோம்.

2. க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சிறந்த சித்திகளைப் பெற்று உயர்தர கற்கைக்காக அண்மைய பாடசாலைக்குச் சென்று உயர்தர பரீட்சையிலும் சிறந்தபெறுபேறுகளை பெற்றுக்கொடுக்கும் மாணவ, மாணவிகளை எமது பாடசாலை உருவாக்கி வருகிறது.

3. கராத்தே போட்டிகளில் தேசிய ரீதியில் பல வெற்றிகளைப் பெற்றதோடு தென்னாசிய போட்டிகளிலும் பங்குபற்றி பதக்கங்களை பெற்று பாடசாலைக்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

4. இஸ்லாமிய தின நிகழ்ச்சிகளில் வலய மற்றும் மாவட்ட மட்டங்களில் சிறந்த வெற்றிகளைப் பதிவு செய்து தேசிய ரீதியிலான போட்டிகளிலும் பங்குபற்றும் வாய்ப்பைப் பெறவும் தவறவில்லை.

5. மாகாண மட்ட ஆங்கிலத் தின நாடகப் போட்டிகளில் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களைத் தொடர்ந்தும் 03 வருடங்கள் பெற்று சாதனை நிலை நாட்டியதையும் நினைவுபடுத்துகிறோம்.

★ **நூல் நிலையம் ; வாசிப்பு மனிதனை முழுமையாக்கும்**



அதிபர்
S.H.முத்தலிப்
2021முதல் இன்று வரை

வாசிப்பு மாணவர்களை பல்திறமை கொண்டோராக உருவாக்கும். அந்த வகையில் வாசிப்புப் பழக்கம் அருகிவரும் இந்த யுகத்தில் பாடசாலையின் வாசிகசாலை மாணவர்களால் நல்ல முறையில் வினைத்திறன் மிக்கவகையில் பயன்படுத்தப்படுகிறது. அதற்கான வழிகாட்டுதல்கள் ஆசிரியர்களால் வழங்கப்படுகின்றன.

பாடசாலையின் சிறியதொரு நூல் நிலையமே இருந்தாலும் பல்துறை சார் புத்தகங்கள் மாணவர்களின் வாசிப்புப்பசிக்கு பெரும் தீனியாக இருப்பதே உண்மை. இந்த நூலகத்திற்கு அதன் விரிவாக்கத்திற்கும் உங்களின் பங்களிப்பு இருந்தால் எமது மாணவர்களின் வாசிப்பு திறமையோடு கட்டியெழுப்பும் சாதனைகள் தொடரவே செய்யும்.

ஆகவே, நூலக வளர்ச்சிக்கு உதவிக்கரம் நீட்டுபவர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

வளர்ந்துவரும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உலகில் தகவல் தொழிநுட்பத்தில் மாணவர்கள் சிறந்து விளங்க வேண்டும் என்ற பாடத்திட்டத்தோடு இணைந்த அறிவும் முக்கியமானவை.

அந்தவகையில் பாடசாலையில் இருக்கும் கணினி அறை மாணவர்களின் தொழிநுட்ப பயன்பாட்டு அறிவை வளர்க்கும் பெரும் கருவியாக இருப்பதே உண்மை. கணினி அறையினை முறையாகவும் முழுமையாகவும் பயன்படுத்தும் எமது மாணவர்களை நாளைய தொழில்நுட்ப உலகிற்கு தயார்படுத்தும் களமாகவே இது காணப்படுகிறது.



எமது நாட்டின் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு ஊடகக்கழக மாணவர்களுக்கு பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. ஊடக கழகத்தின் செயற்பாடு அதன் பயிற்சிகள் என்பவற்றின் பொறுப்பாசிரியராக இருக்கும் ஆசிரியர் சாகிர் முகம்மத் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவை மற்றும் தமிழ்ச்சேவை ஆகியவற்றின் பகுதிநேர அறிவிப்பாளராகவும் கலைஞராகவும் இருப்பது எமது முயற்சிகளுக்கும் அபிவிருத்தி திட்டங்களுக்கும் பெரும் பக்கத் துணையாகவே அமைகிறது.

கற்பித்தல் செயற்பாடுகளுக்கு தேவையான விதத்தில் ஸ்தாபிக்கப்பட்ட நவீன 'smart class room' மற்றும் விஞ்ஞான ஆய்வுகூடம் என்பன பெரும்பங்களிப்பினை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்குகிறது என்பது ஆரோக்கியமாற்றத்தின் அடையாளமாக குறிப்பிடலாம்.

அந்தசெயற் திட்டத்தின் ஓர் அங்கமாக இன்று (23.11.2023) காலை 9.00 மணிக்கு 'போதைப்பொருட்களை தவிர்ப்போம்' என்ற தொனிப்பொருளில் ஆக்கத்திறன் கண்காட்சி மற்றும் வீதி நாடகம் என்பன நடைபெறுகின்றன.

இந்த நிகழ்ச்சியில் எமது பாடசாலையின் செயற்பாடுகளை முன்னேற்றங்களை மற்றும் அடைவுகளை தேசிய ஊடகங்களில் கொண்டு வருகின்ற அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற ஊடகவியலாளர்களையும் நாம் பாராட்டுவதோடு எமது பாடசாலையின் ஒட்டுமொத்த வளர்ச்சியிலும் பங்களிப்புச் செய்கின்ற எமது ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிறைவேற்றுக்குழுவினர், பழைய மாணவ, மாணவிகள் மற்றும் நலன் விரும்பிகள் என அனைவருக்கும் அதிபர் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறார். இப்படியான தனித்துவ அடையாளங்களோடு கல்விப்பாதையில் முன்னேறிச் செல்லும் ஹொரேதுடுவை முஸ்லிம் வித்தியாலயம் நாளைய தலைவர்களின் இன்றைய கல்விக் களம் என்பதே வெள்ளிடை மலை. நீங்களும் வாருங்கள் எங்களோடு ஒன்றிணையுங்கள்.

**தொகுப்பு : கலாபூஷணம் எம். கே. எம். அஸ்வர்**



## பாடசாலை அதிபர்கள்



A.I.M. சுஹைர்
1973/1974



M . I . M மன்சூர்
1974/1975



A.பக்கீர் முகம்மத்
1975/1993



J.M. பிர்தௌசியா
1993 – 2000



I.A காதர்
2000 – 2007



N.M அஜ்மல்
2006/2007



M.S.M.அஷ்ரப்
2007/2015



M.S.A.M. முபாரக்
2015/2021

## கௌரவிக்கப்படவுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர்கள்...



சிரேஷ்ட ஊடகவியலாளர்
எம்.கே.எம். அஸ்வர்



சிரேஷ்ட ஊடகவியலாளர்
அஷ்ரப் ஏ சமத்



சிரேஷ்ட ஊடகவியலாளர்
ஏ.எல்.எம். அஸ்வர்



சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.எல்.எம். சத்தார்



சிரேஷ்ட தயாரிப்பாளர்
மொஹமத் ரலீம் (SLBC)

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## இலங்கை துறைமுக அதிகாரசபை

### பதவி வெற்றிடங்கள்

இலங்கை துறைமுக அதிகாரசபையில் கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு வேண்டப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி: பொறியியலாளர் (சிவில்), பொறியியலாளர் (மின்சாரம்), பொறியியலாளர் (இயந்திரம்)**
**(மத்திய முகாமைத்துவ முதலாம் மட்டம்)**

**(அ) தகுதித்திறன்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பொறியியல் விஞ்ஞானப் (சிவில் / மின்சாரம் / இயந்திரம்) பட்டமொன்று அல்லது இலங்கை பொறியியல் நிறுவனத்தில் பெற்றுக் கொண்ட அதற்குச் சமனான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**(ஆ) சம்பளம் :**

சம்பள வகையீடு : 4:1 (MLM1)
ஆரம்பச் சம்பளம் : ரூ. 74,120 /=
சம்பள ஏற்றம் : ரூ. 1,380 /=

கொடுப்பனவுகள் அடங்கலாக மாத மொத்தச் சம்பளம் அண்ணளவாக ரூ.148,000 /= அளவினதாக இருக்கும்.

**குறிப்பு:** பொறியியலாளர் பதவி தொடர்பில் பொறியியல் சார்ந்த (A Eng) வகையீடு அல்லது அதற்கு மேற்பட்ட வகையீட்டின் கீழ் இலங்கை பொறியியல் கவுன்சிலில் (ECSL) பதிவு கட்டாயமாகும்.

**02. பதவி: பிரத்தியேக செயலாளர் (கொழும்பு/ திருகோணமலை)**
**(கனிஷ்ட முகாமைத்துவ மட்டம்)**

**(அ) தகுதித்திறன்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பட்டமொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட செயலாளர் நடவடிக்கைகள் தொடர்பான டிப்ளோமா/ ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா பெற்றிருத்தல். (டிப்ளோமா பாடநெறி கால எல்லை ஆகக் குறைந்தது ஒரு (01) வருடமாக இருத்தல் வேண்டும்.)

**அத்துடன்**

அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் பிரத்தியேக செயலாளர் பதவியில் ஐந்து (05) வருட அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

**(ஆ) சம்பளம் :**

சம்பள வகையீடு : 5 (JLM)
ஆரம்பச் சம்பளம் : ரூ. 60,050 /=
சம்பள ஏற்றம் : ரூ. 1,150 /=

கொடுப்பனவுகள் அடங்கலாக மாத மொத்தச் சம்பளம் அண்ணளவாக ரூ.134,000 /= அளவினதாக இருக்கும்.

**குறிப்பு 1:** விண்ணப்பதாரிகள் சுய புத்தூக்கமுடையவராக இருக்க வேண்டியதுடன் அறிக்கைகள், கடிதங்கள் போன்றவற்றை வரைவு செய்தல் மற்றும் ஏனைய சகல செயலாளர் நடவடிக்கைகளையும் சுயமாக நிறைவேற்ற முடியுமான ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழி தொடர்பான சிறந்த அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு 2:** பிரத்தியேக செயலாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் துறைமுகம் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**வயதெல்லை**

45 வயதை விடக் குறைந்தவராக இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லை அரச சேவை அல்லது நியதிச்சபை கூட்டுத்தாபனங்களின் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல)

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் "பிரதான மனித வள முகாமையாளர், மனிதவளப் பகுதி, இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக 2023.12.07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களம் / கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேலே பதவிகளுக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்கள / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் அதில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை புகையிரத சேவைகள்

**ஒப்பந்த இல. SRS/F.7814**

### 02 வருட காலத்திற்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலுள்ள நிரந்தரமான சிற்றுண்டிச்சாலை அலகுகள் மற்றும் நீண்டதூர புகையிரதங்களின் நடமாடும் சிற்றுண்டிச்சாலைகளை வாடகைக்கு வழங்குதல்

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலுள்ள நிரந்தரமான சிற்றுண்டிச்சாலை அலகுகள் மற்றும் நீண்டதூர புகையிரதங்களினுள் நடமாடும் சிற்றுண்டிச்சாலைகளில் உணவு மற்றும் பானங்களை விற்பனை செய்வதற்காக உணவக சேவைத் துறையில் குறைந்தபட்சம் ஐந்து வருடகால சித்திகரமான அனுபவத்தைக் கொண்ட பொதுமக்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

நிரந்தர மற்றும் நடமாடும் சிற்றுண்டிச்சாலை அலகுகள் இரண்டும் ஒற்றை அலகாக மதிப்பீடு செய்யப்பட்டு கையளிக்கப்படும்.

சமையலறை மற்றும் பேக்கரி சகிதமான நிரந்தர சிற்றுண்டிச்சாலை அலகுகள்

- கொழும்பு கோட்டையிலுள்ள 1ஆம் மற்றும் 2ஆம் வகுப்பு சிற்றுண்டிச்சாலை (03ஆம் இலக்க மேடை)
- கொழும்பு கோட்டையிலுள்ள 3ஆம் வகுப்பு சிற்றுண்டிச்சாலை (03ஆம் இலக்க மேடை)
- இரண்டு கடலை விற்பனை கூடங்கள் (03ஆம் இலக்க மேடை)
- சிறிய விற்பனை கூடங்கள் (2 மற்றும் 3ஆம் இலக்க மேடைகள்)
- சிறிய விற்பனை கூடங்கள் (5 மற்றும் 6ஆம் இலக்க மேடைகள்)
- புகையிரத நிலையத்திற்குப் பின்னாலுள்ள சிறிய விற்பனை கூடம் (வெளியேறும் வாசலுக்குப் பக்கத்தில் - 100 சதுர அடிகள்)
- சமையலறை மற்றும் பேக்கரி

நடமாடும் சிற்றுண்டிச்சாலை அலகுகள்

நீண்டதூர சுற்று (போக வர) புகையிரத பயணம்

- 1045/1046 பதுளை இரவு தபால்
- 1005/1006 பொடி மெனிக்கே
- 1015/1016 உடரட்ட மெனிக்கே
- 6079/6080 மீனகயா நகர்சேர் கடுகதி
- 1023/1024 டிகிரி மெனிக்கே
- 4077/4078 யாழ் தேவி
- 4089/4090 யாழ்ப்பாண இரவு தபால்
- 4021/4022 யாழ்ப்பாண நகர்சேர் கடுகதி (A/C)
- 1019/1020 கண்டி நகர்சேர் கடுகதி
- 1029/1030 கண்டி நகர்சேர் கடுகதி (A/C)
- 1033/1034 கண்டி கடுகதி

மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 10,000.00 ரூபாவை (பத்தாயிரம் ரூபா) மட்டும் செலுத்துவதன் பேரில் 2023-12-19ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்திலிருந்து பெறப்படக்கூடியதான படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2023-12-20ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவுறும் என்பதுடன் முடிவுறுத்தல் காலம் முடிவடைந்தவுடன் கொழும்பு-10, ஓல்கொட் மாவத்தை, பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நேரத்திற்கு ஒன்றில் முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்), இலங்கை புகையிரத சேவைகள், பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கொழும்பு-10, ஓல்கொட் மாவத்தை, பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும்.

கொழும்பு-10, ஓல்கொட் மாவத்தை, பிரதிப் பொது முகாமையாளர் பெறுகைகள் அலுவலகத்தில் 2023-12-13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று இடம்பெறும்.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் சிற்றுண்டிச்சாலைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு விலைமனுதாரர்களுக்கு அனுமதி வழங்கப்படும். இது தொடர்பாக பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம்) அவர்களைத் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்: 011-4600944

விலைமனுக்களுடன் 2,500,000.00 (இருபத்தைந்து இலட்சம் ரூபா) ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது ஒன்றில் இலங்கைப் புகையிரத சேவைகள் தலைமை கணக்காளரால் ஏற்றுக்கொள்ளக்கூடிய செல்லுபடியாகும் பண அலகாக வைத்தல் வேண்டும் அல்லது இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் வங்கி உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும். அந்த வகையில் வைக்கப்படும் வங்கி உத்தரவாதமானது ஒப்பந்தம் செயற்படும் 06 மாத காலத்திற்கு செல்லுபடியாகும் நிபந்தனையற்ற உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.

இலங்கை புகையிரத சேவையின் ஊழியர்கள் அல்லது அவர்களின் நேரடி குடும்ப அங்கத்தவர்கள் இந்தக் கேள்வியில் பங்குபற்றுவதற்கு தகுதியற்றவர்கள்.

இறுதித் தீர்மானத்தை எடுக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலதிக தகவல்களை ஒன்றில் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்பிலக்கம்: 011-2438078 / 011-2436818 / 011 -4600944**
**தொலைநகல் இலக்கம்: 011-2432044**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

---

## விலைமனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல.<br>பொருட்களது விபரம் - தொகை | விலைமனுக்கோரல் முடிவு திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/23/137<br>வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (அலுவலகம்)- மட்டக்களப்பு பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்.<br>(இரண்டு வருட காலம்) | 06-12-2023ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேசபிரதமமின் பொறியியலாளர் அலுவலகம்,<br>(மட்டக்களப்பு)<br>065-2222639<br>அல்லது<br>பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666<br>026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/23/138<br>வாடகைக்கு மோட்டார் கார்<br>பிரதேச மின் பொறியியலாளர் - வாழைச்சேனை (இரண்டு வருட காலம்) | 06-12-2023ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகம்,<br>(வாழைச்சேனை)<br>065-2225882<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666<br>026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார்சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன்

கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும்வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை.பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

வளமான வாழ்விற்கு மின்சாரம்

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**

சண்டே ஒப்சர்வர் adZ தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

## COLOMBO DISTRICT

**AVISSAWELLA** 036-2230446
Famous Bake House, No. 31, Seethawakapura

**ANGODA** 011 3069404
Kotikawatte Junction, Kudabuthgamuwa,

**ATHURUGIRIYA** 011 2760479, 011 4876968
267, Godagama Road,

**BATHTHARAMULLA** 011 2866705, 077 0736770
West Town, Bake House, Sweet House,

**BORALESGAMUWA** 071 6505533, 011 2519954
No. 17, Wewa Rd,

**HANWELLA** 011 4967962, 011 4967960
Sithumina Newspaper Agency, 144, High Level Rd, Pahathgama,

**HOKANDARA** 071 8685437
No. 501, North Hokandara,

**HOMAGAMA** 011 2892262, 077 7304046
"Aradanas", Senanayake Shopping Complex, Station Road,

**KADUWELA** 011 2579609
Nayana Bake House

**KADUWELA** 011 2412291, 011 4443566
375/1, Pahala Bomiriya, Yakkala,

**KALUBOWILA** 077 3551145, 011 2767259
No 195, Hospital Road,

**KESBEWA** 011 2703415
Seedevi Newspaper Office, 19, Horana Rd,

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380


# கேகாலை பிராந்தியம்

## மீட்கப்படாத ஈட்டு பொருட்களை ஏலத்தில் விற்பனை செய்தல்

மக்கள் வங்கியின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளில்/ சேவை மையங்களில் 31.08.2022ஆம் தேதி வரை (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) அடகு வைக்கப்பட்டு 08.12.2023 தேதி கொடுக்கல் வாங்கல்கள் முடிவுறும் வரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் மற்றும் இடங்களில் காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் தெரிவிக்கின்றோம்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 09.12.2023 மற்றும் 10.12.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | கேகாலை கிளை வளாகம் | வரக்காபொலை கிளை வளாகம் |
|---|---|---|
| கிளைகள் | கேகாலை, கேகாலை கடைவீதி, புலத்பொஹுபிட்டிய, ரம்புக்கனை, கொட்டியாகும்புர, மாவனல்லை, ஹெம்மாத்துகம அரனாயக | வரக்காபொலை, துல்ஹிரிய, கல்கமுவ, கொனகல்தெனிய, ருவன்வெல்ல, யட்டியாந்தொட்ட, தெரணியகலை, தெஹியோவிட்ட |
| சேவை மையங்கள் | மொரொந்தொட்ட, தேவாலேகம, பத்தம்பிட்டிய, மாவனல்லை, அலுத்நுவர | அல்கம, கலபிட்டமட, ஹொரகஸ்மங்கட, நெலுந்தெனிய, அமிதிரிகல, கரவனெல்ல, கிதுல்கல |

மேற்குறிபிட்டுள்ளவாறு, நடாத்த தீர்மானித்துள்ள இந்த ஏலவிற்பனைகளை மறு அறிவிப்பு இன்றி வங்கியின் விருப்பத்திற்கு ஏற்ப இரத்துச் செய்ய, ஒத்தி வைக்க அல்லது ஒன்றியைந்து நடாத்தும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம் - மட்டக்களப்பு**
**இல. 17, வின்ஸ்டன் விக்ரமசிங்க மாவத்தை, கேகாலை**
**தொலைபேசி இல. 035 - 2222300 / 035 - 2222396**

PEOPLES BANK Pride of the Nation

# மக்கள் வங்கி

## மீட்கப்படாத அடகு வைக்கப்பட்டுள்ள நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி இரத்தினபுரி பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் சேவை நிலையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் 08.12.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதி மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி பொது ஏலத்தில் விற்கப்படும் என்பதை தெரியப்படுத்துகிறோம்.

| ஏல விற்பனை நிகழும் திகதி | 2023.12.09 மற்றும் 2023.12.10 |
|---|---|
| ஏல விற்பனை நிகழும் இடம் | மக்கள் வங்கி - இரத்தினபுரி நகர கிளை - முதலாம் மாடி (குடுகல்வத்தை) |
| அடகு வைக்கப்பட்டுள்ள கிளைகள் | எம்பிலிபிட்டிய, பெல்மடுல்ல, உடவலவை, கொடகவெல, இறக்குவானை, கஹவத்த, பலாங்கொட, எஹலியகொடை, இரத்தினபுரி, இரத்தினபுரி நகரம், கல்தோட்டை, குருவிட்ட, கிரியெல்ல, நிவிதிகல, கலவானை, பல்லேபெத்தை |
| அடகு வைக்கப்பட்டுள்ள சேவை நிலையங்கள் | பதலங்கல, கொலன்ன,செவனகல, ஓபனாயாக்க, பம்பஹின்ன, வெலிகெபொல, எஹலியகொடை, இரத்தினபுரி புதிய நகரம், வெவெல்வத்தை, வேலிஓயா, அயகம, கரவிட்ட |

இந்த ஏல விற்பனை மறு அறிவிப்பு இன்றி இரத்தச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைந்து செயற்பட அல்லது ஏலத்தை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு. என்பதை தெரியப்படுத்துகிறோம்.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி பிராந்திய தலைமைக் காரியாலயம் - புதிய நகரம், இரத்தினபுரி**
**தொலைபேசி இல. 0452223084 / 0452230818**

PEOPLES BANK Pride of the Nation

# ஜா-எல நகர சபை

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2024 ஆம் வருடம்

இங்கு பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள நிர்மாணங்கள்/பொருட்கள்/சேவைகளுக்காக வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக தகைமை வாய்ந்த வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
அட்டவணை

| உருப்படி இலக்கம் | பொருட்கள் மற்றும் சேவை வழங்கல் விபரங்கள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01 | காகிதாதிகள் | ரூபா 2,500.00 |
| 02 | அலுவலக உபகரணங்கள்/மரத்தளபாடங்கள்/உருக்குப் பொருட்கள் | ரூபா 2,500.00 |
| 03 | மின்சாரப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்/மின்சார துணைப்பாகங்கள் | ரூபா 2,500.00 |
| 04 | சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டுச் சேவைகளுக்குத் தேவையான உபகரணங்கள் | ரூபா 2,500.00 |
| 05 | பீடை நாசினி, களை நாசினி, கிருமிநாசினி மற்றும் சுத்திகரிப்புப் பொருட்கள் | ரூபா 2,500.00 |
| 06 | விளையாட்டுப் பொருட்கள், மற்றும் சனசமூக நிலைய உபகரணங்கள் | ரூபா 2,500.00 |
| 07 | சிறுவர் பாடசாலை உபகரணங்கள் | ரூபா 2,500.00 |
| 08 | அச்சு வேலைகள் /அறிவித்தல் பலகை மற்றும் பெனர் | ரூபா 2,500.00 |
| 09 | அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் (கெபினட், அலுமாரி, மேசை) | ரூபா 2,500.00 |
| 10 | சீருடைகள்/துணி வகைகள்/சப்பாத்துகள் | ரூபா 2,500.00 |
| 11 | அச்சுப்பொறிகள்/புகைப்படப் பிரதி இயந்திரம்/டுப்ளோ இயந்திரம் | ரூபா 2,500.00 |
| 12 | அச்சுப்பொறிகள்/புகைப்படப் பிரதி இயந்திரம்/டுப்ளோ இயந்திர திருத்தவேலைகள் | ரூபா 2,500.00 |
| 13 | கட்டிடம் மற்றும் வீதி நிர்மாணப் பொருட்கள். (கிரவல், ஏ பிஸி, சிப்ஸ்கல், மணல், | ரூபா 2,500.00 |
| 14 | கட்டிடம் மற்றும் வீதி நிர்மாணம் உட்பட தொழில்நுட்ப உபகரணங்கள் | ரூபா 2,500.00 |
| 15 | வாகன மதிப்பீட்டு வரித் தகடுகள் | ரூபா 2,500.00 |
| 16 | நிர்மாண வேலைகளுக்கு தொழிலாளர்களை வழங்குதல். | ரூபா 2,500.00 |
| 17 | கணனி இயந்திரங்களின் சேர்விஸ்கள்/திருத்தவேலைகள் மற்றும் உதிரிப்பாகங்கள் | ரூபா 2,500.00 |
| 18 | சகல டோனர் வகைகள் மற்றும் ரிபன்கள் வழங்குதல் | ரூபா 2,500.00 |
| 19 | வாகன உதிரிப்பாகங்கள், டயர் மற்றும் டியுப் வழங்குதல். | ரூபா 2,500.00 |
| 20 | வாகன திருத்தவேலைகள் (முச்சக்கர வண்டி/டிராக்டர்/ மோட்டார் வாகனங்கள்) | ரூபா 2,500.00 |
| 21 | வாகனம் சேர்விஸ் செய்தல் | ரூபா 2,500.00 |
| 22 | வாகனங்களை காப்புறுதி செய்தல் | ரூபா 2,500.00 |
| 23 | போக்குவரத்து வசதிகள் வழங்குதல் | ரூபா 2,500.00 |
| 24 | வாகனங்கள் வாடகை அடிப்படையில் வழங்குதல். | ரூபா 2,500.00 |
| 25 | முன்வார்ப்பு கொங்கிறீட் உருப்படிகள் (ஹியூம் குழாய், வடிகான் அச்சுக் கற்கள்) | ரூபா 2,500.00 |
| 26 | பட்டறை வேலைகள் (மண்வெட்டி, வீச்சுக் கத்தி, கத்தி, சவல் போன்றவை) | ரூபா 2,500.00 |
| 27 | பிட்டுமன் (தயாரிக்கப்பட்ட தார்) வழங்குதல் | ரூபா 2,500.00 |
| 28 | சட்டத்தரணி சேவைகள் | ரூபா 2,500.00 |
| 29 | காணி அளத்தல் மற்றும் மதிப்பீடுகள் செய்தல் | ரூபா 2,500.00 |
| 30 | ஒலிபெருக்கி இயந்திரங்கள் | ரூபா 2,500.00 |
| 31 | முன் கலவை கொங்கிறீட் | ரூபா 2,500.00 |
| 32 | திகதி முத்திரை மற்றும் இறப்பர் முத்திரை | ரூபா 2,500.00 |
| 33 | புல் வெட்டும் இயந்திரம்/மின்பிறப்பாக்கி இயந்திரம் போன்ற உபகரணங்கள் | ரூபா 2,500.00 |
| 34 | திரவ எரிவாயு வழங்குதல் | ரூபா 2,500.00 |
| 35 | தகனச்சாலை திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் | ரூபா 2,500.00 |
| 36 | தீயணைப்பு உபகரண தொகுதிகள் | ரூபா 2,500.00 |
| 37 | விரல் ரேகை பதிவு இயந்திரம் மற்றும் CCTV இயந்திரம் வழங்குதல் / சேர்விஸ் செய்தல் மற்றும் திருத்தவேலைகள் | ரூபா 2,500.00 |
| 38 | ஹைட்ரோலிக் ஹோஸ் மற்றும் கேபள் முன் தயார்நிலை மற்றும் திருத்தவேலைகள் | ரூபா 2,500.00 |
| 39 | கைத்தொழில் உபகரணங்களை வாடகைக்கு வழங்குதல் | ரூபா 2,500.00 |
| 40 | மரம் வெட்டுதல் மற்றும் கிளைகளை அப்புறப்படுத்துதல் | ரூபா 2,500.00 |
| 41 | உருக்கியொட்டும் வேலை/இரும்பு வெட்டுதல்/தகடு வெட்டுதல் மற்றும் வளைத்தல் | ரூபா 2,500.00 |
| 42 | உக்கிப்போகாத திண்மக் கழிவுப்பொருட்களை கொள்வனவு செய்தல் | ரூபா 2,500.00 |
| 43 | மொழிபெயர்ப்பு (சிங்களம்/ஆங்கிலம்) | ரூபா 2,500.00 |
| 44 | உணவு பானங்கள் வழங்குதல் | ரூபா 2,500.00 |
| 45 | தோட்ட அலங்காரங்கள் | ரூபா 2,500.00 |
| 46 | புகைப்படமெடுத்தல் மற்றும் அடையாள அட்டைகள் தயாரித்தல் | ரூபா 2,500.00 |
| 47 | எலிகள், கறையான் மற்றும் பீடைக் கட்டுப்பாடுகள் | ரூபா 2,500.00 |
| 48 | வளிச்சீராக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் திருத்தவேலைகள் | ரூபா 2,500.00 |
| 49 | வாகன நிறப்பூச்சு வேலைகள் மற்றும் தகர வேலைகள் | ரூபா 2,500.00 |
| 50 | கணனி வலையமைப்பிடல் (Computer Networking) | ரூபா 2,500.00 |
| 51 | டிராக்டர், டிரேலர் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு | ரூபா 2,500.00 |

**நிர்மாண ஒப்பந்தங்கள்**

| இலக்கம் | பொருட்கள் மற்றும் சேவை வழங்கல் விபரங்கள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01 | 100,000.00 ரூபாவிற்குக் குறைந்த ஒப்பந்தம் | ரூபா 2,500.00 |
| 02 | 500,000.00 - 100,000,000.00 ரூபாவிற்கிடையிலான ஒப்பந்தம் | ரூபா 2,500.00 |

1.0 பதிவு செய்து கொள்ளும் ஒவ்வொரு வழங்குநரும் ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறான விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அத்துடன் வியாபார பெயர்ப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு உருப்படிக்காக பதிவு செய்து கொள்வதற்கு 2,500.00 ரூபா கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

2.0 பதிவு செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரி இயைபுடைய சேவைகள் நிறைவேற்றிக்கொள்ள பொதுவாக செயற்படுவதுடன் அவசிய தேவைகளின் போது அதற்குப் புறம்பாகவும் விலைகளைக் கோரல் மற்றும் சேவைகள் நிறைவேற்றிக்கொள்ளும் உரிமையை நகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

3.0 வழங்கல் மற்றும் சேவைகளை உரிய காலப்பகுதிக்குள் நிறைவேற்றுவதற்கு இயலாமல் போனவர்களின் பதிவு இரத்துச் செய்யப்படும்.

4.0 ஐந்து இலட்சம் ரூபாவிற்கு (ரூபா 500,000.00) மேற்பட்ட ஒப்பந்தங்களுக்காகப் பதிவு செய்யும் ஒப்பந்தக்காரர்கள் அரசாங்க, அரசுடன் இணைந்த, கூட்டுத்தாபனங்கள், சபைகள் அல்லது நியதிச் சட்ட நிறுவனங்கள் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களில் ஒப்பந்தம் செய்ததற்கான சான்றிதழ் அல்லது நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5.0 விண்ணப்பதாரர்கள் பெறுமதி சேர் வரிக்காக (VAT) பதிவு செய்திருப்பின் அந்த இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

6.0 விண்ணப்பதாரர்களால் சரியாகத் தயாரித்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்தை பதிவு செய்துகொள்ளும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு இயைபான உருப்படி இலக்கம் மற்றும் இலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டு ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறான விண்ணப்பப் படிவம் விகிதம் உரிய பதிவுக் கட்டணத்திற்காக காசோலை அல்லது நகர சபைக்கு பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியொன்றுடன் 2023-12-15ஆம் திகதிக்கு முன் ''செயலாளர், நகர சபை, ஜா-எல'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

7.0 விண்ணப்பங்களைத் தாங்கி வரும் உறையின் இடது பக்க மேல் மூலையில் இயைபுடைய வழங்கல் அல்லது சேவையின் இலக்கம் மற்றும் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். மேலதிக தகவல்களை 0112236822 எனும் தொலைபேசி இலக்கத்தில் வழங்கல் அதிகாரியைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

8.0. சரியான தகவல்கள் வழங்கப்பட்டிராத முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் 2023-12-15ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்,**
**ஜா-எல நகர சபை.**
**2023-11-22.**

# இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

2023-08-31 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு R.M.K.S.M. ரத்நாயக்க அத்தாட்சிப்படுத்திய 2010.11.22ஆம் திகதிய ஈட்டுமுறி இல.1 853, 2014.04.08ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 2949 என்பவற்றின் பேரில் பெறப்பட்ட நிரந்தர மேலதிகப் பற்று வசதி மீது 2023.06.28ஆம் திகதி வரையான வட்டியும் முதலுமாக 8,460,673.97 ரூபாயும் (எட்டு மில்லியன் நானூற்று அறுபதாயிரத்து அறுநூற்று எழுபத்து மூன்று ரூபாய் தொண்ணூற்றேழு சதம்) அத்துடன் 2023.06.29ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு இருபத்தொன்பது தசம் இரண்டு ஐந்து வீதப்படி (29.25%) 5,700,000.00 ரூபாய் (ஐந்து மில்லியன் எழுநூறாயிரம் ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் இல. 18, பண்டாரநாயக்கா மாவத்தை, அலவ்வ என்ற முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட திருவாளர்கள். கௌஷல்ய எல்.எம்.பி. ட்ரேடர்ஸ் (தனியார்) நிறுவனத்தாரிடமிருந்தும் வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. மேற்குறித்த 2010.11.22ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 1853, 2014.04.08ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 2949 என்பவற்றின் பேரில் பெறப்பட்ட நிரந்தர மேலதிகப் பற்று வசதி மீதான மேற்குறித்த 8,460,673.97 ரூபாயையும் (எட்டு மில்லியன் நானூற்று அறுபதாயிரத்து அறுநூற்று எழுபத்து மூன்று ரூபாய் தொண்ணூற்றேழு சதம்) அத்துடன் 2023.06.29ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனங்களை இலங்கை கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச்.ரி கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி அலவ்வ கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

"ஹபஹேன வத்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் சரத் வெலகெதர தயாரித்த 1983.05.07ஆம் திகதிய 2505ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 15 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பற்று, தம்பதெனி உடுகஹ கோரளை, அலவ்வ பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக எல்லைகட்குட்பட்ட அலவ்வ தெற்கு கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள அலவ்வ கிராமத்தில் அமைந்துள்ளதோடு வடக்கில் குறித்த வரைபடத்திலுள்ள காணித்துண்டு 14ஐயும் கிழக்கில் யு.பி. மாப்பா குணரத்ன என்பவரால் உரிமை கோரப்படும் காணியையும் தெற்கில் குறித்த வரைபடத்திலுள்ள காணித்துண்டு 16ஐயும் மேற்கில் குறித்த வரைபடத்தில் காணித்துண்டு 21 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 20 அடிப் பாதையையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இருபது பேர்ச்சுகள் (ஏ0.ரூ0.பே.20) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் குறித்த வரைபடத்தில் காணித்துண்டு 21 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 20 அடிப் பாதைக்கான வழியுரிமையையும் கொண்டுள்ள இக்காணி நாரம்மல காணிப் பதிவகத்தில் F 1338/28 என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டு பின்னர் U 43/58 எனும் இலக்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்டுள்ள காணியானது அதன் அண்மைய வரைப்படத்தில் கீழ்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது

"ஹபஹேன வத்த" என அழைக்கப்படும் காணியின் கே.ஏ. அமரதுங்க தயாரித்த 2010.02.18ஆம் திகதிய 6678ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பற்று, தம்பதெனி உடுகஹ கோரளை, அலவ்வ பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக எல்லைகட்குட்பட்ட அலவ்வ தெற்கு கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள அலவ்வ கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் 2505ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 14ஐயும் கிழக்கில் யு.பி. மாப்பா குணரத்ன என்பவரால் உரிமை கோரப்படும் காணியையும் தெற்கில் 2505ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 16ஐயும் மேற்கில் பாதையையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து பூச்சியம் நான்கு ஹெக்ரயர்கள் (0.0504) அல்லது இருபது பேர்ச்சுகள் (ஏ0.ரூ0.பே.20) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி

**இலங்கை வங்கி**
**தம்பதெனியாக் கிளை**

**திரு.P.K. ரத்நாயக்க**
**முகாமையாளர்**

1975 BOC CALL CENTRE www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


# For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

Manager front office
+94 112429342
+94 112429343


# கேள்வி அழைப்பு

## சுகாதார அமைச்சு

## போதனா வைத்தியசாலை – பதுளை

பதுளை போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் வழங்கல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல. | வழங்கல் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறி |
|---|---|---|---|---|---|
| 01 | THB/ AF/NCB/05/2023 | REGISTRATION OF MAINTENANCE CONTRACT FOR Preventive & Corrective Maintenance & Services of 800kVA Generator at the Teaching Hospital – Badulla for the year 2023/2024 & 2024/2025 | 01 | 1,500.00 | 5,000.00 |
| 02 | THB/ AF/NCB/06/2023 | REGISTRATION OF MAINTENANCE CONTRACTOR FOR Preventive & Corrective Maintenance & Services of Piped Medical Gas Distribution System at the Teaching Hospital – Badulla for the year 2023/2024 & 2024/2025 | 01 | 1,500.00 | 30,000.00 |

02. தேசிய போட்டி கேள்வி முறை (NCB) அடிப்படையில் கேள்விகள் கோரப்படும்.

03. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கணக்காளரைத் தொடர்புகொள்வதன் மூலம் (நீடிப்பு 1103) அல்லது பின்வரும் வைத்தியசாலையின் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

04. தகைமையுடைய கேள்விதாரர்கள் ஒரு கேள்விக்காக மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையும் வைத்தியசாலையின் நிதிப் பிரிவில் செலுத்தியதன் பின் 2023-11-22ஆம் திகதி முதல் 2023-12-13ஆம் திகதி வரை தேவையான கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்விப் படிவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வேண்டுகோள் கடிதத்துடன் கம்பனிப் பதிவுச் சான்றிதழ் அல்லது வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. பூரணப்படுத்தி முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை 2023-12-14ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் பதுளை போதனா வைத்தியசாலைக்கு பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது நேரில் வந்து கையளிக்கவோ முடியும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

07. இது சம்பந்தமான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமையை பதுளை போதனா வைத்தியசாலை பிரதேச பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாகாண பொது வைத்தியசாலை, பதுளை.**

**தொலைபேசி இல.** 055-2222261
**மின்னஞ்சல்:** info@thbadulla.health.gov.lk

**தொலைநகல்:** 055-2231205
**இணையதளம்:** www.thbadulla.health.gov.lk

2023-11-21

SLS Bank
ශ්‍රී ලංකා ඉතිරිකිරීමේ බැංකුව
இலங்கை சேமிப்பு வங்கி
Sri Lanka Savings Bank

# வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி

A FULLY OWNED SUBSIDIARY OF NSB

## 2023 செப்டெம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த காலாண்டுக்கான நிதிக் கூற்றுகள்

### 2023 செப்டெம்பர் 30ஆம் திகதியன்றுள்ளவாறான நிதி நிலைமைகள் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | நடைமுறை காலம் 30/09/2023இல் உள்ளவாறு | முன்னைய காலம் 31/12/2022இல் உள்ளவாறு |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 45,767 | 47,257 |
| மத்திய வங்கியிலுள்ள மீதிகள் | - | - |
| வங்கியிலுள்ள இருப்பு | 1,327,949 | 1,963,287 |
| வழித்தோன்றல் நிதிக் கருவிகள் | - | - |
| கடன் தீர்ப்பனவில் உள்ள நிதிச் சொத்துக்கள் | | |
| - கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 627,348 | 796,327 |
| - கடன்கள் மற்றும் ஏனைய கருவிகள் | 5,634,279 | 4,426,049 |
| ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் ஆதனங்கள் | - | - |
| இலாபம் மற்றும் நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் ஆதனங்கள் | 214,450 | 102,925 |
| துணைக் கம்பனிகளில் முதலீடுகள் | - | - |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களில் முதலீடுகள் | - | - |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 878,492 | 884,129 |
| ஆதன பயன்பாட்டு உரிமைகள் | 207 | 638 |
| ஆதன முதலீடுகள் | 204,977 | 204,977 |
| நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் | 263 | 1,184 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | - | - |
| ஏனைய சொத்துக்கள் | 52,971 | 19,654 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **8,986,703** | **8,446,427** |
| **பொறுப்புகள்** | | |
| வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவைகள் | - | 191 |
| ஆக்க நிதியியல் கருவிகள் | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள் | - | - |
| - நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டது | | |
| - நியாயப் பெறுமதியில் வடிவமைக்கப்பட்டது | | |
| கடன் தீர்ப்பனவில் உள்ள நிதிப் பொறுப்புகள் | | |
| - வாடிக்கையாளர்களுக்குச் செலுத்தவேண்டியவைகள் | 428,146 | 464,579 |
| - ஏனைய கடன்பாடுகளுக்குச் செலுத்தவேண்டியவைகள் | 291,855 | 301,615 |
| குத்தகை பொறுப்புகள் | 452 | 798 |
| வழங்கிய கடன் பத்திரங்கள் | 73,169 | 73,555 |
| இளைப்பாறல் நலன்புரிகள் | 51,309 | 51,461 |
| நடைமுறையிலுள்ள வரி பொறுப்புகள் | 182,774 | 182,457 |
| பிற்போடப்பட்ட வரி பொறுப்புகள் | 4,155 | 4,155 |
| ஏனைய ஏற்பாடுகள் | - | - |
| ஏனைய பொறுப்புகள் | 237,885 | 274,372 |
| துணை நிறுவனங்களுக்குச் செலுத்தவேண்டியவை | - | - |
| **மொத்தப் பொறுப்புகள்** | **1,269,745** | **1,353,184** |
| **பங்குரிமை** | | |
| அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம் | 3,805,290 | 3,805,290 |
| நியதிச் சட்ட ஒதுக்க நிதியம் | 314,377 | 288,765 |
| ஏ.வி.வ. ஒதுக்கம் | 116,076 | 4,595 |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய் | 4,757,430 | 4,270,807 |
| ஏனைய ஒதுக்கங்கள் | (1,276,214) | (1,276,214) |
| **பங்குதாரர்களுக்கான மொத்த உரிமை** | **7,716,958** | **7,093,243** |
| கட்டுப்பாடற்ற ஈடுபாடு | - | - |
| **மொத்த பங்குரிமை** | **7,716,958** | **7,093,243** |
| **மொத்த பங்குரிமை மற்றும் பொறுப்புகள்** | **8,986,703** | **8,446,427** |
| **எதிர்பாரா பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள்** | **1,733** | **1,737** |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | |
| மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை | **96** | **104** |
| கிளைகளின் எண்ணிக்கை | **4** | **4** |

### 2023 செப்டம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த காலத்திற்கான வருமானக் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | நடைமுறைக் காலம் 01-01-2023 முதல் 30-09-2023 வரை | முன்னைய காலம் 01-01-2022 முதல் 30-09-2022 வரை |
|---|---|---|
| வட்டி வருமானம் | 1,088,706 | 760,650 |
| வட்டிச் செலவினங்கள் | (19,536) | (25,014) |
| **தேறிய வட்டி வருமானம்** | **1,069,171** | **735,636** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 267 | 277 |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | (7) | (41) |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **260** | **235** |
| வியாபாரம் மூலமான தேறிய இலாபம்/ (நட்டம்) | - | - |
| இலாபம் அல்லது நட்டம் மூலமாக வடிவமைக்கப்பட்ட நிதியியல் கருவிகளிலிருந்தான தேறிய இலாபம்/ (நட்டம்) | - | - |
| தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானம் | 90,914 | 111,434 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | **1,160,345** | **847,305** |
| பெறுமதி குறைப்பு கட்டணங்கள் | 54,902 | (10,943) |
| **தேறிய செயற்பாட்டு வருமானம்** | **1,215,247** | **836,362** |
| ஆளணிச் செலவுகள் | (191,545) | (199,644) |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவுகள் | (7,187) | (7,942) |
| ஏனைய செலவினங்கள் | (63,053) | (56,985) |
| **நிதியியல் சேவைகள் மீதான VAT மற்றும் SSCL வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | **953,462** | **571,791** |
| நிதியியல் சேவைகள் மீதான பெ.சே.வரி (VAT) | (157,354) | (104,038) |
| நிதியியல் சேவைகள் மீதான சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL) | (21,855) | - |
| **VAT மற்றும் SSCL முரிக்குப் பின்னரான செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)**<br>இணை மற்றும் துணை நிறுவன பங்குகளின் இலாபம் | **774,253** | **467,753** |
| வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்) | 774,253 | 467,753 |
| வருமான வரிச் செலவினங்கள் | (262,018) | (114,397) |
| **காலப்பகுதிக்கான இலாபம் / (நட்டம்)** | **512,235** | **353,356** |
| **பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்:** | | |
| பங்குரிமையாளர்கள் | 512,235 | 353,356 |
| **ஒரு பங்கின் மீது ஈட்டிய பங்கிலாபம்** | | |
| சாதாரண பங்கொன்றிற்கான அடிப்படை இலாபம் | **62** | **43** |

### 2023 செப்டம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த காலத்திற்கான விரிவான வருமானக் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | 01-01-2023 முதல் 30-09-2023 வரை | 01-01-2022 முதல் 30-09-2022 வரை |
|---|---|---|
| **குறித்த காலப்பகுதிக்கான இலாபம் / (நட்டம்)** | **512,235** | **353,356** |
| **வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்பட்ட விடயங்கள்** | | |
| வெளிநாட்டு செயற்பாட்டு மொழிபெயர்ப்பு மீதான பரிமாற்றல் வித்தியாசம் | | |
| காசுப் பாய்ச்சல் எல்லை மீதான தேறிய இலாபம் / (நட்டம்) | | |
| கடன் கருவிகளிலுள்ள முதலீடுகள் மீதான தேறிய இலாபம் / (நட்டம்) | | |
| ஏனைய விரிவான வருமானம் மூலமாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டவை | | |
| இணை மற்றும் கூட்டு நிறுவனங்களின் பங்குகளில் இலாபம் | | |
| ஏனைய விரிவான வருமானம் மூலமாக நியாயப் பெறுமதியில் உள்ள கடன் கருவிகள் | | |
| கழி: வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்பட்ட ஏனைய விரிவான வருமான விடயங்கள் சம்பந்தமானவை | | |
| **வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்படாத விடயங்கள்** | | |
| ஏனைய விரிவான வருமானம் மூலமாக நியாயப் பெறுமதியில் வடிவமைக்கப்பட்ட பங்குடைமை கருவிகளின் முதலீடுகள் மீதான நியாயப் பெறுமதியின் மாற்றம் | 111,480 | (42,904) |
| இலாபம் அல்லது நட்டத்தின் மூலமாக நியாயப் பெறுமதியில் வடிவமைக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள் மீது வங்கியின் சொந்த கடன் இடர்காப்பில் பகிர்ந்தளிக்கப்பட்ட நியாயப் பெறுமதியின் மாற்றம் | | |
| நலன்புரித் திட்டங்கள் சார்ந்தவை மீதான உண்மையான இலாபம் / (நட்டம்) | - | - |
| முன்னைய ஊழியர்களின் இளைப்பாற்று நலன்புரியின் மீள் மதிப்பீடுகள் | | |
| மேலதிக மீள் மதிப்பீடுகளின் மாற்றம் | | |
| இணை மற்றும் கூட்டு நிறுவனங்களின் பங்குகளில் இலாபம் | | |
| கழி: வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்படாத ஏனைய விரிவான வருமான விடயங்கள் சம்பந்தமானவை | | |
| **குறித்த காலப்பகுதிக்கான ஏனைய விரிவான வருமானம், தேறிய வரியில்** | 111,480 | (42,904) |
| **குறித்த காலப்பகுதிக்கான ஏனைய விரிவான வருமானம்** | **623,715** | **310,452** |

### 2023 செப்டெம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதிற்குரிய பங்குரிமை மாற்றங்களின் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | கூறப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம் | | ஒதுக்கங்கள் | | | | | மொத்தம் | கட்டுப் பாடற்ற வட்டி | மொத்த பங்குரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதாரண பங்குகள் | ஒதுக்கப் பட்ட மூலதனம் | நியதிகள் சட்ட ஒதுக்க நிதி | ஏ.வி.வ. ஒதுக்கம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | பிடித்து வைக்கப்பட்ட வருவாய் | ஏனைய ஒதுக்கங்கள் | | | |
| **01/01/2023 அன்றுள்ளவாறான மீதி** | 820,447 | 2,984,844 | 288,765 | 4,595 | 889,976 | 4,270,807 | (2,166,190) | 7,093,243 | - | 7,093,243 |
| பருவத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | | | | | | | | | |
| பருவத்திற்கான இலாபம் / (நட்டம்) | - | - | - | - | - | 512,235 | - | **512,235** | - | **512,235** |
| ஏனைய பரந்தளவிலான வருமானம் (தேறிய வரியில்) | - | - | - | 111,480 | - | - | | **111,480** | - | **111,480** |
| **பருவத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | - | - | - | **111,480** | - | **512,235** | - | **623,715** | - | **623,715** |
| பங்குடைமையாளர்களுடனான பரிவர்த்தனை/ நேரடியாக பங்குடைமையில் அங்கீகரிக்கப்படுகின்றன. | | | | | | | | | | |
| வழங்கிய பங்குகள் / ஒதுக்கப்பட்ட மூலதனத்தின் அதிகரிப்பு | | - | - | | - | - | - | - | - | - |
| பயன்படுத்தப்பட்ட பகிர்வு விருப்பங்கள் | - | - | - | | - | - | - | - | - | - |
| வழங்கப்பட்ட போனஸ் | - | - | - | | - | - | - | - | - | - |
| வழங்கப்பட்ட உரிமங்கள் | - | - | - | | - | - | - | - | - | - |
| காலப்பகுதியில் மாற்றப்பட்ட ஒதுக்கங்கள் | - | - | 25,612 | - | - | (25,612) | - | - | - | - |
| பங்குடைமையாளர்களுக்கான பங்கிலாபம் | - | - | - | | - | - | - | - | - | - |
| **தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்ட இலாபம்** | - | - | - | - | - | - | - | - | - | |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடுகள் மீதான இலாபம் / (நட்டம்) (கிரய முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது) | - | - | - | | - | - | - | - | - | - |
| ஏனையவைகள் | - | - | - | | - | - | - | - | - | - |
| பங்குடைமையாளர்களுடனான மொத்தப் பரிமாற்றங்கள் | - | - | **25,612** | **-** | **-** | **25,612** | - | - | - | - |
| **30/09/2023 அன்றுள்ளவாறான மீதி** | **820,447** | **2,984,844** | **314,377** | **116,076** | **889,976** | **4,757,430** | **(2,166,190)** | **7,716,958** | **-** | **7,716,958** |

### 2023 செப்டம்பர் 30ஆம் திகதி உள்ளவாறான நிதியியல் சாதனங்களின் அளவீட்டு அடிப்படையிலான பகுப்பாய்வு

அ. வங்கி - 30/09/2023

| ஆயிரம் ரூபாய்களில் | AC | FVPL | FVOCI | மொத்தம் |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 45,767 | | | 45,767 |
| மத்திய வங்கியிலுள்ள மீதி | | | | - |
| வங்கிகளிலுள்ள இருப்புகள் | 1,327,949 | | | 1,327,949 |
| வழித்தோன்றல் நிதிக் கருவிகள் | - | | | - |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 627,348 | | | 627,348 |
| கடன் கருவிகள் | 5,634,279 | | | 5,634,279 |
| பங்குடைமை கருவிகள் | | | 214,450 | 214,450 |
| யுனிட் ட்ரஸ்ட் முதலீடுகள் | | - | | - |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **7,635,343** | **-** | **214,450** | **7,849,793** |

| ஆயிரம் ரூபாய்களில் | AC | FVPL | மொத்தம் |
|---|---|---|---|
| **பொறுப்புகள்** | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | - | | - |
| ஆக்க நிதியியல் கருவிகள் | - | - | - |
| கடன் தீர்ப்பனவுக்கான நிதியியல் பொறுப்புகள் | | | |
| - வைப்பாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 428,146 | | 428,146 |
| - ஏனைய கடன்பாட்டாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 291,855 | | 291,855 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 73,169 | | 73,169 |
| **மொத்த நிதியியல் பொறுப்புகள்** | **793,170** | **-** | **793,170** |

ஆ. வங்கி - 31/12/2022

| ஆயிரம் ரூபாய்களில் | AC | FVPL | FVOCI | மொத்தம் |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 47,257 | | | 47,257 |
| மத்திய வங்கியிலுள்ள மீதி | | | | - |
| வங்கிகளிலுள்ள இருப்புகள் | 1,963,287 | | | 1,963,287 |
| வழித்தோன்றல் நிதிக் கருவிகள் | - | | | - |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 796,327 | | | 796,327 |
| கடன் கருவிகள் | 4,426,049 | | | 4,426,049 |
| பங்குடைமை கருவிகள் | | | 102,925 | 102,925 |
| யுனிட் ட்ரஸ்ட் முதலீடுகள் | | - | | - |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **7,232,920** | **-** | **102,925** | **7,335,845** |

| ஆயிரம் ரூபாய்களில் | AC | FVPL | மொத்தம் |
|---|---|---|---|
| **பொறுப்புகள்** | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 191 | | 191 |
| ஆக்க நிதியியல் கருவிகள் | - | - | - |
| கடன் தீர்ப்பனவுக்கான நிதியியல் பொறுப்புகள் | - | - | - |
| - வைப்பாளர்களுக்குச் செலுத்தவேண்டியவை | 464,579 | | 464,579 |
| - ஏனைய கடன்பாட்டாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 301,615 | | 301,615 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 73,555 | | 73,555 |
| **மொத்த நிதியியல் பொறுப்புகள்** | **839,940** | **-** | **839,940** |

### 2023 செப்டெம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த காலத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | நடைமுறைக் காலம் 30/09/2023 | முன்னைய காலம் 30/09/2022 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | 774,252 | 467,752 |
| **சீராக்கங்கள்:** | | |
| வரிக்கு முன்னரான இலாபத்தில் அடங்கியுள்ள காசல்லா விடயங்கள் | (121,919) | (73,070) |
| செயற்பாட்டு சொத்துக்களின் மாற்றங்கள் | (381,202) | 224,540 |
| செயற்பாட்டு பொறுப்புகளின் மாற்றங்கள் | (5,395) | (254,639) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு | - | - |
| துணை மற்றும் இணை நிறுவனங்களின் இலாபத்தின் பங்கு | - | - |
| துணை மற்றும் இணை நிறுவனங்களின் பங்கிலாப வருமானம் | - | - |
| கீழ்நிலைக் கடன்களுக்கான வட்டிச் செலவினங்கள் | - | - |
| முன்னைய வருடத்திற்கான சீராக்கங்கள் | - | (124,755) |
| நலன்புரித் திட்டங்களை மையப்படுத்தி செலுத்திய பங்களிப்பு | (5,135) | (1,032) |
| செலுத்திய வரி | (261,701) | (278,259) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு** | **(1,099)** | **(39,463)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| ஆதனம், பொறிகள், உபகரணங்களின் கொள்வனவு | (200) | (3,232) |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான பெறுகைகள் | - | 18,897 |
| நிதி முதலீடுகளிலிருந்தான கொள்வனவுகள் | - | |
| முதிர்வின்போது விற்பனைக்குள்ள நிதி முதலீடுகளிலிருந்தான பெறுகைகள் | - | |
| அருவச் சொத்துக்களின் தேறிய கொள்வனவு | - | (2,100) |
| துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களின் முதலீட்டுப் பெறுகைகளின் தேறிய காசுப் பாய்ச்சல் | - | - |
| துணை நிறுவனங்களை அகற்றுவதிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் | - | - |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களை அகற்றுவதிலிருந்தான பெறுகைகள் | - | - |
| துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபம் | - | - |
| ஆதன முதலீடுகளின் கொள்வனவு | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு (பயன்படுத்தியவை)** | **(200)** | **13,565** |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| வழங்கப்பட்ட சாதாரண மூலதனப் பங்கிலிருந்தான தேறிய பெறுகைகள் | - | - |
| வழங்கப்பட்ட ஏனைய பங்குடைமை கருவிகளிலிருந்தான தேறிய பெறுகைகள் | - | - |
| வழங்கப்பட்ட துணை நிறுவனக் கடன்களிலிருந்தான தேறிய பெறுகைகள் | - | - |
| துணை நிறுவனக் கடன்களின் மீள்செலுத்துகை | - | - |
| துணை நிறுவனக் கடன்களுக்குச் செலுத்திய வட்டி | - | - |
| கட்டுப்பாடற்ற ஆர்வங்களுக்குச் செலுத்திய பங்கிலாபம் | - | - |
| தாய் நிறுவன பங்குதாரர்களுக்குச் செலுத்திய பங்கிலாபம் | - | - |
| ஏனைய பங்குரிமை கருவி உரிமையாளர்களுக்குச் செலுத்திய பங்கிலாபம் | - | - |
| ஏனையவை | - | - |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு (பயன்படுத்தியவை) | - | - |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | (1,299) | (25,898) |
| **மாத்தறை மாவட்டம்**<br>கொடபொல<br>தெனியாய<br>கம்புருப்பிட்டிய<br>ஊருபொக்க<br>தெய்யந்தர<br>மாகந்துர<br>பஸ்கொட<br>ஹக்மன<br>தெய்ஆகொட<br>வல்கம<br>மாத்தறை மேற்தரக்கிளை<br>மாத்தறை நகரம்<br>கேகந்துற<br>தெவிநுவர<br>திக்வல்ல<br>ருஹுனு பல்கலைக்கழகம்<br>பேலிஅத்த<br>குடாவெல்ல | 08.09.2023 வரை 12 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 08.12.2023 | 09.12.2023 மற்றும் 10.12.2023 மாத்தறை மேற்தரக் கிளை |
| **ஹம்பாந்தோட்டை மாவட்டம்**<br>ரண்ண<br>அகுணுகொலபெலச<br>வீரகட்டிய<br>மித்தெனிய<br>கடுவன<br>வலஸ்முல்ல<br>தங்காலை<br>வராபிட்டிய<br>ஹம்பாந்தோட்டை<br>அம்பலாங்கொட<br>திஸ்ஸமஹராம<br>கதிர்காமம்<br>லுணுகம்வெஹெர<br>சூரியவெவ<br>பரவஹகுபுக்க | 08.09.2022 வரை 12 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 08.12.2023 | 09.12.2023 மற்றும் 10.12.2023 ஹம்பாந்தோட்டைக் கிளை |

மேற்குறித்த ஏலங்களை இரத்துச் செய்யும், பிற்போடும், ஒன்றிணைக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.

**இலங்கை வங்கி**
**பிரதிப் பொது முகாமையாளர்**
**அபிவிருத்தி வங்கியியல் மற்றும்**
**கிளை கடன் செயற்பாடுகள் பிரிவு II**
**தலைமை அலுவலகம், கொழும்பு 01.**
**தொலைபேசி – 011-2399568 / 011-2204545**


1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


Daily News Classifieds, the Housewives' companion

# ஒருநாள், டி20 போட்டிகளில் ஓவர்கள் இடையே 60 விநாடி நேரக் கட்டுப்பாடு

## ஐ.சி.சியின் புதிய விதி அறிமுகம்



கிரிக்கெட் போட்டிகளில் ஆட்டத்தின் வேகத்தை ஒழுங்குபடுத்தும் வகையில் ஓவர்களுக்கு இடையில் நேரக் கட்டுப்பாடு ஒன்றை சோதனை நடவடிக்கையாக செயற்படுத்துவதற்கு சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் தீர்மானித்துள்ளது. இந்த அதிரடி திட்டத்தின்படி இன்னிங்ஸ் ஒன்றில் ஒரு நிமிடத்திற்குள் புதிய ஓவரை ஆரம்பிக்க மூன்று தடவைகள் தவறினால் ஐந்து தண்டனை ஓட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

ஐ.சி.சி. தலைமை நிர்வாகிகள் குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கும் இந்தத் திட்டம், ஒருநாள் மற்றும் டி20 சர்வதேச போட்டிகளில் எதிர்வரும் டிசம்பர் தொடக்கம் 2024 ஏப்ரல் வரை ஆறு மாதங்களுக்கு "சோதனை அடிப்படையில்" நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் டிசம்பர் 3 ஆம் திகதி ஆரம்பமாகும் மேற்கிந்திய தீவுகள் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் இந்த நேரக் கட்டுப்பாட்டு முறை முதல் தடவையாக அமுல்படுத்தப்படவுள்ளது.

"ஓவர்களுக்கு இடையில் எடுத்துக் கொள்ளும் நேர அளவை ஒழுங்குபடுத்த கடிகாரம் பயன்படுத்தப்படும்" என்று ஐ.சி.சி. வெளியிட்ட ஊடக அறிவிப்பில் தெரிவித்துள்ளது. "பந்து வீசும் அணி முந்தைய ஓவரை பூர்த்தி செய்து 60 விநாடிகளுக்குள் அடுத்த ஓவரை பந்துவீச தயாராகாத பட்சத்தில், இன்னிங்ஸ் ஒன்றில் அவ்வாறு மூன்று தடவைகள் நிகழும்போது ஐந்து தண்டனை ஓட்டங்கள் செயற்படுத்தப்படும்" என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மந்தமாக பந்து வீசுவதை தவிர்ப்பதற்காக ஐ.சி.சி 2022 இல் ஆடவர் மற்றும் மகளிர் ஒருநாள் மற்றும் டி20 சர்வதேச போட்டிகளில் போட்டித் தண்டனை முறையை அறிமுகம் செய்தது. தற்போதைய போட்டி நடைமுறையின் படி, களத்தடுப்பில் ஈடுபடும் அணி குறிப்பிட்ட நேரத்தில் கடைசி ஓவரை ஆரம்பிக்க தவறினால் 30 யார்ட் வட்டத்திற்கு வெளியில் இருந்து ஒரு களத் தடுப்பாளர் அகற்றப்படுவார்.

மூன்றாவது நடுவர் டைமர் ஒன்றின் மூலம் காலத்தை ஒழுங்குபடுத்தும் அதேநேரம், ஏதேனும் கால தாமதம் அவதானிக்கப்படும் பட்சத்தில் அது தொடர்பில் களத்தில் உள்ள நடுவர்களை அறிவுறுத்துவார்.

இந்த விதி கடந்த ஜனவரியில் டி20 சர்வதேச போட்டிகளில் அறிமுகப் படுத்தப்பட்டதோடு, கடந்த ஜூன்–ஜூலையில் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளின்போது ஒருநாள் சர்வதேச போட்டிகளில் அறிமுகம் செய்யப்பட்டது.

இது மந்தமாக பந்துவீசுவதற்கு வீரர்களுக்கு வழங்கபடும் அபராதங்களுக்கு மேலதிகமானதாகவே அறிமுகம் செய்யப்பட்டது.

எனினும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் 'ஸ்டொப் க்ளொக்' எனும் நேரக் கட்டுப்பாட்டு முறை விளையாட்டில் புதிதல்ல. டென்னிஸ் போட்டிகளில் புள்ளிகளுக்கு இடையே பந்தை சேர்வ் செய்வதற்கு 25 விநாடிகளுக்குள் வீரர்கள் தயாரா இருக்க வேண்டும் எனும் 'ஷொட் க்ளொக்' முறை அமுலில் உள்ளது.

இந்த 'ஷொட் க்ளொக்' முறையை மூன்று வகை கிரிக்கெட்டிலும் செயற்படுத்துவதற்கு எம்.சி.சியின் உலக கிரிக்கெட் குழு 2018 ஆம் ஆண்டு பரிந்துரை செய்திருந்தது. முன்னாள் சர்வதேச அணித் தலைவர்களான ரிக்கி பொண்டிங், சவ்ரொவ் கங்குலி மற்றும் குமார் சங்கக்கார ஆகியோர் உள்ளடங்கிய இந்தக் குழு, போட்டி ஒன்றில் விளையாடப்படாத நேரத்தில் 'ஷொட் க்ளொக்' முறையை பயன்படுத்த பரிந்துரைத்தது.

இதேநேரம் ஆடவர் மற்றும் மகளிர் சர்வதேச போட்டிகளில் ஆடவர் மற்றும் மகளிர் நடுவர்களுக்கு போட்டிக்கு சமமான ஊதியம் வழங்கவும் ஐ.சி.சி. தீர்மானித்துள்ளது.

இதேவேளை, பருவத்தை அடைந்த ஓர் ஆண், பாலின மாற்ற அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு பெண்ணாக மாறினாலும் அவருக்கு மகளிர் அணியில் இடம் அளிக்கப்படாது என்ற புதிய கொள்கை முடிவை ஐ.சி.சி மேற்கொண்டுள்ளது.

மகளிர் கிரிக்கெட்டின் தரத்தையும், வீராங்கனைகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஐ.சி.சி தெரிவித்துள்ளது.

# தேசிய கபடிப் போட்டியில் அல்–அஷ்ரக் அணி தங்கம்



நிந்தவூர் குறுப் நிருபர்

கல்வி அமைச்சுடன் இணைந்து இலங்கை பாடசாலை கபடி சங்கம் நடாத்திய தேசிய மட்ட கபடி போட்டியில் நிந்தவூர் அல்–அஷ்ரக் தேசிய பாடசாலையின் 15 வயதுக்கு உட்பட்ட அணி தங்கப் பதக்கம் வென்றதோடு அதன் 18 வயதுக்கு உட்பட்ட அணி வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியது.

கம்பஹா நியூ சனிரியோ விளையாட்டு வளாகத்தில் அண்மையில் இடம்பெற்ற இப் போட்டியில் கேகாலை ரிவிச்சந்த அணியை எதிர்கொண்ட நிந்தவூர் அல்–அஷ்ரக் பாடசாலை அணி 28–15 என்ற புள்ளிகளால் வெற்றிபெற்றது.

இந்தப் பாடசாலையில் 18 வயதுக்கு உட்பட்ட அணி, வவுனியா பரக்கும்பா அணியிடம் 16–26 புள்ளிகளால் தோல்வியை சந்தித்தது.

# அடுத்த ஆண்டு இலங்கையில் தெற்காசிய கால்பந்து தொடர்

தெற்காசிய கால்பந்து சம்மேளனத்தின் (சாஃப்) 20 வயதுக்கு உட்பட்ட ஆடவர் கால்பந்து தொடர் இலங்கை நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரை ஒகஸ்ட் மாதத்தில் சுகததாச அரங்கு அல்லது கொழும்பு குதிரைப் பந்தயத் திடல் அரங்கில் நடத்த இலங்கை கால்பந்து சம்மேளம் திட்டமிட்டுள்ளது. இலங்கை கால்பந்து சம்மேளன நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதோடு போட்டியை நடத்துவதற்கான கோரிக்கை ஏற்கனவே விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்புதல் சவூதி அரேபியாவில் எதிர்வரும் டிசம்பரில் நடைபெறவுள்ள பிஃபா கழக உலகக் கிண்ண கால்பந்து தொடரில் சாஃப் நிர்வாகத்தால் எடுக்கப்படவிருப்பதாக



இலங்கை கால்பந்து சம்மேளன தலைவர் உமர் ஜஸ்வான் தெரிவித்துள்ளார்.

இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு, பாகிஸ்தான், பூட்டான் நாடுகள் இந்தத் தொடரில் பங்கேற்க விருப்பத்தை வெளியிட்டுள்ளன. இந்தத் தொடருக்கான வீரர்கள் தேர்வுக்கு எதிர்வரும் ஜனவரியில் வீரர்களின் திறமையை அடையாளம் காணும் வகையில் லீக் போட்டிகளை நடத்தவும் இலங்கை கால்பந்து சம்மேளனம் திட்டமிட்டுள்ளது.

# காசாவில் தற்காலிக போர் நிறுத்தத்திற்கு உடன்பாடு: 50 பணயக்கைதிகள் விடுதலை

## போர் நிறுத்த அமுலுக்கு முன்னரும் காசாவில் தொடர்ந்து தாக்குதல்

காசாவில் நான்கு நாள் தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றுக்கு இஸ்ரேல் அரசாங்கம் மற்றும் ஹமாஸ் அமைப்புக்கு இடையே உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதன்போது ஹமாஸ் போராளிகளால் பிடிக்கப்பட்டிருக்கும் 50 பணயக்கைதிகள் விடுவிக்கப்படவிருப்பதோடு அதற்கு பகரமாக இஸ்ரேல் சிறையில் இருக்கும் குறைந்தது 150 பலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர். இந்தப் போர் நிறுத்தக் காலத்தில் காசாவுக்கு உதவிகள் செல்லவும் அனுமதிக்கப்படவுள்ளது.

நேற்று போர் நிறுத்தத்திற்கான உடன்பாடு எட்டப்பட்டபோதும் அது இன்று (23) வியாழக்கிழமையே அமுலுக்கு வரவிருக்கும் நிலையில் இஸ்ரேல் நேற்றைய தினத்திலும் காசா மீது சரமாரித் தாக்குதல்களை நடத்தியது. எனினும் போர் நிறுத்தம் ஒன்று ஏழு வாரங்களுக்கு மேல் நீடிக்கும் இஸ்ரேலின் தாக்குதலில் வேதனையை சந்தித்து வரும் காசா மக்களுக்கு பெரும் ஆறுதலாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டாரின் மத்தியஸ்தத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை மூலமே இந்தப் போரில் முதல் முறை உடன்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளது. இந்தப் போர் நிறுத்தத்தை உலக நாடுகள் வரவேற்றுள்ளன.

இந்தப் போர் நிறுத்தம் மேலும் நீடிக்கப்படுவதற்கும், மேலும் பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவதற்கும் வாய்ப்பு இருப்பதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவுக்குள் ஊடுருவி நடத்தி தாக்குதலின்போதே ஹமாஸ் மற்றும் பலஸ்தீன போராளிகள் சுமார் 240 பேரை பணயக்கைதிகளாக பிடித்தனர். முன்னதாக நான்கு பணயக்கைதிகளை அந்த அமைப்பு விடுவித்திருந்தது.

போர் நிறுத்தம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் நேரம் விரைவில் அறிவிக்கப்படவிருந்ததோடு முதலாவது பணயக்கைதிகள் இன்று விடுவிக்கப்படவுள்ளனர்.

நான்கு நாள் போர் நிறுத்தத்தில் ஒரு நாளில் குறைந்தது 10 பணயக்கைதிகள் வீதம் மொத்தம் 50 பெண்கள் மற்றும் சிறுவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர் என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு அப்பால் ஒரு நாளைக்கு பத்து பணயக்கைதிகள் விடுவிக்கப்படும் வகையில் போர் நிறுத்தம் முடியுமான காலம் வரை நீடிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் விடுவிக்கப்படும் பலஸ்தீன கைதிகள் தொடர்பில் விபரம் வெளியிடப்படாதபோதும், இஸ்ரேலிய நீதி அமைச்சு விடுவிக்கப்படக் கூடிய 300 பலஸ்தீன கைதிகளின் பெயர் பட்டியலை வெளியிட்டது.

ஹமாஸ் வெளியிட்ட அறிவிப்பில் 50 பணயக்கைதிகளுக்கு பகரமாக இஸ்ரேலிய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 150 பலஸ்தீன பெண்கள் மற்றும் சிறுவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் போர் நிறுத்தத்தின் மூலம் மனிதாபிமான, மருத்துவ மற்றும் எரிபொருள் உதவிகளை ஏற்றிய நூற்றுக்கணக்கான ட்ரக் வண்டிகள் காசாவுக்குள் அனுமதிக்கப்படவுள்ளன என்றும் அந்த அமைப்பு தெரிவித்தது.

நான்கு நாள் போர் நிறுத்தத்தின் போது இஸ்ரேல் எந்தத் தாக்குதலையும் நடத்தாது, யாரையும் கைது செய்யாது என்று ஹமாஸின் அறிக்கை கூறுகிறது.

"நான்கு நாள் தற்காலிக போர் நிறுத்தத்தின் போது, தெற்கு காசாவில் விமானங்கள் பறக்க முற்றிலுமாகத் தடை இருக்கும். வடக்கு காசாவில் ஒவ்வொரு நாளும் ஆறு மணி நேரம் இந்தக் கட்டுப்பாடு அமுலில் இருக்கும்" என்று ஹமாஸ் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

காசாவின் வான்வெளி முழுவதும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஹமாஸ் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலில் 1,200 பேர் கொல்லப்பட்டது தொடக்கம் காசாவில்



முழு முற்றுகையை செயற்படுத்திய இஸ்ரேல் அங்கு இடைவிடாது தாக்குதல்களை முன்னெடுத்து வருகிறது. போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்ட பின்னரும் கூட இஸ்ரேலிய இராணுவம் கடந்த செவ்வாய் இரவு மற்றும் நேற்றுக் காலையிலும் தாக்குதல்களை நடத்தியது. இதில் குறைந்தது 100 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேபோன்று ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் தாக்குதல்கள் இடம்பெற்றன.

மத்திய காசாவின் நுஸைரத் முகாமில் நேற்று இடம்பெற்ற தாக்குதல்களில் ஒன்பது பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது. வடக்கில் ஜபலியா முகாம் மீது இடம்பெற்ற தாக்குதல்களில் மேலும் 60 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

போர் ஆரம்பித்தது தொடக்கம் காசாலில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 14,000ஐ தாண்டியுள்ளது. இதில் 40 வீதமானவர்கள் சிறுவர்களாவர்.

போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளில் கட்டாரின் தலைமை பேச்சுவார்த்தையாளரான, வெளியுறவு அமைச்சகத்தின் இணை அமைச்சரான முஹமது அல் குலைபி கூறியதாவது, "போர் நிறுத்தம் என்பது எந்தத் தாக்குதல்களும் இல்லை. எந்த இராணுவ நடவடிக்கைகளோ, எந்த விரிவாக்கங்களோ எதுவும் இல்லை" என்றார். இந்த உடன்பாடு பிரதான உடன்படிக்கை ஒன்று மற்றும் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றுக்கு வழிவகுக்கும் என்றும் அதுவே எமது நோக்கமாகும் என்றும் முஹமது அல் குலைபி குறிப்பிட்டார்.

### "என்ன போர் நிறுத்தம் இருக்க முடியும்?"

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்திற்கு இடையிலான 75 ஆண்டு முறுகலில் அதிக அழிவுகளை ஏற்படுத்திய மோதலுக்குப் பின்னர் அமைதியை நோக்கிய பாதையில் முதல் படியாக இந்த உடன்படிக்கை அமையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஏழு வாரங்கள் இடம்பெற்ற அழிவுகள் மற்றும் உயிரிழப்புகள் உலகெங்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. 2.3 மில்லியன் மக்கள் வசிக்கும் காசாவில் பாரிய மனிதாபிமான பேரழிவுக்கு இந்தப் போர் வழிவகுத்துள்ளது.

"எமக்கு இத்தனை நிகழ்ந்த பின்னர் என்ன போர் நிறுத்தம் இருக்க முடியும்? நாம் அனைவரும் இறந்த மனிதர்கள்" என்று இஸ்ரேலிய வான் தாக்குதலில் தனது மருமகன் மற்றும் மருமகளை இழந்த மோனா என்ற பெண் குறிப்பிட்டார். "இது நாம் இழந்தவற்றை மீண்டும் பெற்றுத்தராது, எமது காயங்களை அல்லது நாம் சிந்திய கண்ணீரை ஆற்றாது" என்றார்.

மறுபுறம் காசாவில் பிடிக்கப்பட்டிருப்பதாக நம்பப்பபடும் தனது 13 வயது பேத்தி திரும்பி வரும் வரை இந்த போர் நிறுத்த செய்தியை நம்பப்போவதில்லை என்று இஸ்ரேலின் கமலியா ஹொடர் இஷாய் தெரிவித்துள்ளார்.

இந்தப் போர் நிறுத்தம் தமது பரந்த திட்டத்தை தடுக்காது என்று இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இரு தரப்பும் தெரிவித்துள்ளது. "நாம் போரில் ஈடுபட்டுள்ளோம். எமது இலக்கு எட்டப்படும் வரை போரைத் தொடர்வோம். ஹமாஸை ஒழிப்போம், அனைத்து பணயக்கைதிகளையும் மீட்போம் மற்றும் காசாவில் உள்ள எந்த அமைப்பும் இஸ்ரேலை அச்சுறுத்த முடியாது என்பதை உறுதி செய்வோம்" என்று பதிவு செய்யப்பட்ட செய்தி ஒன்றை வெளியிட்டு நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "போர் நிறுத்தம் ஒன்று எட்டப்பட்ட உடன்படிக்கையை நாம் அறிவித்தபோதும், எமது விரல் தொடர்ந்தும் துப்பாக்கி விசையிலேயே இருக்கிறது என்றும் எமது வெற்றிகர போராளிகள் எமது மக்களை பாதுகாப்பது மற்றும் ஆக்கிரமிப்பாளர்களை தோற்கடிப்பதில் விழிப்புடன் உள்ளனர் என்றும் உறுதி அளிக்கிறேன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை காசாவின் வட பகுதியில் 3 மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளை வேறிடங்களுக்கு மாற்ற உலக சுகாதார அமைப்பு திட்டமிட்டுள்ளது.

ஆனால் எங்கும் பாதுகாப்பு இல்லை என்பதால் நோயாளிகளைப் பத்திரமாகப் பாதுகாப்பது எப்படி என்ற கேள்வி எழுந்துள்ளது.

அல் ஷிபா, இந்தோனேசியா மற்றும் அல் அஹ்லி ஆகிய மருத்துவமனைகளைச் சேர்ந்த ஊழியர்கள் உதவி கோரியிருப்பதாக உலக சுகாதார அமைப்பு கூறியது. மருத்துவமனைகளுக்குள்ளே இருந்தால் பிழைக்க வாய்ப்பே இல்லை என்று அவர்கள் அஞ்சுகின்றனர்.

காசாவின் மிகப்பெரிய அல் ஷிபா மருத்துவமனையின் சில பகுதிகள் இஸ்ரேலின் வான் தாக்குதலில் நாசமாகிவிட்டன. முழுமையாக முடங்கிக் கிடக்கும் வட பகுதி சுகாதார நிலையங்களில் அடைக்கலம் நாடுவோர் கூட்டம் நிரம்பி வழிகிறது.

தெற்கே உள்ள மருத்துவமனைகளில் நோயாளிகள் கூட்டம் நிரம்பி உள்ளது. மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நீடிக்கிறது.

# இஸ்ரேலுடனான உறவை துண்டிக்க தென்னாபிரிக்க எம்.பிக்கள் ஆதரவு

தென்னாபிரிக்காவில் உள்ள இஸ்ரேலிய தூதரகத்தை மூடுவது மற்றும் அதனுடனான இராஜதந்திர உறவை இடைநிறுத்துவது தொடர்பில் தென்னாபிரிக்க பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைத்துள்ளது. காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் தொடர்பிலேயே இந்த பிரேரணை கொண்டுவரப்பட்டது.

எனினும் ஜனாதிபதி சிரில் ரமபோசா அரசே இதனை செயற்படுத்துவது தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் பெற்றிருப்பதால்



இந்த வாக்கெடுப்பு ஓர் அடையாளமாகவே பார்க்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக 248 வாக்குகள் கிடைத்ததோடு 91 வாக்குகள் எதிராக பதிவாகின. தென்னாபிரிக்காவுக்கான இஸ்ரேலிய தூதுவரை இஸ்ரேல் ஆலோசனைக்காக திரும்ப அழைத்துக் கொண்ட நிலையிலேயே இந்த வாக்கெடுப்பு இடம்பெற்றது.

முற்றுகையில் உள்ள காசாவில் இஸ்ரேல் போர் குற்றம் மற்றும் இனப்படுகொலையில் ஈடுபடுகிறது என தமது நாடு நம்புவதாக ரமபோசா குறிப்பிட்டார்.

தென்னாபிரிக்கா 2018 தொடக்கம் இஸ்ரேலுக்கு தூதுவரை நியமிக்கவில்லை என்பதோடு, பலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டை தொடர்ந்து எடுத்து வருகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 23ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# நோர்வூட் பிரதேச சபை

## 2024ம் ஆண்டிற்கு விநியோகஸ்தர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

கீழ்க்காட்டப்பட்டுள்ள பொருட்கள், சேவைகள் வழங்குபவர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் 2024.01.01ம் திகதி தொடக்கம் 2024.12.31ம் திகதி வரையான காலப்பகுதிக்கு பதிவு செய்து கொள்வதற்காக தகைமையுடைய விநியோகஸ்தர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள், முகவர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சகல விண்ணப்பப்படிவங்களும் 2023.12.22ம் திகதிக்கு முன் **"செயலாளர், நோர்வூட் பிரதேச சபை, டியன்சின் பசார், பொகவந்தலாவ"** என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலின் மூலம் அல்லது நேரில் கொண்டு வந்து கையளிக்கலாம். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"2024ம் ஆண்டிற்கான விநியோகஸ்தர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்"** எனக் குறிப்பிடப்பட வேண்டும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சேவைகள் வழங்கல் மற்றும் பொருட்கள் விநியோகத்திற்காக தனித்தனியே விண்ணப்பித்தல் வேண்டும்.

**விநியோகஸ்தர்கள்**

| வகை இல | விபரம் | மீள் செலுத்தப் படாத பதிவுக் கட்டணம் (ரு) |
|---|---|---|
| 01. | எல்லா வகையான காகிதாதிகள், இறப்பர் முத்திரைகள் | 1,000.00 |
| 02. | ஹாட்வெயார் பொருட்கள் மற்றும் நிறப்பூச்சுக்கள் (எல்லா வகையான ஹாட்வெயார் பொருட்களும், நிறப்பூச்சுக்கள் மற்றும் பளபளப்பாக்கும் திரவியம் பொலிஷ் முதலியன) | 1,000.00 |
| 03. | நலம் காக்கும் மற்றும் சுகாதார சேவைக்குத் தேவையான உபகரணங்கள் (மழை மேலங்கி, பூட்ஸ், பிளாஸ்டிக் வாளிகள், தும்புத்தடி, ஈக்கிள், குப்பை அகற்றுவதற்குத் தேவையான கைவண்டி, பங்கசு கொல்லிகள் மற்றும் ஏனைய பொருட்கள்) | 1,000.00 |
| 04. | வீதி மற்றும் கட்டிடப்பொருட்கள் (மெட்டல் கற்கள், கருங்கல், சீமெந்து, மணல், செங்கற்கள், ஓடுகள், சுண்ணாம்பு முதலியன) | 1,000.00 |
| 05. | வாகன உதிரிப்பாகங்கள் (மின்கலம், டயர், டியூப் மற்றும் சகல விதமான உதிரிப்பாகங்கள்) | 1,000.00 |
| 06. | காரியாலய தளபாடங்கள் (மேசை, நாற்காலி,அலுமாரிகள், கோவைகள் வைக்கும் அலுமாரி, இரும்பு அலுமாரி, மற்றும் ஏனைய தளபாடங்கள்) | 1,000.00 |
| 07. | காரியாலய உபகரணங்கள் (நிழற்பிரதி இயந்திரம், மேசைக் கணணி, மடிக்கணணி, கணணி உதிரிப்பாகங்கள், தொலைநகல் இயந்திரம், மற்றும் ஏனையன) | 1,000.00 |
| 08. | வீதி விளக்கு பொருட்கள்,பாதுகாப்புப் பட்டி மற்றும் சகல விதமான மின் பொருட்கள் | 1,000.00 |
| 09. | அனுமதி பத்திர இலக்கத் தகடுகள் | 1,000.00 |
| 10. | விளையாட்டு உபகரணங்கள் (கரம், செஸ், கிரிக்கெட், உதைப்பந்து, வலைப்பந்து மற்றும் கரப்பந்து ஆகியவற்றுக்கு தேவையான உபகரணங்கள் ஏனையன) | 1,000.00 |

**சேவைகள்**

| வகை இல | விபரம் | மீள் செலுத்தப் படாத பதிவுக் கட்டணம் (ரு) |
|---|---|---|
| 11. | அச்சக சேவைகள் மற்றும் புத்தகங்கள் கட்டும் வேலைகள் | 1,000.00 |
| 12. | மோட்டார் வாகனம், இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் சேவைகள் | 1,000.00 |
| 13. | காரியாலய உபகரணங்களைப் பழுது பார்த்தல் (போட்டோ கொப்பி இயந்திரம், பிரதி எடுத்தல் இயந்திரம், கணினி இயந்திரம், தொலைநகல் இயந்திரம் முதலியன) | 1,000.00 |
| 14. | அலுவலக தளபாடங்கள் பழுதுபார்த்தல். | 1,000.00 |
| 15. | கட்டிட வரைபட வரைஞர்களை (Draftsman) பதிவு செய்தல் (கட்டிட வரைபடங்கள் கீறுவதற்கு) | 1,000.00 |

**ஒப்பந்தக்காரர்கள்**

| வகை இல | விபரம் | மீள் செலுத்தப் படாத பதிவுக் கட்டணம் (ரு) |
|---|---|---|
| 16. | ரூ.100,000.00 வரை | 2,000.00 |
| 17. | ரூ.100,000.00 முதல் ரூ.1,000,000.00 | 5,000.00 |
| 18. | ரூ.1,000,000.00 ற்கு மேலதிகமாக | 8,000.00 |
| 19. | இயந்திர உபகரணம் வழங்குநர் (Backhoe Loader, Lorries & Wacker Machine) | 5,000.00 |

**குறிப்பு :-**
விநியோகஸ்தர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் தங்களை பதிவுசெய்யும் போது விண்ணப்பப்படிவத்துடன் வியாபார பதிவுச்சான்றிதழின் பிரதியினையும், ஒப்பந்தக்காரர்கள் விண்ணப்பப்படிவத்துடன் ICTAD பதிவு மற்றும் அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்டிருப்பதற்கான ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பத்துடன் மீளச் செலுத்தப்படாத மேற்குறிப்பிட்ட பதிவுத் தொகையினை "செயலாளர், நோர்வூட் பிரதேச சபை" என்ற பெயருக்கு காசாக /காசோலையாக விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட பதிவுக்கட்டணங்கள் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**மேலதிக தகவல்களுக்கு செயலாளரை தொடர்பு கொள்ளவும்.**
**தொலைபேசி இலக்கம் :- 052-2267678 / 0714400365**

**K. முரளிதரன்,**
**செயலாளர்,**
**நோர்வூட் பிரதேச சபை**

# ஆதார வைத்தியசாலை-கல்முனை (வடக்கு)

## 2024 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

கீழ்வரும் பொருட்கள் சேவைகளைப் பெற வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இதில் உள்ள மாதிரிக்கு ஏற்ப சுயமாக தயாரித்து பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைபதிவுசெய்தல் 2024''என எழுதப்பட்டு பணிப்பாளர், ஆதார வைத்தியசாலை, கல்முனை (வடக்கு) என்ற முகவரிக்கு 2023.12.15 திகதி அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| தொகுதி இல. | பொருட்களின் விபரம் |
|---|---|
| G 1 | எல்லா வகையான காகதாதிகளும் |
| G 2 | அலுவலக தளபாடங்கள் (இரும்பு, மரம், பிளாஸ்டிக் மற்றும் ஏனையவை |
| G 3 | கணனிகள், பிரின்ரஸ், நிழற்பிரதி இயந்திரம் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்கள் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள் |
| G 4 | கட்டிடப் பொருட்கள்<br>- நீர்க்குழாய் மற்றும் மின் இணைப்பு பொருட்கள்<br>- கண்ணாடி மற்றும் அலுமினிய பொருட்கள்<br>- இரும்பு மற்றும் ஏனைய பொருட்கள் |
| G 5 | வைத்திய உபகரணங்கள், ஆய்வுகூட பரிசோதனை திரவியங்கள் (Reagents), எக்ஸ்றே மற்றும் ஸ்கான் போன்றவற்றுக்கான காகிதாதிகள் |
| G 6 | எல்லா வகையான நுகர்வுப் பொருட்களும் (Consumable Items) |
| G 7 | - வாகன பற்றரிகள்<br>- வாகனங்களுக்கான டயர் மற்றும் ரியுப் வகைகள் |
| G 8 | இறப்பர் முத்திரைகள், அறிவித்தல் பலகைகள் மற்றும் குளிசை உறைகள் |
| G 9 | எல்லா வகையான துணிகளும் திரைச்சீலைகளும் |
| G 10 | சப்பாத்துக்களும் சத்திரசிகிச்சைக்கூட சாப்பாத்துக்கள் |
| G 11 | தீந்தை, தீந்தை பூசுவதற்கான உபகரணங்களும் கலவைகளும் தூரிகைகளும் |
| G 12 | வைத்தியசாலை கட்டில்கள், இறப்பர் விரிப்புக்கள், மெத்தைகள், தலையணைகள், கால்தட்டிகள் போன்ற ஏனைய பொருட்கள் |
| G 13 | வளிச்சீராக்கிகள் ,குளிர்சாதனப்பெட்டிகள், சலவை இயந்திரங்கள் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்களும் |
| G 14 | மின் உபகரணங்களும் ஏனையவைகளும் |
| **சேவைகளும் திருத்தங்களும்** | |
| S 1 | வளிச்சீராக்கிகள், குளிர்சாதனப்பெட்டிகள், சலவை இயந்திரங்கள் ஆகியவற்றின் திருத்தங்களும் பராமரிப்பும் |
| S 2 | கணனிகள், பிரின்டர்கள், நிழற்பிரதி இயந்திரம் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்களின் திருத்தம் |
| S 3 | ஆய்வுகூட, சத்திரசிகிச்சை மற்றும் இணைந்த வைத்தியசாலை மருத்துவ உபகரணங்களுக்கான திருத்தங்கள் |
| S 4 | மோட்டார், மின்பிறப்பாக்கிகள் திருத்தமும் பராமரிப்பும் |
| S 5 | வாகன பராமரிப்பு (Vehicle Service) |
| S 6 | வாகன திருத்தங்கள் |
| S 7 | கழிவகற்றல் (Toilet fits) |

| கொள்வனவு | |
|---|---|
| P 1 | வைத்தியசாலையில் பாவனையின் பின்னரான பொருட்கள் (சிரட்டை, சேலையின்போத்தல்கள், போத்தல் குப்பிகள், காட்போட் மட்டைகள், கலன்கள் மற்றும் தண்ணீர் போத்தல் போன்ற பிளாஸ்ரிக் போத்தல்கள்) |

வழங்குநர்களைப் பதிவுசெய்வதற்காக ஒரு தொகுதிக்கு மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1000/= இனை இலங்கை வங்கி கல்முனை கிளையில் ''வைத்திய அத்தியட்சகர் ஆதார வைத்தியசாலை - கல்முனை (வடக்கு)'' எனும் பெயரிலுள்ள கணக்கு இலக்கமான 7040265 எனும் கணக்கில் வைப்பிலிடப்பட்டு அதன் வைப்புச்சீட்டினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். 2024 ஆம் ஆண்டுக்கான பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்கையில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்வதுடன் தேவையேற்படின் இப் பட்டியலுக்கு வெளியில் கொள்வனவு செய்யக்கூடிய அதிகாரம் பணிப்பாளர் அவர்களுக்கு உண்டு. ஏற்கனவே தங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு மாறாக பொருட்களின் தன்மைகளுக்கு ஏற்ப பொருட்களையோ சேவைகளையோ வழங்காவிட்டால் வழங்குநர்களின் பட்டியலிலிருந்து அவர்களை நீக்கும் அதிகாரம் பணிப்பாளர் அவர்களுக்கு உண்டு.

**குறிப்பு:-** வியாபாரப் பதிவு பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள வியாபார நிலையத்தின் பெயருக்கே கொடுப்பனவுக்கான காசோலை வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு - 0672224602**

### மாதிரி விண்ணப்பம்
### விநியோகஸ்தர்கள் பதிவு - 2024
### ஆதார வைத்தியசாலை - கல்முனை (வடக்கு)

1. வியாபார நிறுவனத்தின் பெயர் :-
2. வியாபார நிறுவனத்தின் முகவரி :-
3. தொலைபேசி இலக்கம் :-
4. தொலைநகல் (Fax) இலக்கம் :-
5. வியாபாரப் பதிவு இலக்கம் :-
   (பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
6. வியாபாரத்தின் தன்மை :-
7. பதிவு செய்யப்பட வேண்டிய பொருட்கள்/ சேவைகளின் தொகுதி :-
8. கடன் காலம் (Credit Period ) :

| தொகுதி இலக்கம் | பொருட்கள்/சேவைகள் விபரம் |
|---|---|
| | |

என்னால் மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையென உறுதிப்படுத்துவதுடன் எவையேனும் உண்மையற்றது என நிரூபிக்கப்பட்டால் எனது வழங்குநர்களுக்கான பதிவு இரத்துச் செய்வதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இத்துடன் எனது வியாபார நிறுவனத்தின் பதிவுச்சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்பட்டுள்ளது.

திகதி :-.................................................
விண்ணப்பதாரர் ஒப்பம் :- ..........................
அலுவலக முத்திரை :-...............................

**பணிப்பாளர்,**
**ஆதார வைத்தியசாலை,**
**கல்முனை- வடக்கு.**


சிறு விளம்பரம்









வேலை வாய்ப்பு
வேலை வாய்ப்புகள்/சேவைகள்

நீர் கசிவு நிபுணர்கள் ★ கொங்கிறீட் ஸ்லெப்களில், ★ குளியலறைகளில், ★ மீன் தொட்டிகளில் , ★ சுவர்களில், ★ வீட்டுனுள் தரையில் நீரூற்று எமக்கு சொல்லவும் . பிரச்சினை முடி வுக்கு கொண்டு வரப்படும். நாடளாவிய ரீதியில் சேவை. G L K ENGINEER- I N G 0772500366/ 0719375997. 076081


# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் - அநுராதபுரம்

### மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏலவிற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 08.12.2023 வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க் காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் திகதிகள் - 09.12.2023 & 10.12.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | அநுராதபுரம் - 008 | கெக்கிராவ - 042 | மதவாச்சி - 096 |
|---|---|---|---|
| கிளைகள் | அநுராதபுரம், நொச்சியாகம, அநு/ நுவரவெவவ, தலாவ | கொக்கிராவ, தம்புத்தேகம, எப்பாவல, கல்கிரியாகம, கல்னேவ, மீகலேவா | மதவாச்சி, பதவியா, கெபிதிகொல்லாவ, கஹடகஸ்திகிலிய, கலென்பிந்துனுவெவ, ஹொரொவ்பொத்தான |
| சேவை மையங்கள் | அநுராதபுரம், ரம்பேவ, நச்சதுவ, வில்லாச்சிய, திறப்பனே, மிஹிந்தல, சாலியவெவ | கணேபல்பொல, மரதன்கடவல, புலனேவ, தம்சோபுர, ரஜித ஹந்திய, ராஜங்கனய | பதவி - ஸ்ரீபுர<br>பதவி - பராக்கிரமபுர |

இந்த ஏலங்களை மறுஅறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**அநுராதபுரம்.**
**தொலைபேசி இல. 025-2223035/025-2234870**

www.peoplesbank.lk 1961
PEOPLE'S BANK
Pride of the Nation

CSIAP
THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## கமத்தொழில் அமைச்சு

### பிரதித் திட்டப் பணிப்பாளர்கள் அலுவலகம் - வட மேல் மாகாணம்
### காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

திட்ட இல.: **P163742**

### (தேசிய போட்டிரீதியான விலைமனு)

1. கமத்தொழில் அமைச்சின் காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் செலவுகளை நோக்கியதாக 125 மில்லியன் அமெரிக்க டொலருக்கு இணையான உலக வங்கி – சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (IDA) இருந்து இலங்கை சனநாயகக் சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழான தகுதியுடைய கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களின் பெறுகைக்காக பொருத்தமான மற்றும் தகுதியடைய விலைமனுதாரர்களிடம் இருந்து காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்திட்டத்தின் (CSIAP) சார்பில் கனிஷ்ட திட்ட பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இல. | பொருட்களின் விபரம் | | மீளளிக்காத கட்டணம் (இ.ரூபா) | விலைமனு பிணை: பெறுமதி (இ.ரூபா) | விலைமனு பிணை: செல்லுபடி திகதி |
|---|---|---|---|---|---|
| LK-MOA-333970-GO-RFB /NWP/ DPDO/ in shelters (21)/2023/35 | வ.மே.மா. த்தின் கீழ் நுண் நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் 24 எண்ணிக்கையான மழைக் காப்பிடம் (60sqm), 60 எண்ணிக்கையான நீர் பம்பிகள் (டீசல்) 2", 84 எண்ணிக்கையான நீர் பம்பிகள் (மின்சாரம்) 2", மற்றும் 10 எண்ணிக்கையான உயர் அழுத்த டீசல் நீர் பம்பிகளின் (2") பெறுகை | | 9,000.00 | | 2024 மார்ச் 30 வரை |
| | கூறு 01. நீர் காப்புகள் | 24 | | 216,000.00 | |
| | கூறு 02. 2" நீர் பம்பிகள் (டீசல்) | 60 | | 81,000.00 | |
| | கூறு 03. 2" நீர் பம்பிகள் (மின்சாரம்) | 84 | | 113,400.00 | |
| | கூறு 04. உயர் அழுத்த டீசல் நீர் பம்பிகள் | 10 | | 45,000.00 | |
| LK-MOA-333948-GO-RFB /NWP/ DPDO/ Drip irrigation (07)/2023/32 | 40 எண்ணிக்கையான சொட்டு நீர்ப்பாசனம் (1/4 ac), 25 எண்ணிக்கையான பெர்டிகேஷன் உடன் சொட்டு நீர்ப்பாசனம் (1/2 ac), 72 எண்ணிக்கையான தெளிப்பு நீர்ப்பாசனம் (1/4 ac), 04 எண்ணிக்கையான மூடுபனி பாசனத்துடன் பொலித்தீன் கூடாரம் (1000 ft2), 11 எண்ணிக்கையான சூரிய நீர்ப்பம்பிகளின் பெறுகை | | 9,000.00 | | |
| | கூறு 01. 1/4 ac சொட்டு நீர்ப்பாசனம் (HDPE) | 40 | | 150,000.00 | |
| | கூறு 02. பெர்டிகேஷன் உடன் சொட்டு நீர்ப்பசானம் (1/2 ac) | 25 | | 150,000.00 | |
| | கூறு 03. 1/4 ac), மினி தெளிப்பு ஜெட் நீர்ப்பாசன அமைப்புகள் | 72 | | 297,000.00 | |
| | கூறு 04. 1000 ft2 மூடுபனி பாசனத்துடன் பொலித்தீன் கூடாரம் | 04 | | 72,000.00 | |
| | கூறு 05. சூரிய நீர்ப்பம்பிகள் | 11 | | 115,000.00 | |

3. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) முலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்திற்காக எந்த ஒரு SOE (அரசுக்கு சொந்தமான வியாபார முயற்சிகள் - சபைகள், கூட்டுத்தாபனம், பணியகம் முதலியவை) விலைமனு மேற்கொண்டால், அப்போது அவை கூறப்பட்ட உட்பிரிவின் கீழ் தமது தகுதியை நிருபிக்க உலக வங்கி மற்றும்/ அல்லது ஆவணத்தின் IPF கடன் பெற்றவர்களுக்கான பெறுகை ஒழுங்குமுறைகளின் 3.23 (டி) உட்பிரிவுடன் CSIAP இன் கீழ் ஒப்பந்தம் வழங்குவதற்கு ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு உலக வங்கியிடம் இருந்து பெறப்பட்ட "ஆட்சேபனை இல்லா" கடிதத்தை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அப்படி இல்லாத பட்சத்தில், எந்த கேள்வியும் இன்றி பதிலளிக்காத விலைமனுவாகக் கருதி அவர்களின் விலைமனு நிராகரிக்கப்படும்.
5. விலைமனுதாரர்கள் குறித்த விலைமனு ஆவணத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகேட்கலாம் மற்றும்/ அல்லது அதில் வழங்கப்பட்ட ஒரே விலைமனுவில் ஒன்று அல்லது மேற்பட்ட கூறுகளுக்காக கூறுவிலையிட குறிப்பிட்டிருந்தாலும், விலைமனுதாரரின் குறிப்பிட்ட அளவுகோல்கள், நிதி மற்றும் வேறு திறன் வரம்புகளுக்கு அமையவே தேர்வு மேற்கொள்ளப்படும்.
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் குருநாகல், யக்கபிட்டிய வீடமைப்பு, மிஹிந்து மாவத்தை, இல. 51, பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம் (NWP), ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதித் திட்ட பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ.பே. இல. 037-2227950, தொலைநகரல் இல. 037-2227950, மின்னஞ்சல் - dpdcsiapnwp@gmail.com) என்பதோடு 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை 2023 நவம்பர் 23 ஆம் திகதி தொடக்கம் 2023 டிசம்பர் 15 ஆம் திகதி வரை வேலை நாட்களில் அதே இடத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
7. 2023 நவம்பர் 23 ஆம் திகதி தொடக்கம் 2023 டிசம்பர் 15 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 14:00 மணி வரை ரொக்கப்பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி (தொகைக்காக மேலுள்ள அட்டவணையை பார்க்கவும்) பந்தியில் குறிப்பிடப்பட்ட முகவரியில் பிரதித் திட்டப் பணிப்பாளருக்கு நிறுவன முகவரி அச்சிடப்பட்ட அசல் கடிதத் தாளில் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து தகுதியுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத்தை வாங்க முடியும்.
8. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட இடத்தில் 2023 டிசம்பர் 08 ஆம் திகதி 10.00 மணிக்கு நடத்த ஏற்பாடாகியுள்ளது.
9. விலைமனுக்களானது மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் திகதிக்காக விலைமனு ஆவணத்தில் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் நிபந்தனையற்ற விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். குறிப்பிடப்பட்டவாறான செல்லுபடியான விலைமனு பிணை ஒன்று இல்லாத எந்த ஒரு விலைமனுவும் பதிலளிக்காததாக கருத்தில் கொள்ளப்படுவதோடு எந்த விசாரணையும் இன்றி நிராகரிக்கப்படும்.
10. விலைமனு ஆவணங்களின் அனைத்துப் பக்கங்களிலும் விலைமனுதாரர் கையொப்பமிட்டு அவரது முத்திரை வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. விலைமனுக்களை அசல் மற்றும் பிரதி என சமர்ப்பித்தல் வேண்டும். அசல் மற்றும் பிரதி இரண்டும் வெவ்வேறு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் மூடப்பட்டு முறையே "அசல்" மற்றும் "பிரதி" என குறிப்பிடுதல் வேண்டும். இரு கடித உறைகளையும் முத்திரை பொறிக்கப்பட்ட ஒற்றைக் கடித உறையில் மூடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலை விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கத்தை எழுத வேண்டும்.
12. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2023 டிசம்பர் 15ஆம் திகதி 14.00 மணி (பி.ப. 2.00) அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், பெறுகைக் குழு, பிரதித் திட்ட பணிப்பாளரின் அலுவலகம் (வட மேல் மாகாணம்), காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்திட்டம், இல. 51, மிஹிந்து மாவத்தை, யக்கபிட்டிய வீடமைப்பு, குருநாகல் என்ற முகவரிக்கு இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுவது அல்லது பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.
13. கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் 2023 டிசம்பர் 15 ஆம் திகதி 14:00 மணிக்கு (பி.ப. 2.00) மூடப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும். அரசாங்கத்தின் அறிவித்தல் காரணமாக மேல் குறிப்பிடப்பட்ட விலைமனுக்களை மூடப்படும் அலுவலகம் மூடப்பட்டால், விலைமனுக்களை மூடப்படும் திகதி உடன் அடுத்து வரும் வேலை நாளில் அதே இடத்தில் மற்றும் அதே நேரத்தில் திறக்கப்படும்.
14. திட்ட பெறுகைக் குழுவின் முடிவு இறுதி மற்றும் முடிவானதாகும். ஒற்றை, எந்த ஒரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் சொந்த விருப்பில் நிராகரிப்பதற்கு பெறுகைக் குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதித் திட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (வட மேல் மாகாணம்),**
**காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**இல. 51, மிஹிந்து மாவத்தை,**
**யக்கபிட்டிய வீடமைப்பு, குருநாகல்.**
**திகதி: 2023.11.23**

## மக்கள் வங்கி

# பதுளை பிராந்தியம்

### மீட்கப்படாத தங்க நகை அடகுப் பொருட்கள் ஏலவிற்பனை

மக்கள் வங்கியின் பதுளை பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழ்க்காணும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 31.08.2022 ம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு 08.12.2023 ம் திகதி வரை மீட்கப்படாத அடகு நகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் கீழ்க்காணும் இடங்களில் மு.ப. 9.00 மணி முதல் ஏலத்தில் விற்கப்படும்.

**09.12.2023 மற்றும் 10.12.2023 ஆகிய திகதிகளில் ஏலம் நடைபெறும்**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | பதுளை கிளைத் தொகுதியில் | பண்டாரவளைக் கிளைத் தொகுதியில் |
|---|---|---|
| கிளைகள் | பதுளை மஹியங்கனை, பசறை, ஹாலிஎலை, கந்தகெட்மடிய, லுனுகலை கிராந்துருகோட்டை பதுளை முதியங்கனை | வெளிமடை, கெப்பெட்டிபொல, ஊவாபரணகம் பொரலந்தை, பண்டாரவளை, ஹப்புத்தளை, கொஸ்லந்தை, ஹல்தும்முல்லை, தியத்தலாவை |
| சேவை மையங்கள் | பதுளை, வெலேகடை, பதுளை பஸார் வீதி, மடுல்சீமை, தெமோதரை, எட்டம்பிட்டிய, மீகஹகிவுல, நவமெதகம, பதுளை லோவர் வீதி, பதுளை மாவட்ட செயலக காரியாலயம், ஊவா மாகாண சபை | வெளிமடை நகரம், லூணுவத்த, மெதவெல, போகஹகும்புர, பண்டாரவளை நகரம், பண்டாரவளை சிங்ஹகிரி, பெரஹெட்டிய, பல்லகெட்டுவ |

மேற்குறிப்பிடப்பட்டபடி நடைபெறவுள்ள இவ் ஏலவிற்பனையை மீள் அறிவித்தல் எதுவுமின்றி வங்கியின் விருப்பத்திற்கேற்ப இரத்துச் செய்யவோ ஒத்தி வைக்கவோ ஒன்றிணைந்து நடாத்தவோ அல்லது ஏலவிற்பனை நடைபெறும் இடத்தை மாற்றியமைக்கவோ நடவடிக்கைகளை மேற்கொள்ள வங்கிக்கு அதிகாரமுள்ளது.

**பிரதேச முகாமையாளர் மக்கள் வங்கி, பிரதேச பிரதான அலுவலகம் இல. 24, ஆர்.எச். குணவர்த்தன மாவத்தை, பதுளை.**
**தொலைபேசி எண்கள்**
**055-2222165 055-2222342 055-2223067**

PEOPLE'S BANK
Pride of the Nation

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - பொலன்னறுவை

மக்கள் வங்கி பொலன்னறுவை பிராந்திய தலைமைக் காரியாலயத்திற்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 08.12.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க் காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 09.12.2023 மற்றும் 10.12.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | பொலன்னறுவை கிளை | தெஹியத்த கண்டிய கிளை |
|---|---|---|
| கிளைகள் | பொலன்னறுவை, ஹிங்குராகொட, ஹபரண, மெதிரிகிரிய, பொலன்னறுவை நகரக்கிளை, பக்கமுன, தம்பாளை | அரலகண்வில, வெலிகந்தை, தெஹியத்த, கண்டிய |
| சேவை மையங்கள் | கதுறுவெல, தியசென்புர, வைத்தியசாலை வளாகம், தியபெதுமை, லங்காபுர, ஜயந்திபுர | மன்னம்பிட்டிய, செவனபிட்டிய, சிறிபுர, சந்துன்புர |

இந்த ஏலங்களை மறுஅறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி தலைமைக் காரியாலயம்**
**புதிய நகர், பொலன்னறுவை**
**தொலைபேசி இல. 027-2223900, 027-2224404, 027-2225760, 027-2226626, 027-2226625**

PEOPLE'S BANK
Pride of the Nation

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# கேள்விக்கான அழைப்பு

### இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு - 10
### (சுகாதார அமைச்சு)

## சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்களை கொள்வனவு செய்தல்

01. 2023.12.07 மு.ப. 10.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்களை வழங்குவதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| உருப்படி இல. | உருப்படி | இணைப்பு இலக்கம் | உருப்படி அளவு | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|
| 01 | Endo.Stone Retrievel Basket | SG/10/2023/08 | 25 | 1000.00 |
| 02 | Adjustable Tracheostomy Tube | SG/10/2023/01 | 90 | 1600.00 |
| 03 | Dual Chamber ICD | SG/19/(60 D) /2023 | 03 | 3000.00 |
| 04 | CRT - P Generator | SG/19 (CP)/2023 | 09 | 5000.00 |
| 05 | CRT - D Device | SG/19/(60 CD)/2023 | 03 | 4000.00 |

02. இலங்கை சந்தைக்கு உபகரணங்களை உற்பத்தி செய்து வழங்கும் உற்பத்தியாளர்களால் பெயர் குறிப்பிடப்படும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மட்டும் இக்கேள்வி அழைப்பிற்காக சமுகமளிப்பதற்கு தகைமை பெறுவர்.

03. கேள்வி ஆவணங்களை 2023.11.23 முதல் 2023.12.06 வரை வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப.3.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு மேலே தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

(தொலைபேசி இலக்கம் - 0112691111 நீடிப்பு - 2722)

04. பொறியிடப்பட்ட கேள்விகள் 2023.12.07 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைப்பதாயின், இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படும்.

05. மேலதிக தகவல்கள் தேவைப்படின் இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளரிடம் விசாரித்து பெற்றுக்கொள்ளலாம்.

**(தொ.பெ.இலக்கம் - 0112694595)**
**தலைவர்**
**பிரதேச பெறுகைக்குழு**
**இலங்கை தேசிய வைத்தியசாலை**
**கொழும்பு - 10**

# கேள்வி அழைப்பு

## விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்குச் சொந்தமான கீழ்க்காணும் வேலைக்காக உள்ளூர் கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E |
|---|---|---|---|---|---|---|
| தொடர் இல. | வேலை விபரம் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்ய வேண்டிய கேள்விப் பிணை மற்றும் கேள்வி செல்லுபடியாக வேண்டிய காலம் | | | கேள்வி ஆவணக் கட்டணம் |
| | | | காசு மூலம் | வங்கிப் பிணை மூலம் | பிணை செல்லுபடி காலம் | |
| 01 | விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்குச் சொந்தமான சீத்தா எலிய அரச உருளைக்கிழங்கு விதை உற்பத்திப் பண்ணைக்கு விசிரும் நீர் வழங்கல் அமைப்பை உருவாக்குவதற்குத் தேவையான பொருட்களை கெள்வனவு செய்தல் | SPD/2/5/4/63(2023) | 13,800.00 | 27,500.00 | 2024.03.15 | ரூ. 2,000.00 |

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேற்படி விடயத்துடன் சம்பந்தப்பட்டு பெற்றுக் கொண்ட கேள்விப் படிவத்தைப் பாவித்து கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன் விவசாயத் திணைக்களத்தின் காசாளருக்கு மீளளிக்கப்படாத மேற்படி E நிரலில் குறிப்பிடப்படும் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை இவ் அலுவலகத்தின் பிரதம நிர்வாக சேவை அதிகாரியிடம் சமர்ப்பித்து 2023.11.24 முதல் 2023.12.14 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பொறியிடப்பட்ட சகல கேள்விகளையும் "தலைவர், பிரதேச பெறுகைக் குழு விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

சகல கேள்விதாரர்களும் மேற்படி அட்டவணையின் D இன் கீழ்க் குறிப்பிடப்படுமாறு பிணைத் தொகையை வைப்புச் செய்தல் வேண்டும். அத்துடன் வங்கிப் பிணை முறியின் மூலம் அதனை இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2023.12.15 பிற்பகல் 2.00 இற்கு முடிவடைவதுடன் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அவ் வேளையில் கேள்விகள் சமர்ப்பித்தவர்களுக்கு அல்லது அவரது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம்,**
**விவசாயத் திணைக்களம்,**
**பேராதனை.**
**2023.11.23**
**081 - 2388106/122**

### இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/05/ PT/6517(EL) | 01 No. 12 KVA Rated Incoming and Outgoing switchgear Panel | 60,000. | 1000.00 | 2024.01.11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6482(Civil) | 04 Nos. Fender Cell Bodies for Island B/W | 300,000.00 | 3500.00 | 2024.01.11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/ PT/6529(MP) | 24 Nos. Complete Twist Lock Assy for Stinis Spreader Fitted to ZPMC 65T STS Cranes at ECT | 72,000.00 | 1,000.00 | 2024.01.11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6535(MP) | Head Block Twist Lock Assembly of the ZPMC 65 Tons Cranes | 36,000.00 | 1,000.00 | 2024.01.11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT/6536(MP) | Spares for Pintsch Bubenzer BSZ 400/II-JIS CR 73 Rail Clamp | 20,000.00 | 1,000.00 | 2024.01.11ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6538(EL) | Communication Cards for ECT RTG Crane Inverter | 15,000.00 | 1,000.00 | 2024.01.11ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/ PT/6534(EL) | Multifunction Meters for the Medium Voltage Panels of ZPMC Cranes | 15,000.00 | 1,000.00 | 2024.01.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/ PT/6539(MP) | 08 Nos. Main Hoist Wire Rope for 65T STS Cranes at ECT | 240,000.00 | 3,500.00 | 2024.01.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT/6551(MP) | Spares for Multifunction System of ZPMC STS at ECT | 20,000.00 | 1,000.00 | 2024.01.16ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6552(MP) | Trolley Travel Wire Ropes for 50T ZPMC STS at ECT | 60,000.00 | 1,000.00 | 2024.01.16ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6553(MP) | Trolley Sheaves for 50T ZPMC STS Cranes at JCT | 50,000.00 | 1,000.00 | 2024.01.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/23/ PT/05/064 | Spares for Kobelco rK 450, 45 Ton Mobile Crane – CR 26 | 25,000.00 | 1,000.00 | 2023.12.14 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/14/066 | Spares for Terberg Yard Tractors | 45,000.00 | 1,000.00 | 2023.12.14 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/07/055 | Spares for Grove AMZ 131 XT Areal work Platform at JCT 1 & 2 | 30,000.00 | 1,000.00 | 2023.12.14 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/16/063 | 16 Nos. Industrial Tubeless Tyres 21.00 X 25 – 40 PLY | 160,000.00 | 3,500.00 | 2023.12.15 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/11/053 | Marine Quality Paint & Thinner | 200,000.00 | 3,500.00 | 2023.12.15 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/01/065 | 600 PRS Deck Shoes for Year 2024 | 25,000.00 | 1,000.00 | 2023.12.15ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/04/069 | Garbage Bag 48" X 36" 100/KT – 1000 Nos | 43,000.00 | 1,000.00 | 2023.12.18ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/07/059 | 02 Nos. of Thordon SXL Rough Molded Tug – ID 100MM X OD 150MM Length 1000 MM | 40,000.00 | 1,000.00 | 2023.12.18 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொதுஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (பிசிஏ 03 படிவத்தையும்) சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 நவம்பா 24 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக் கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராகக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

# சுத்திகரிப்பு சேவையின் வழங்கலுக்கான கேள்வி அறிவித்தல்

நாடளாவிய ரீதியிலான கிளைகளுடன் புகழ்வாய்ந்த அமைப்புகளுக்கு சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட அனுபவத்தையுடைய சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கிலத்திலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை மீளளிக்கப்படாத கட்டணமாக இ.ரூபா 2000 கட்டணத்துடன் கொழும்ப-03, 269 ஆம் இலக்கத்திலுள்ள அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, 4 ஆம் மாடியின் மனிதவளங்கள் மற்றும் ஒழுங்கமைத்தல் இற்கான பிரதான முகாமையாளருக்கு எழுத்துமூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| விலைமனு சமர்ப்பித்தலின் மூடும் திகதி மற்றும் நேரம் | 2023.12.12 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| விலைமனுவை திறத்தல் | மூடலின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும் |

எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் விலைமனுவொன்றின் பாகமொன்றை காரணமொன்றை வழங்காமல் ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை வங்கியானது கொண்டுள்ளது.

மேலதிக தகவலுக்காக - 011-7722879/ 011-7722876 ஆகிய இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளவும்.

**பெறுகைக் குழு,**
**அரசஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல.: 269, காலி வீதி, கொழும்பு-03.**

# தேசிய உப்பு நிறுவனம்

## (அரசாங்கத்திற்கு உரிமையுள்ள கம்பனி)

